கல்கி

KALKI 16-9-79
75 காசு



காதல் சிறப்பிதழ்

சுடர் விட்டு பிரகாசிக்கட்டும்!
மனம் பூரிக்கட்டும்!!

போற்றத்தக்க பெருமை வாய்ந்த
உங்கள் அழகு. அது சாரதா'ஸின்
பட்டுப் புடவையுடன் சேர்ந்து
சுடர்விட்டு பிரகாசிக்கட்டும்.
எந்த விசேஷமானாலும் சரி,
உங்கள் மனமும் பூரிக்கட்டும்
பிரகாசமான அழகுவாய்ந்த
சாரதாஸ் பட்டுப் புடவைகள்
உங்கள் மனதை
பூரிக்கச் செய்யும்



சாரதா'ஸ்

(முகூர்த்தப் பட்டு புடவைகளுக்கு அதிர்ஷ்டமான இடம்)

தன் பில்டிங்
மவுண்ட் ரோடு
சென்னை-600 002
போன் : 87177

N.S.B. ரோடு
திருச்சி-620 002
போன் : 27077

Kalki Shopping Page

Kalki Shopping Page



இன்றைய சமுதாயத்தில் காதல்

டாக்டர் ப்ரோமில்லா கபூர், சமூக வியல் நிபுணர். டெல்லியிலும் சுற்றுப்புறத்திலும் சுமார் இருநூறுக்கும் மேற்பட்ட படித்த உத்தியோகத்துக்குப் போகும் பெண்களை 1959ம் வருடம் முதலிலும், பிறகு 1969 லும் பேட்டி கண்டு, காதல், கல்யாணம், பாலுறவு சம்பந்தமாக அவர்களது மன நிலையில் நேர்ந்துள்ள மாறுதல்களைத் தெரிந்து கொண்டு அவற்றின் அடிப்படையில் Love, Marriage and sex என்ற நூலை எழுதியுள்ளார். இவரது நூல் ஆண்டாண்டு காலமாக நாம் நம்பி வந்துள்ள சில மரபுகளை உடைத்தெறிந்து புதிய ஊடுருவல் நோக்குகளைச் சமர்ப்பிக்கிறது. இவற்றை ஏற்பதும் ஏற்காததும் அவரவர் அனுபவ ஞானத்தையும் அறிவாற்றலையும், மனப் பக்குவத்தையும் விருப்பு வெறுப்புக்களையும் பொருத்தது.

'காதலுக்கும் பாலுறவுக்கும் இடையேயுள்ள நோக்கு முறை பத்தாண்டுகளில் மாறுபட்டுள்ளதாக' திருமதி கபூர் குறிப்பிட்டுள்ளார். அவர் கூறுகிறார்:

''திருமணமாகாத நிலையில் பாலுறவு சிறிதேனும் இல்லாத காதலைத்தான் எனது ஆராய்ச்சியின் ஆரம்ப கட்டத்தில் அங்கீகரித்தனர். திருமணமான பின்பு காதலைத் தொடர்ந்து வரும் பாலுறவையும் பலமாக ஆமோதித்தனர். சம்பிரதாயத் திருமணங்களில் மணமான பின்பு பாலுறவைத் தொடர்ந்து வரும் காதலையும் அவர்கள் நிராகரிக்கவில்லை. ஆனால் திருமணத்துக்கு முன்பு காதலனுடனோ, காதல் இல்லாமலோ வரும் பாலுறவை மிகக் கடுமையாக எதிர்த்தனர். திருமணத்துக்குப் பின்பும் காதல் இல்லாத வெறும் பாலுறவை மட்டும் கணவனுடன் கொள்வதைக் கூட அவர்கள் ஆமோதிக்கவில்லை. அதாவது எந்தச் சூழ்நிலையிலும் காதல் இல்லாத பாலுறவு அவர்களால் ஏற்றுக்கொள்ளப்படவில்லை.

ஆனால் காலப் போக்கில் இந்நிலை மாறியுள்ளது. நான்கு வகை உறவையும் அதாவது பாலுறவு இல்லாத காதல், பாலுறவு உள்ள காதல், காதலுள்ள பாலுறவு காதல் இல்லாத பாலுறவு ஆகிய நான்கையும் ஏற்றுக் கொள்ளும் அளவுக்கு மன நிலையில் மாற்றம் நிகழ்ந்துள்ளது.

ஒரே சமயத்தில் ஒன்றுக்கு மேற்பட்ட ஆணுடன் காதல்

இக் கேள்வியை எனது ஆராய்ச்சியின் ஆரம்ப கட்டத்தில் கேட்ட போது பெரும்பாலான பெண்கள் கேட்கக் கூடாத கேள்வியைக் கேட்டது போல் தர்ம சங்கடப்பட்டனர். பிறகு சுதாரித்துக் கொண்டு, 'உடலுறவு சம்பந்தப்படாததாக இருந்தால் ஒரு பெண் ஒன்றுக்கு மேற்பட்ட ஆணின் மேல் காதல் கொள்ள வாய்ப்புள்ளது' என்றுபொருள் படச் சிலர் பதிலளித்தனர்.

பத்தாண்டு இடைவெளிக்குப் பின் இக் கேள்விக்குப் பதில் அளிக்கத் தயங்கியவர்களின் எண்ணிக்கை அதிகமில்லை.

பமீனா என்ற பெண் பதிலளித்தது குறிப்பிடத் தக்கது.

'அறிவுபூர்வமான திருப்திக்காக ஒரு பெண் ஓர் ஆணையும், சங்கீத ரசனையில் திருப்தி அளிக்க ஒரு பாடகரையும் மனதாரக் காதலிக்கலாம். இம்மாதிரி ஒவ்வொரு துறைக்கும் பொருந்தும். அதே சமயம் பொருளாதார அடிப்படையில் பாதுகாப்பான வாழ்க்கைக்காகவும், உடலுறவு திருப்திக்காகவும், தோழமைக்காகவும் கணவனைக் காதலிக்கவும் முடியும்' என்று பமீனா குறிப்பிட்டாள்.

வாஸ்னு என்ற பெண், ஒருவரைத் தேர்ந்தெடுத்து மணந்துகொள்ளும் எண்ணத்துடன் ஒரு பெண் இரண்டு அல்லது மூன்று ஆண்களை ஒரே சமயத்தில் காதலிக்க முடியும் என்று கூறியதும் குறிப்பிடத் தக்கது.

ஆகையால் ஒரு பெண் ஒரு குறிப்பிட்ட காரணத்துக்காகவோ, அல்லது மாறுபட்ட வேறுபாடான அறிவுபூர்வமான அல்லதுவேறு விதமான திருப்திக்காக ஒரே சமயம் ஒன்றுக்கு மேற்பட்ட ஆண்களைக் காதலிக்க முடியும் என்ற தற்போதைய நோக்கைப் புலப்படுத்துகிறது.

தேர்ந்தெடுப்பதில் காதல்

சில வருடங்களுக்கு முன்பு வரை, பணம் வாய்ந்த பெற்றோரைப் பெற்றிருப்பவனை, அவன் தானாகச் சம்பாதிக்கும் தகுதி இல்லாவிடினும்கூட, அவனை மணப்பதைப் பெண்களும், அவர்களைப் பெற்றவர்களும் விரும்பினதுண்டு. பிறகு, பொருள் அடிப்படையிலான தகுதியை விட்டு மன உணர்வுக்குத் திருப்தியளிக்கும் அம்சத்தை அடிப்படையாகக் கொண்டு கணவனைத் தேர்ந்தெடுக்கும் அணுகுமுறை பெண்களிடம் படிந்தது. குறிப்பாக, படித்து வேலைக்குப் போகும் பெண்கள் தாங்கள் இதயபூர்வமாகக் காதலிப்பவனை மணப்பதில் ஆர்வம் கொண்டனர்.


தற்போது தான் காதலிப்பதும், தான் காதலிக்கப்படுவதும் மட்டுமே கணவனைத் தேர்ந்தெடுக்கும் முறைக்கு முக்கியமாகக் கருதப்படுவதில்லை. தற்போது ஒரு பெண் தனக்காகத் துணைவனைத் தேர்ந்தெடுக்கும் போது காதலுடன், சமுதாயத்தில் அவன் அந்தஸ்தும் சிறப்பான உத்தியோகமும் பெற்றுப் போதிய பண' வசதியுடன் இருக்கிறானா என்பதையும் கவனிக்கிறாள்.

●

சுமார் முந்நூறு பக்கங்கள் கொண்ட இந்நூலில் ஆசிரியர் தமது ஆராய்ச்சியின் அடிப்படையில் கணித்துள்ள கணிப்புகளைத் தவிர, சமூகவியல் துறையில் தலைசிறந்து விளங்கும் நிபுணர்களின் நூல்களில் காதல், கல்யாணம், பாலுறவு சம்பந்தமாகக் காணப்படும் நுணுக்கமான கருத்துக்களை ஆங்காங்கே கையாண்டு, அவை மூலமாகச் சமுதாயத்தின் மனநோக்கு இம்மூன்று துறைகளின்பால் காலப்போக்கில் எத்தகைய மாறுதல்களுக்கு உட்பட்டுள்ளது என்று விளக்கியுள்ளார்.

– ரங்கா





உன்னதமான கண்கவர் உலோகப் பொருட்கள்



நீண்ட நெடுங்காலத்திற்கு முன்பே நம் கைவினைக் கலைஞர்கள் வெண் கலத்தில் அருமையான கலைப் படைப்பு களை உருவாக்கினர். வெண்கலச் சிலைகளும், இதர பொருட்களும் மொகஞ்சதரோவில் கிடைத்துள்ளன. செம்பு, பித்தளை, வெண்கலம் ஆகியவை கலைப் பொருட்களாகவும், உபயோக சாதனங்களாகவும் பயன் பட்டதுடன் ஈட்டிகள், கத்திகள், கேடயங்கள் போன்ற ஆயுதங்கள் தயாரிக்கவும் பயன்பட்டன!

தமிழ்நாட்டுக் கலைஞர்கள் கலைத் தன்மையுடன் உபயோகத்தையும் இணைத்து உலோகத்திற்கு உன்னதப் பயன் காண்பதில் மிகச்சிறந்தவர்கள். தெய்வச் சிலை வடிவங்கள், கோயில் வாகனங்கள், கோபுர விமானங்கள் ஆகியவை இன்றும் கண் கூடான சான்றுகள்.

சோழர், பல்லவர் ஆகிய மன்னர்களின் காலத்திற்கு முன்பிருந்தே தமிழ்க் கலைஞர்களின் திறன் வெளிப் பட்டு வருகிறது. அன்றாடம் பயன் படுத்தப்படும் பித்தளைப் பாத்திரம் முதல் இறை வழிபாட்டுக்கு உரிய குத்து விளக்கு வரை எண்ணற்ற வழி களில் உலோகப் பொருட்கள் தமிழர் பண்பாட்டிலும், நாகரிகத்திலும் தொன்று தொட்டு பெருமைக்குரிய இடத்தைப் பெற்றுள்ளன.

பெருமை மிக்க இந்தப் பாரம்பரியத்தை ஒருமுகப் படுத்தித் தொடரும் வகையில் பூம்புகார் தொன்மையான கலைகளைப் பேணி வருகிறது. அத்துடன் பல வித உலோகப் பொருட்களை உற்பத்தி செய்து தன் விற்பனை நிலையங்களில் விற்பனையும் செய்கிறது.



பூம்புகாரின் பல அம்சங்களில் இது ஒன்றுதான்.

பூம்புகாருக்கு வாருங்கள்.

உலோகம் மட்டுமன்றி கல், மரம், பித்தளை, செம்பு, தந்தம், பிரம்பு, துணி, பாதிக், மெருகுப் பூச்சு, கடைசல் சாமான்கள், கண்ணாடி, காகிதக் கூழ் (பேப்பியர்-மாஷ்) பொருள்களும் உள்ளன.

பூம்புகார்

கைநுட்பக் கலைத்திறன்
பொருட்கள் களஞ்சியம்

- பம்பாய்-23
  ஏஜெண்ட்ஸ்—சேதனு பிரைவேட் லிமிடெட், 34 கே, துபாஷ் மார்க்.
  போன்: 244692
- புதுடில்லி-1
  சி-1, ஸ்டேட் எம்போரியா காம்பிளக்ஸ், இர்வின் ரோடு.
  போன்: 343913
- பெங்களூர்-1
  104 & 105, பிரிகேட் ரோடு.
  போன்: 576582
- சென்னை-1
  818 & 42, அண்ணா சாலை, மற்றும் ஓட்டல் தாஜ் கோரமண்டல்

மற்றும் தமிழ்நாட்டில் பல ஊர்களில்

தமிழ்நாடு கைநுட்பக் கலைத்திறன் வளர்ச்சி இணையகம்
(ஒரு தமிழ்நாடு அரசு நிறுவனம்)

ADWAVE/THDC/1116

காதலோ காதல்!

—புவனா சந்திரன்

பொறுமை



கண்ணே!
பீச், பார்க்கில்
ஏ. ஸி. சினிமாவின்
இருட்டு மூலையில்
இடைவேளை நேரியில்
இதமான உரசலில்
இன்னுயிர் உன்னுடன்
என்மனம் இனித்திட
—பொறுமைத் தீயில்
மணிபர்ஸ் இளைத்தது!


லவ் லெட்டர்

எதிர்வீட்டுப் பெண்ணிடம்
லவ்லெட்டர் கொடுக்க
ஆசைத்தம்பியை
அழைத்துச் சொல்ல
—'ஹரால்ட் ராபின்ஸ்' புத்தகம்
போகிறேன் என்றான்.



விமானக் காதல்

இடுப்பைச் சுற்றிய
பெல்ட்டைப் போட்டாள்
துடிப்பாய் வெயிட்டர்
மியூஸிக் போட்டான்
ஐஸ் கட்டித்துண்டு
கிண்ணத்தில் போட்டான்
ஆசையில் தொட்டதும் —
கன்னத்தில் போட்டாள்



எண்ணிக்கை

நான்கைப் பார்த்து
மூன்றை ரசித்து
இரண்டை காதலித்து
ஒன்றை மணந்தேன்
அவள்
ஒற்றையாய் வந்து
வீட்டை இரண்டாக்கி
குழந்தை மூன்றாக்கி
—பார்க்கிறாள் நாலாவதாய்!



கதாநாயகன்

அணைக்கட்டுப்
பூங்காவில்
துணையுடன்
பேட் பாடி
ரசிகர்களின்
ட்ரீம் 'கேர்ல்'ஐ
லாரி ஜாக்கியாய்
தூக்கியவர்
காமிரா நின்றவுடன் —
ஒலிம்பிக் மூச்சுவிட்டார்!



சினிமாக் காதல்

கனவில் அவனுடன்
கட்டிப் புரண்டு
சோலைகள் சுற்றி
பனிமலை பார்த்து
அடுத்த ஸீனில்
நாயகன் அவளை
"தங்கைநீ!" என்றிட
அவள்
ஒருநொடி அழுது
"சரி, அண்ணா!" என்பாள்!



காதல், கல்யாணம், மணவாழ்க்கை!



உரையாடலில் பங்கு பெற்றோர் இடமிருந்து வலம்: திரு V. சுப்பிரமணியன், திருமதி கஸ்தூரி ராதாகிருஷ்ணன், குமாரி சாந்தா, திருமதி சாந்தி கோபாலன், திரு R. கிருஷ்ணன்

திரு சுப்ரமணியன்: ஆங்கிலத்திலே உபயோகப்படுத்தும் 'லவ்' என்கிற வார்த்தைக்கும் தமிழிலே நாம் உபயோகிக்கும் 'காதல்' என்கிற வார்த்தைக்கும்நிறைய வித்தியாசம் இருக்கு. 'லவ்' என்கிற வார்த்தைக்கு ஆண்–பெண் இடையேயான அன்பு, பெற்றோர் – குழந்தை இடையேயான அன்பு போன்று சந்தர்ப்பத்துக்கு ஏற்றாற் போல அர்த்தம் மாறுபடுகிறது. ஆனால் 'காதல்' என்கிற வார்த்தை ஓர் ஆணுக்கும் பெண்ணுக்கும் இடையே தோன்றும் மனப் பிடிப்பாகத்தான் அர்த்தம் செய்யப்படுகிறது.

கிருஷ்ணன்: அதிலேயும் திருமண வயதிலுள்ள ஓர் ஆணும் பெண்ணும், திருமணத்தைக் குறிக்கோளாகக் கொண்டு ஒருவர் மேல் மற்றொருவர் செலுத்தும் அன்புதான் 'காதல்' என்று கருதப்படுவதாகக்கூட எடுத்துக் கொள்ளலாம்.

கஸ்தூரி: திருமணம் செய்து கொள்ளும் நிலையில் உள்ள ஆணுக்கும் பெண்ணுக்கும் இடையே தோன்றும் அன்பு மட்டும்தான் காதல் என்பது சரியல்ல. திருமணம் ஆவதற்கு முன்பு எனக்கும் என் கணவருக்கும் பரிச்சயமே இடையாது. Ours is an arranged marriage. திருமணத்துக்குப் பிறகு நாங்க ரெண்டு பேரும் ஆழ்ந்த அன்போடு இருக்கிறோம். எங்களுடைய மனப் பிடிப்பையும் 'காதல்'னு சொல்றது சரிதான்னு எனக்குப் படறது.

சாந்தி கோபாலன்: நீங்க சொல்றது சரிதான். காதல் திருமணத்துக்கு முன்னாலேயேதான் நலாம். திருமணத்துக்குப் பிறகும் கணவன் மனைவியிடையே தோன்றலாம். என் விஷயத்திலே We loved each other prior to marriage and got married-ஆனா ஒன்னு! அது ஆணானாலும் சரி பெண்ணானாலும் சரி. காதல் ஒருவரது வாழ்க்கையில் ஒரே ஒரு முறைதான் மலர முடியும்.

குமாரி சாந்தா: நீங்க சொல்றது ரொம்பவும் சரியான வார்த்தை. திருமணம் செய்து கொள்ள வேண்டும் என்கிற நோக்கில் ஆணுக்கும் பெண்ணுக்கும் இடையே தோன்றக் கூடியது மட்டுமேதான் காதல் என்று எடுத்துக் கொள்ள வேண்டும். தற்போதைய சூழ்நிலையிலே நிறைய ஆண்களும், பெண்களும் சும்மா சினிமாவுக்குப்

போறதுக்கு, ஹோட்டல் போறதுக்குன்னு கொடுக்கிற 'கம்பெனி'யைக் கூட காதலா எடுத்துக்கறாங்க!

கிருஷ்ணன்: உண்மையான காதல் என்பது எல்லா விதமான இன்னல்களையும் தாங்கிக் கொள்ளக் கூடியது. காலத்தாலும் அழியாதது. எல்லாவித எதிர்ப்புக்களையும் முறிக்கக் கூடியது. காதலின் உண்மையான தாத்பரியத்தைப் புரிந்து கொள்பவர்கள் மிக மிகக் குறைவு.

சுப்பிரமணியன்: காதல் ஒருவருடைய வாழ்க்கையில் எந்தக் காலகட்டத்தில் வேண்டுமானாலும் தோன்றலாம். அதேமாதிரி ஒரு பெண்ணுக்கு ஒன்றுக்கு மேற்பட்ட ஆண்களிடமோ, ஓர் ஆணுக்கு ஒன்றுக்கு மேற்பட்ட பெண்களிடமோ காதல் நிச்சயம் தோன்ற முடியும்!



''ஏண்டா அவளைக் கைவிட்டுட்டே?''
''லவ் பண்ணச் சந்தர்ப்பம் சாதகமா இருந்தது. கல்யாணம் பண்ணிக்க ஜாதகம் சாதகமா இல்லையே!''

-இனிய ராஜா

கிருஷ்ணன்: நோ... நீங்க சொல்றதை ஒப்புக்கொள்ள முடியாது. ஒன்றுக்கு மேற்பட்டால் அது காதல் இல்லே; காமம்தான்!

கஸ்தூரி: மிஸ்டர் கிருஷ்ணன் சொல்றது தான் சரி.

சுப்பிரமணியன்: நீங்க இப்படி ஃபீல் பண்றதுக்கு அடிப்படைக் காரணம், நம்ப சமுதாயத்திலே பரவிக் கிடக்கும் கட்டுப்பாடுகளும், நம்பிக்கைகளும்தான். 'ஒருவனுக்கு ஒருத்தி' என்று நாம் போட்டுக் கொண்டிருக்கும் வட்டம் உங்களை இம்மாதிரியான தீர்மானத்துக்குக் கொண்டு வந்துள்ளது. மனோதத்துவ ரீதியாகவும், மேற்கத்திய நாடுகளில் நாம் பார்க்கும் நிகழ்ச்சிகள் மூலமாகவும் பார்த்தால் ஒருவர் ஒன்றுக்கு மேற்பட்டவர் மீது காதல் கொள்வது சாத்தியம் என்றுதானே படுகிறது.

கிருஷ்ணன்: நீங்க என்னதான் சொன்னாலும் ஒரு ஆணுக்கும், ஒரு பெண்ணுக்கும் ஒரே ஒரு முறை தோன்றும் காதல்தான் உண்மையானது. மீதியெல்லாம் உடல் இச்சை அடிப்படையிலானது.

சுப்பிரமணியன்: அது மாதிரி பார்த்தால் 'காதல்' உறவில் 'செக்ஸ்'ம் ஒரு முக்கிய அம்சம்தானே?

சாந்தி கோபாலன்: மிஸ்டர் சுப்பிரமணியம்! நீங்க என்னதான் விவாதம் பண்ணினாலும் one man one woman love concept தான் ஆத்ம பூர்வமானதாக இருக்கும். காதல் கல்யாணம் செய்து கொள்கிற ஜோடிகளிடையே வாழ்க்கை காதலில் ஆரம்பித்துக் கல்யாணத்துக்குப் பிறகு அது 'செக்ஸ்' வாழ்க்கையுடன் தொடர்கிறது. பெற்றோர் பார்த்துச் செய்யும் கல்யாணங்களில் செக்ஸ் வாழ்க்கையில் ஆரம்பித்து அது காதலில் முடிகிறது.

சுப்பிரமணியம்: 'அரேன்ஜ்ட் மேரேஜ்'களில் அம்மாதிரி கல்யாணத்துக்குப் பிறகு காதலில் முடியாமல் போகலாம் அல்லவா?

கிருஷ்ணன்: காதல் கல்யாணங்களில் கூடத் திருமணத்துக்குப் பிறகு கணவன் மனைவியிடையே காதல் நீடிக்கும் என்று மட்டும் நிச்சயம் கூறிவிட முடியுமா என்ன?

சாந்தி கோபால்: காதல் கல்யாணங்களில், ஆணும் பெண்ணும் ஒருவருடன் மற்றவர் ஓரளவு பழக வாய்ப்புக் கிடைத்து ஒருவரது குணாதிசயங்கள், பழக்க வழக்கங்கள், எதிர்பார்ப்புகள் இவற்றை மற்றவர் அறிந்து கொண்டு ஒருவரை மற்றவர் புரிந்து கொள்ள வாய்ப்புக் கிடைக்கிறது. இது அவர்கள் ஒற்றுமையான மண வாழ்க்கையை அமைத்துக் கொள்ள நிச்சயம் உதவத்தானே செய்யும்!

கஸ்தூரி: இதை முழுமையா என்னாலே ஒத்துக்க முடியலே. காதல் வயப்பட்ட காலத்தில் ஆணோ, பெண்ணோ, தங்களது நல்ல அம்சங்களை மட்டுமே மற்றவர்க்குத் தெரியும்படி நடந்து கொள்வார்கள். இதனால் ஒருவரை யொருவர் சரியாகப் புரிந்து கொள்ள முடியும் என்பது முழுமையா ஏத்துக்க முடியாது. பெரியவர்களாகப் பார்த்துக் கல்யாணம் செய்து வைத்தால், கணவன் மனைவியிடம் சரியாக நடந்து கொள்ளா விட்டால் பெரியவர்கள் அவனைத் திருத்தி நல்ல வழியாக நடந்து கொள்ளச் செய்ய வாய்ப்பிருக்கு.

சாந்தா: பொதுவா பெரியவங்க தீர விசாரிச்சு, தங்களோட முதிர்ந்த அனுபவத்தைக் கொண்டு ஒரு பெண்ணுக்குக் கணவனைத் தேடித் திருமணம் செய்து வைப்பதால் ஒற்றுமையான மண வாழ்க்கை ஏற்பட அதிக வாய்ப்பு அதிலே இருக்கு. அதோட திருமணத்துக்குப் பிறகு காதல் வருவதால் கணவன் மனைவியிடையே அதிகப்படியான மனப் பிடிப்பும் இருக்கும்!

சுப்பிரமணியம்: அப்படி 'ஜெனரலைஸ்' பண்ணிவிட முடியாது. என் கல்யாணம் ஒரு கலப்புத் திருமணம். (Intercaste marriage) திருமணமாகிப் பத்து வருஷம் திருமணத்துக்கு முன்பு எந்த அளவுக்கு மனப் பிடிப்போட இருந்தோமோ அதே அளவு அன்போடுதான் இப்போதும் இருக்கோம். ஆனால் ஒரு விஷயம். மணக்கப்போகும் ஆண் நல்லவனா கெட்டவனா என்று பாகுபாடு படுத்திக் கொள்ளும் Risk element காதல் கல்யாணத்தில் பெண் தானே ஏற்றுக் கொள்கிறாள். பெரியோர் ஏற்பாட்டில் நடக்கும் கல்யாணத்தில் அப்பொறுப்பு பெற்றோரிடம் இருக்கிறது. வித்தியாசம் அவ்வளவு தான்.

'பொருளாதாரச் சார்பு' இவ்விஷயத்தில் பெரிதும் முக்கியத்துவம் வகிக்கிறது. மேலை நாடுகளில் எல்லாக் கல்யாணங்களுமே காதல் கல்யாணங்கள்தான். நம் நாட்டில்தான் காதலித்துக் கல்யாணம் செய்து கொண்டால் ஏதோ தவறு செய்து விட்டது போன்ற மனப்பான்மை சமூகத்தில் நிலவுகிறது.

சாந்தா: காதலித்துத் திருமணம் செய்து கொள்வதே தவறு என்று நாங்களும் சொல்லவில்லை. ஒரு பெண் தனது வாழ்க்கைத் துணையைத் தேர்ந்தெடுக்கும் விஷயத்தில் தவறு இழைத்து விட்டால், அதனால் அவளுக்கு வரும் பலாபலன்களின் அளவு மிகப் பயங்கரமாக இருக்கும். பெற்றோர்களிடம் அப்பொறுப்பை ஒப்படைத்து விட்டால், தவறு நேர்ந்தாலும் அதனைச் சரிப்படுத்திவிட முடியும்!

சுப்பிரமணியன்: வேலைக்குப் போகும் பெண்கள் பெரும்பாலும் காதல் கல்யாணத்தை ஆதரிக்கிறார்கள் என்பது என் அபிப்பிராயம். தன்னைக் காப்பாற்றிக்கொள்ளப் போதுமான வருவாயை ஒரு பெண் சம்பாதிப்பதனால், பொருளாதாரச் சார்பு இல்லாத நிலையில் அவள் தனது எதிர் காலத்தைத் தனக்குப் பிடித்த மாதிரி அமைத்துக் கொள்ளத் தேவையான மனோ தைரியம் கிடைக்கிறது.

சாந்தா: காதல் திருமணம் செய்துகொண்டாலும், திருப்திகரமான மண வாழ்க்கை அமையாமல் கூடச் சிலபேர் வாழ்க்கை ஆகிறதே அதற்கு என்ன சொல்கிறீர்கள்?

கஸ்தூரி: காதல் திருமணமாகட்டும், பெற்றோர் ஏற்பாடு செய்த திருமணமாகட்டும் அடிப்படையாக ஒரு கணவனுக்கும் மனைவிக்குமிடையே தேவையானது ஆழ்ந்த நம்பிக்கையும், ஒருவரை மற்றவர் புரிந்து கொள்ளும் மனோ பக்குவமுமாகும்.

கிருஷ்ணன்: இந்தத் தருணத்தில் என் சொந்த வாழ்க்கை பற்றி நான் ஒன்று சொல்ல ஆசைப்படுகிறேன். காதல் திருமணம் என்று சொல்ல முடியாவிட்டாலும் கூட, நானும் என் மனைவியும் திருமணத்துக்கு முன்பே ஒருவரை யொருவர்



''இந்த அநியாயத்தைப் பார்த்தீங்களா, எனக்கும் அவளுக்கும் சம்பந்தமே கிடையாது. ஆனா நாங்க ரெண்டு பேரும் 'லவ்' பண்றதா கதை கட்டி விட்டுட்டாங்க...''
''சிறுகதையா, தொடர்கதையா?''

- ரவீந்திரன்

-✲-✲-✲-✲-✲-✲-✲-✲-✲✲-✲-✲

தெரிந்து திருமணம் செய்து கொள்ளப் போகிறோம் என்று அறிந்து கொண்டு, பெரியவர்கள் முறைப்படி செய்துவைத்த திருமணமாகும். அடிப்படையாக எங்களுக்குள் எந்த விதமான வேற்றுமையும் இல்லாவிட்டாலும் கூட இன்று நாங்கள் பிரிந்து வாழ்கிறோம். Incompatability in issues என்று சொல்லலாம். But I love her and I know she loves me. இதைப் பற்றி என்ன சொல்கிறீர்கள்?

திரு சுப்பிரமணியம்: சில பேருடைய வாழ்க்கையில் இம்மாதிரி Passing Phase ஏற்படுவதை நானும் கண்டிருக்கிறேன்.... ஓரளவுக்கு விட்டுக் கொடுக்கும் மனப் பக்குவமும், ஒருவர்பால் ஒருவர்க்கு அசைக்க முடியாத நம்பிக்கையும் இருந்தால் இதெல்லாம் சரியாகி விடும்... You are going to see that both of you are togother in future...

கிருஷ்ணன்: I am not against it!

சுப்பிரமணியம்: இந்த விவாதத்தை முடிக்கு முன் ஒன்று சொல்ல ஆசைப்படுகிறேன். தற்போதுள்ள இளைய சமூகத்திடையே 'சோஷியலாக'ப் பழகும் முறை எது, காதல் உணர்வுடன் பழகுவது எது என்று புரிந்து கொள்ளும் திட்ட வட்டமான கணிப்பு. ஆனால் வெளியிலிருந்து பார்ப்பவர்கள் பார்வைதான் பல விதமான தவறான முடிவுகளைத் தோற்றுவிக்கக் காரணமாகிறது. ஓர் ஆணும் பெண்ணும் சகஜமாகப் பழகினாலே அவர்களிடையே ஏதோ உறவு இருக்கிறது என்று தப்புக் கணக்குப் போட்டு விடுகிறார்கள். ஆனால் நமது சமுதாயத்தின் பார்வையும் சிறிது சிறிதாக விசாலப்பட்டுக் கொண்டுதான் வருகிறது. தேவையில்லாத மூட நம்பிக்கைகளும், குறுகிய நோக்குகளும் நீங்கத்தான் போகின்றன என்று என்னால் திட்ட வட்டமாகக் கூற முடியும்!

உரையாடல் ஏற்பாடு: **நாயகன்**

புகைப்படம்: **மன்னை மூர்த்தி**



✕ கிழக்கே போகும் ரயில் படத்தில் சுதாகர் ராதிகா

எங்கள் முதல் காதல்

சுதாகர் — ராதிகா: காதல் — இந்த வார்த்தை இனிமையானதுதான். அதே சமயம் ஒரு பெண் இதே வார்த்தையைச் சொன்னால் அவளை ஏனோ பலர் உற்று நோக்குகிறார்கள். வெளி நாடுகளில் பல்வேறு நாட்டவருடனும் மொழியினருடனும் ஒருவர் பழகினாலேயே தவறான நோக்குடன் பார்க்கவும் மாட்டார்கள் எடுத்துக் கொள்ளவும் மாட்டார்கள். எனது முதல் படமான ''கிழக்கே போகும் ரயிலில்'' நான் என்னைப் போலவே புது முகமான சுதாகருடன் காதல் காட்சியில் நடித்தேன். நானோ மிகவும் வெட்கப்படுபவள் என்றால் எனக்கு இரண்டு பங்கு அதிகம் இருந்தார் சுதாகர். வெளி நாடுகளில் நான் அதிகம் இருந்துவிட்டபடியால், குறிப்பாக, படத்தில் வரும் காதல் காட்சியை நடிக்க அவ்வளவாகக் கஷ்டப்படவில்லை. ஆனால் என் கஷ்டங்களையெல்லாம் சேர்த்துப் படாத பாடு பட்டார் சுதாகர்.

முதன் முறையாக அவர் என்னைத் தொட்டு நடிக்கக் கஷ்டப்பட்டதை இன்று நினைத்தாலும் எனக்குச் சிரிப்பு வருகிறது.

✕ அழகே உன்னை ஆராதிக்கிறேன் படத்தில் பிரகாஷ் சுபாஷினி





✕ ஒரு வீடு ஒரு உலகம் படத்தில் விஜய்பாபு ஷோபா

ரத்தி — விஜயன்: ''நிறம் மாறாத பூக்கள்'' படத்தின் வெளிப்புறப் படப்பிடிப்பு. அதற்காகக் கொடைக்கானல் சென்றிருந்தேன். அங்குதான் நான் ரத்தியுடன் காதல் காட்சியில் பாட்டில்லாமல் நடிக்க வேண்டியிருந்தது. இதற்கு முன்பே நான் மலையாளப் படங்களில் நடித்து விட்டேன். என்றாலும் தமிழ்ப் படத்தில் ஒரு கதாநாயகியைக் காதலித்து நடிப்பது இப்படத்தில்தான். முந்தைய மலையாளப் படங்களில் காதல் காட்சிகளில் நடித்த அனுபவம் கை கொடுக்க ஆண் மகனாகவும் இருந்த காரணத்தினால் எனக்கு எந்த விதப் பிரச்னையும் எழவில்லை. மிகவும் இயற்கையாக நான் நடித்து விட்டேன் என்று பாராட்டப் பட்டேன் என்றால், பார்த்துக் கொள்ளுங்களேன்.

விஜய்பாபு — ஷோபா: படபடப்பு, நடுக்கம், பயம் இப்படி எல்லாம் ஒருங்கிணைந்து என்னைக் கேள்விக் குறியாக்கின. என் முதல் காதல் காட்சி மலையாளப் படத்தில். கதாநாயகர் ரவி குமார். ''ஏகாகினி'' என்று அப்படத்தின் பெயர். அதன் இயக்குநர் பணிக்கர் நான் நடிக்க வேண்டிய காதல் காட்சியை விவரித்தார். நான் அக்காட்சியில் செய்ய வேண்டிய ஒவ்வொரு செயலையும் செய்து காண்பித்தார். ஆனாலும் என்னால் நடுக்கத்தை விட்டு நடிப்பது கொஞ்சம் கஷ்டமாகத்தான் இருந்தது. கஷ்டப்பட்டு நடித்து முடித்து விட்டேன்.

✱ நிறம் மாறாத பூக்கள் படத்தில் விஜயன் ரதி





அப்படிப்பட்ட நான் ''ஒரு வீடு ஒரு உலகம்'' படத்தில் அந்தத் துறையைப் பொறுத்த வரை நான் இன்னும் நடுக்கத்தை விடாமல் நடிப்பது அதிசயம்தான். என்னுடன் நடித்த விஜய் பாபு புது முகம்தான் என்றாலும் அந்தப் படத்தைப் பொறுத்த வரை அப்படி யாரும் சொல்ல மாட்டார்கள்.

காதலன் காதலியைத் தொட்டுத்தான் நடிக்க வேண்டும் என்ற காலம் மலையேறி விட்டது. இப்பொழுது வரும் படங்களில் எல்லாம் காதலன் காதலியைப் பார்த்து நடிப்பதுதானே ஒழிய, மரத்தைச் சுற்றி ஓடுவது போன்றவைகளெல்லாம் வேகமாகக் குறைந்து வருகின்றன. இது நல்ல அறிகுறி தானே!


ஜெயப்ரகாஷ் — சுபாஷிணி: காதல் காட்சியில் எறும்பு கடித்தால் எப்படி இருக்கும் அப்படித்தான் இருந்தது என் ஆரம்பக் காதல் காட்சி. இதற்கு முன்னால் நான் தெலுங்குப் படத்தில் நடித்திருக்கிறேன். என்றாலும் இந்தப் படத்தின் காதல் காட்சி வித்தியாசமாக வரவேற்பு மிகுந்ததாக இருந்தது. காரணம் அதை இயக்கிய டைரக்டர் ஸ்ரீதர் என்பதனால் தானோ என்னவோ? காதல் படத்துக்கே புகழ் பெற்றவராயிற்றே அவர்! நாங்கள் இருவரும் மலை மீது நின்று காதலிப்பது போல் ஒரு காட்சி. ''ஸ்டார்ட்'' என்று கூறிவிட்டார் இயக்குனர். தொடங்கிய காதல் காட்சியுடன் மற்றொன்றும் தொடர்ந்தது. ஆம்? காலில் ஏதோ ஒரு வலி. நானும் பொறுத்துப் பொறுத்துப் பார்த்தேன். இயக்குனர் ''கட்'' என்றவுடன் ஓரமாக ஓடிச் சென்று கால்களைப் பார்த்தேன். எறும்புப் புற்றே என் கால்களின் மீது இருந்தது. தெரியாத்தனமாக அந்த எறும்புப் புற்றின் மீது கால்களை வைத்து நின்று நடித்திருக்கிறேன். அவை என்னை விடுமா என்ன? 'நீ ஸ்வீட்டாய் இருக்கிறாய். அதனால்தான் உன்னைக் கடித்திருக்கிறது' என்றாள் என் அம்மா. எறும்பு யாரையும் கடிக்கும். ஸ்வீட் என்ற பதத்துக்கும் அதற்கும் சம்பந்தமில்லை என்பது அம்மாவுக்குத் தெரியாதா என்ன?

பேட்டி: சலன்


மாருதி ஊழல்
சட்டம் நீதி
இந்திரா
அறிக்கை அம்பலம்
ஷா கமிஷன் அறிக்கை


கட்சி தாவல்
மெஜாரிட்டி
அர்ஸ்
கட்சி தாவல்
மெஜாரிட்டி


மியாவ்
மியாவ்



கல்கி

1979 செப்டம்பர் 16
சித்தார்த்தி ஆவணி 31
மலர்: 38 இதழ்: 7



தமிழ்த்திரு நாடு தன்னைப் பெற்ற எங்கள் தாயென்று கும்மியடி பாப்பா - பாரதியார்

இலங்கை இராசதுரை

இலங்கைத் தமிழர்களின் பிரிவினை வாதத்துக்குக் கடந்த ஆட்சி காலத்தில் அவசியமும் அர்த்தமும் ஓரளவு இருந்திருக்கலாம். ஆனால் இன்றைய ஜெயவர்த்தன ஆட்சியில் அதற்குச் சிறிதும் இடமில்லை.

இலங்கையில் ஜெயவர்த்தன ஆட்சிப் பொறுப்பை ஏற்ற பின் பல அதிசயங்கள் நிகழ்ந்து வருகின்றன. ஜனாதிபதிக்கு அதிக அதிகாரங்களைத் தரும் புதிய அரசியல் சாஸனத்தை வகுத்துத் தந்த பின் அவர் மதச் சார்பற்ற, இன - மொழி வேறுபாடற்ற அரசை ஸ்தாபிப்பதில் மிகுந்த அக்கறை காட்டி வருகிறார்.

திருமதி பண்டார நாயகாவின் ஆட்சியில் தமிழர்கள் இரண்டாந்தரப் பிரஜைகளின் நிலைக்குத் தாழ்த்தப்பட்டிருந்தனர். தமிழ் தன் மதிப்பு இழந்திருந்தது. சிங்களமும் பௌத்த மதமுமே முக்கியத்துவம் பெற்றிருந்தன. உத்தியோக வாய்ப்பு, உயர்வு முதலியவற்றில் தமிழருக்குச் சம உரிமைகள் மறுக்கப்பட்டிருந்தன. இதையெல்லாம் விடப் பெரிய அநீதியாகத் தமிழர் வாழும் பகுதிகளில் சிங்கள பௌத்தர்கள் வேண்டுமென்றே குடியேற்றப்பட்டார்கள். இப்போது இந்த நிலைமைகள் எல்லாம் அடியோடு மாறி வருகிறது.

தமிழருக்கும் தமிழுக்கும் உரிய அந்தஸ்து தரப்படுகிறது. நீதி மன்றங்களில் தமிழன் ஒருவன் மீது வழக்குத் தொடரப்படுமானால் அவன் தமிழிலேயே வாதாடலாம். சிங்களமே அதிகமாகப் பேசப்படுகிற பகுதியானால் கூட அங்கு ஒரு தமிழனின் வழக்கு விசாரணைக்கு வருமேயானால் அவனுக்குத் தமிழில் வாதாட உரிமை உண்டு. இத்தனை காலத்துக்குள் சிங்களம் கற்றுக்கொண்டு விட வேண்டும். இல்லையேல் பதவி நீக்கம் என்ற கொடிய உத்தரவு மாற்றப்பட்டிருக்கிறது. இப்படி ஒன்றல்ல, இரண்டல்ல. பலப்பல ஆரோக்கியமான மாற்றங்கள்.



திரு இராசதுரை

இலங்கைவாழ் தமிழ்ப் பாட்டாளி மக்களின் தன்னிகரில்லாத் தலைவர் தொண்டைமான் கிராமியக் கைத்தொழில் அபிவிருத்தி அமைச்சராகியுள்ளார். தமிழர் வாழும் பிரதேச அபிவிருத்திக்கென்றே மற்றொரு தனி அமைச்சரவை திரு இராசதுரை அவர்கள் தலைமையில் உருவாகியுள்ளது. தமிழ் மொழி அமலாக்கம், இந்து சமயம், கலாசாரம் ஆகிய துறைகளை நிர்வகிக்கும் அமைச்சரவையும் இதுதான். அரசியலிலிருந்தே சில பல காரணங்களுக்காக விலகிவிட உத்தேசித்திருந்த இராசதுரையை அழைத்து 'உங்கள் சேவை

உங்கள் பகுதி மக்களுக்குத் தேவை' என்று சொல்லி ஜெயவர்த்தன வழங்கிய பதவி இது. அதுமட்டுமல்ல. அகில உலக இந்து சமய மகாநாடு ஒன்றினை அடுத்த ஆண்டு இலங்கையில் விமரிசையாக நடத்துமாறு ஜனதிபதி ஜயவர்த்தன இராசதுரையைக் கேட்டுக் கொண்டிருக்கிறார்.

ஒரு காலத்தில் ஹரிஜனங்கள் கோயிலுக்குள் நுழைய முடியாதிருப்பதைப் பார்த்து மனம் நொந்து நாத்திகராய் விளங்கிய இராசதுரை இன்று நல்லதொரு ஆத்திகராகவும் ஸ்ரீ சத்திய சாயி பாபாவின் பக்தராகவும் விளங்குகிறவர். சென்ற ஆண்டு இயற்கையின் சீற்றத்தால் இலங்கையில் கடலோரத் தமிழ்ப் பகுதிகள் அளப்பரிய சேதத்துக்கு உள்ளானபோது இராசதுரை ஆற்றிய நற்பணிகளை நன்றியோடு எண்ணிப் பாராத இலங்கைத் தமிழன் இருக்க முடியாது.

ஈழத்து அமைச்சர் இராசதுரை அண்மையில் சென்னைக்கு வந்திருந்தார். இலங்கையில் அடுத்த ஆண்டு நடத்துவதாகத் தாம் பொறுப்பேற்றுள்ள அகில உலக இந்து சமய மகாநாட்டினையொட்டிப் பூர்வாங்க வேலைகள் சிலவற்றைக் கவனிக்கவும், தமிழக முதல்வருடன் சில பல கருத்துக்களைப் பகிர்ந்து கொள்ளவும் இந்த விஜயத்தை அவர் பயன்படுத்திக் கொண்டார்.

மதுரையில் அகில உலகத் தமிழ் மகாநாடு நடந்து முடிந்து சில காலத்தில் ஈழத்தில் நடைபெறவிருக்கும் அகில உலக இந்து சமய மகாநாடு இராசதுரையின் முயற்சியால் மிகச் சிறப்பாக நடந்தேறவும் இலங்கை வாழ் தமிழர் இடரின்றி இன்முகத்தோடு வாழவும் வழி வகுத்துள்ள ஜெயவர்த்தனவை வாழ்த்துகிறோம்.



எங்கள் குடும்பமே கலப்புத் திருமணக் குடும்பம் என்று கூறலாம். என் தந்தை ஆரிய வைசிய மஞ்சப்புத்தூர் செட்டியார்; தாய் சைவப் பிள்ளைமார் வகுப்பைச் சேர்ந்தவர்.

என் திருமணமும் காதல் திருமணம் - கலப்புத் திருமணம்தான்! அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் படிக்கும் போது 1966 பிப்ரவரியில் நாங்கள் முதலில் சந்தித்தோம்; காதலித்தோம். எங்கள் திருமணம் 1975 ஏப்ரலில் நடந்தேறியது. ஆம். ஒன்பது ஆண்டுகள் கழித்து.

என் துணைவி பிராமண வகுப்பைச் சேர்ந்தவர்.

எங்கள் முதல் சந்திப்புக்கும் திருமணத்துக்கும் இடையிலான ஒன்பதாண்டுக் காலத்தில் படிப்பு, குடும்பச் சூழ்நிலை, பணி ஆகிய பல காரணங்களால் நாங்கள் வெவ்வேறு ஊர்களில் பிரிந்திருக்க நேர்ந்தது. பல மாதங்கள் சந்திக்கவே முடியாதிருந்த சமயத்திலும் எங்கள் காதல், கடிதங்களால் வளர்ந்தது. அவள் எழுதிய கடிதங்களும், நான் எழுதிய கடிதங்களும் சுமார் இரண்டாயிரத்துக்கு மேல இருக்கும்.

அவளுடைய படிப்பும், பார்க்கிற அலுவலும் என்னதைவிட மேம்பட்டவை. ஆகாய விமான பைலட் ஒருவருக்கு அவள் குடும்பத்தார் அவளை மணமுடிக்க ஏற்பாடுகள் செய்யத் தொடங்கினார்கள். படிப்பு, பணம், பதவி, அந்தஸ்தும் தூய்மையான காதலுக்குத் தடையாக மாட்டா என்பதை, உறுதியாக நின்று நிரூபித்தாள் இவள்.

திருமணமாகி மூன்று ஆண்டுகள் குழந்தைப் பேறு இல்லாத குறை எங்களைப் பெரிதும் வாட்டியது. ஜாதகப்படி எங்களுக்குக் குழந்தையே பிறக்காது என்று ஒரு ஜோதிடர் கூறினர். 'விநாயகப் பெருமானை என் மனைவியும், சுப்ரமணியக் கடவுளை நானும் மனதாரத் தொழுது வந்தோம். எங்கள் பிரார்த்தனை வீண் போகவில்லை. பிறந்த குழந்தைக்கு 'கணபதி சுப்ரமணியம்' என்றே பெயர் சூட்டினோம்.

இவனுடைய தாத்தாவைப் போல, இவனுடைய திருமணமும் காதல் திருமணமாக - கலப்புத் திருமணமாகத் தான் இருக்குமோ?

யார் கண்டார்கள் - இவன் காலத்தில் Casteless Caste - அதாவது 'கலப்பு திருமணத் தம்பதிகளின் ஜாதி' என்ற ஒ. ஜாதி உருவாக நேர்ந்தாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை!

-ஜே. பி. நாதன்

''ஏண்டா உன் காதலி டாலரை எடுத்து அடிக்கடி வாயில் வைச்சிக்கிறே?''

''அவளுக்கு நகைக்கவென்று ரொம்பப் பிடிக்கும்.''

-இனிய ராஜா





பூக்குழி

லக்ஷ்மி

4

அவள் தனக்குள்ளே சிரித்துக் கொண்டாள். மீண்டும் உறங்கிப் போகக் கூட மனம் இல்லை. அழகிய நினைவுகள் துண்டித்துப் போகுமே? எண்ணிப் பார்க்கும் போதுகூட எத்தனை இன்பம்....ம்! மெல்லப் படுக்கையில் இலேசாகப் புரண்டாள். நினைவுகளும் புரண்டு கொடுத்தன.

அன்று மாலை அவள் பெற்றோர்கள் பக்கத்து ஊரில் வியாதியாக இருந்த நண்பரைப் பார்த்து வரச் சென்றிருந்தார்கள். ''விளக்கு வைப்பதற்குள் வந்துடுவேன்; சமையலை மட்டும் கவனிச்சுடு'' என்று தாயார் உத்தரவிட்டிருந்தாள். இளம் பெண்ணைத் தனியாக விட்டிருக்கிறோமே என்ற கவலை வேறு.

''கவனமா வாசல் கதவைத் தாழ் போட்டுக்க'' என்று நூறு தடவை எச்சரித்திருந்தாள்.

வேலையினின்றும் திரும்பியவள் குளித்து வேறு உடுத்திக் கொண்டுதான் சமைக்கத் துவங்கினாள். அவர்கள் வீட்டில் இரவுச் சாப்பாடுதான் முக்கியமான உணவு. அப்பாவுக்கு பருப்பு சாம்பார், காரமாக ஏதாவது துவையல் என்பது கட்டாயம். அம்மாவிற்குப் பொரியல், அப்பளம் இருந்தாக வேண்டும். சமையல் விரைவில் முடிந்து விட்டது. பொழுது போனதே தெரியவில்லை. அப்படி ஒரு கவனம்.... யார் அவர்? முன்பின் தெரியாது. திருநல்லூர்க்காரன், என்ஜினியர் என்றும், பின்னர் கணக்கர் பேச்சிலிருந்து புரிந்து கொண்டாள்.

மோட்டார் சைக்கிளில் வந்திருந்தார். தலைமைஆசிரியையிடம்பேசிவிட்டுக்கையோடு கொணர்ந்திருந்த கருள்நாடாவை இழுத்து அந்தத் தோட்டத்தில் வெறுமையாகக்கிடந்த பூமியை அளந்து கணக்கிட்டு ஒரு நோட்டுப் புத்தகத்தில் குறிப்பெழுதுவதை அவளது வகுப்பறை ஜன்னல் வழியே பார்த்தாள். குழந்தைகள், சிலேட்டுக்களில் எச்சிலைத் துப்பி அழித்துக் கொண்டு, அவள் கொடுத்த கணக்கை வைத்துக் கொண்டு குழம்பிக் கொண்டிருந்தனர். அவள் மெல்ல, நாற்காலியை விட்டு எழுந்து ஜன்னலருகே வந்து எட்டிப் பார்த்தாள். அவனும் ஜன்னலையே வெறித்துக் கொண்டிருந்தான்!

கல்யாணத்திற்குப் பிறகு தேனிலவின் போது -அந்தச் சம்பவத்தைக் குறிப்பிட்டுச் சிரித்த போதுதான் அந்த ரகசியம் நன்கு விளங்கியது.

தலைமை ஆசிரியையிடம் பேசிவிட்டு, மோட்டார் சைக்கிளில் ஏறப் போனவன் தற்செயலாகத் திரும்புவது போல் ஜன்னல் பக்கம் திரும்பியதும் ... அவள் மெய்சிலிர்க்க மேனி படபடக்க ... குற்ற உணர்வில் சட்டெனத் திரும்பி வந்து ஆசனத்தில் உட்கார்ந்து கொண்டாள்.

''யார் இவர்'' பெயர் என்ன என்றுகூடத் தெரிந்து கொள்ளவில்லையே என்ற தாபம். ஏனோ அவளுக்கு வேலையே ஓடவில்லை.


மோட்டார் சைக்கிளின் படபட ஒலி வாயிலில் கேட்டது. ''என்ன இது? ஒருவேளை அவளது மனத்தின் பிரமையா?'' இன்பமான எதிர்பார்ப்பில், குழம்பைக் கிளறிய கரண்டியுடன் அவள் ஓடி வந்து புறக்கடை வழியாக எட்டிப் பார்த்தாள்.

சந்தேகமில்லை! அவரேதான். அவர்கள் வீட்டு வாயிலில் மோட்டார் சைக்கிளை

காதல் கடிதமும், வழக்கும்

பாரிஸில் மேடம் மார்கரெட் என்னும் பெண்மணி தபால்காரரிடம் தன்னுடைய கணவன் எழுதிய கடிதத்தைக் கண்டதும் அதனை அவரிடமிருந்து பறித்து, படித்துப் பார்த்தாள். அக் கடிதம் அவளுடைய கணவனால் வேறொரு பெண்ணுக்கு எழுதியிருந்த காதல் கடிதமாகும். உடனே அவள் அக் கடிதத்தைச் சான்றாக வைத்து விவாக ரத்துக் கோரி வழக்குத் தொடர்ந்தாள். வழக்கில் வெற்றி பெற்று விவாக ரத்தும் பெற்றுக் கொண்டாள். ஆனால் அதே சமயத்தில் அவள் தபால்காரரிடம் இருந்து அக்கடிதத்தைப் பலவந்தமாகப் பறித்த குற்றத்திற்காகத் தபால் இலாகா வழக்குத் தொடர்ந்தபடியால் அவள் அக் குற்றத்திற்கு அபராதமாக இருபது டாலர் கட்ட வேண்டியிருந்தது.

-என். ஆர். ஜெயச்சந்திரன் பி.காம்.



நிறுத்தி விட்டு, கதவுப் பக்கம் போவதைக் கவனித்து விட்டாள். அம்மா சொன்ன ஜாக்கிரதைத்தனமெல்லாம் மறந்து விட்டது. ஓட்டமாக ஓடி வந்து கதவைத் திறந்தாள்.

''தபால்காரர் குருநாதன் வீடு இது தானே?'' அவன் கேட்டபடி அவளைப் பார்வையில் விழுங்கினான். அவளால் பேசவே முடியவில்லை.

''நீங்க.... நீங்க....''

''முதல்லே கையில பிடிச்சிருக்கிற அந்தப் பயங்கர ஆயுதத்தைக் கீழே வைக்கிறீங்களா? நான் யார்னு சொல்றேன். எங்கே தலைமேலே ஓங்கிப் போட்டு விடுவீங்களோன்னு பயமா இருக்குது.'' கேலி பேசியது அவன் குரல்.

அவளுக்கே வெட்கமாகி விட்டது. கையில் பிடித்த கரண்டியுடன் ... முகம் சிவக்க, தடுமாறியபடி, கதவின் பின் தன்னை மறைத்துக் கொண்டாள்.

''ம்! நீங்கதானே அந்தப் பள்ளிக்கூடத்திலே வேலை பார்க்கிற மிஸ். அகல்யா. கணக்கிலே பெரிய புலியாமே! கேள்விப்பட்டேன். உங்க பள்ளியிலே ஒரு சிறு மண்டபம் கட்ட வேணுமாம். அதுக்காக நான் திருநல்லூரிலேயிருந்து வந்திருக்கேன். என் பெயர் ராஜ்குமார். நான் ஒரு ஏழை என்ஜினியர்'' என்று குறும்பாகச் சிரித்தான்.

''என்ன வேணும்? அப்பா அம்மா வீட்டிலே இல்லை.'' அவள் வெளியே முழுமையாகத் தன்னைக் காட்டிக் கொள்ளாமல் பேசினாள். அவனிடம் பேசிக் கொண்டே நிற்க வேணும் என்ற ஆசை வேறு. அதே சமயம் அவன் யாரோ? எதிர்வீடு, அக்கம்பக்கம் யாராவது பார்த்து விட்டால் என்ன செய்வது என்ற அச்சம் வேறு.

''அப்பா வர நேரமாகுமா?'' அவனும் கேட்டபடி நின்றான்.


''பக்கத்து ஊருக்குப் போயிருக்காங்க. நீங்க பிறகு வாங்க.'' கதவை மூடிக்கொண்டு உள்ளே போய் விட்டாள்.

தேன் நிலவின் போது அந்த நிகழ்ச்சியும் அவர்களது இன்பப் பரிகசிப்புக்கு உதவியது.

''படார்னு கதவை மூடிக்கிட்டுப் போயிட்டயே. நிறைய பத்திரிகைகள் படிக்கிறே போலிருக்குது. இதுமாதிரி பேச ஆரம்பிச்சு, அது எக்கச்சக்கமா எங்கேயோ போய் முடிகிற கதைகளைப் படிச்சிட்டு அரண்டு போய் விட்டிருக்கேன்னு நினைச்சுக்கிட்டேன். வழியெல்லாம் நானே சிரிச்சுக்கிட்டிருந்தேன்.''

''முன்பின் தெரியாதவங்க கிட்ட வெகு நேரம் பேசிக்கிட்டிருந்தா நல்லாவா இருக்கும். அம்மா வேற எச்சரிக்கை செய்திருந்தாங்க. அப்புறம், நீங்க தாகத்துக்குத் தண்ணி கேப்பீங்க. அதே சாக்கா உள்ளே வந்துட்டா...'' பதிலுக்கு அவளும் கிண்டல் செய்தாள்.

''தாகம் நாக்கை வரட்டினது உண்மை தான். உங்கப்பா இருந்தா, பேச்சுக்கொடுத்து, சுத்தி வளைச்சு நாம சொந்தம்னு நிரூபிச்சு, சூடா காப்பி வாங்கிக் குடிச்சிருப்பேன்., தண்ணி வேணும்னு நீ பயந்துடுவேன்னு பேசாம போயிட்டேன்.''





''போனீங்களா? மறுநாளு பள்ளிக்கூடத்திலே அந்த வேப்ப மரத்தடியில என்னைத் தேடிக்கிட்டு வரலே? ரொம்ப தந்திரம்? 'ஒரு வெள்ளைக் கடுதாசி குடுக்க முடியுமா? நோட் புக்கை வீட்ல விட்டுட்டேன்னு' இன்னொரு ஆசிரியையைக் கண்டதும் சமாளிச்சீங்களே!''

''அப்புறம்தான் குளிர்விட்டுப் போச்சே! நேரே உங்கப்பாவைப் பார்க்க வீடு தேடியே வந்திட்டேன்: உறவுக்காரப் பையன்னு, சாப்பிடற அளவுக்கே வந்துட்டேனே'' அவன் சிரித்தான் உல்லாசமாக. அருகில் நின்று சிரிப்பதைப் போல, இன்னமும் அவள் மனத்தில் அது பசுமையாக இருந்தது. கண்களில் துளிர்த்த நீர் தலையணை மீது உதிர, அவளும் நெஞ்சு விம்மி, அவனைப் பற்றியே சிந்தித்தாள்.

கண்டவுடன் காதலித்தான்? ஏன் அவள் மட்டும் என்ன? பார்த்த அளவிலேயே மனத்தைப் பறி கொடுத்தாள்.

அதற்குப் பின் அந்தக் கட்டிடத்தைக் கட்டி முடிக்கும் வரை, மேற்பார்வையிட மேஸ்திரி இருந்தும் அவனே தினமும் வந்து போனான். ''பாவம் பையன்! ஹோட்டல் சாப்பாடு எதுக்குன்னு கூட்டியாந்தேன்'' எனப் பத்தாம்பசலி அப்பா, அடிக்கடி அவனைச் சாப்பிட அழைத்து வருவார். அம்மாதான் சாப்பாடு பரிமாறுவாள். ஆனால் அவர்கள் கண்கள் எத்தனையோ விஷயங்களை அதற்குள் பரிமாறி விடும்.

''உங்கப்பாவே தபால்காரர். காதல் கடுதாசி எழுதினால் ... பயம்மா இருக்கு; உன்னை எனக்குப் பிடிச்சிட்டுது. என்னைக் கல்யாணம் செய்துக்கறயா?'' வேப்பமரத்தடி சாட்சியாக ஒருநாள் அவன் கேட்டே விட்டான்.

மகிழ்ச்சியில் மனம் துள்ள அவள் 'சரி' என்று தலையை ஆட்டிவிட்டுச் சுற்றுமுற்றும் பயத்துடன் ஒரு நோட்டம் விட்டாள்.

பின்னர், பெண் பார்க்கும் படலம். பஞ்சரத்தினத்திற்கு அப்போதுபார்வைக்கோளாறு ஆரம்பமாகி இருக்கவில்லை. பக்கத்து வீட்டுக் கட்டுக் கழுத்தியுடன் வெற்றிலைப்பாக்கு சகிதம் வந்திருந்தாள்; பெண்ணைப் பிடித்திருந்தது. உறவு முறை வேறு. ஆனால் அந்தஸ்து? வேண்டாம் இந்த இடம் என ஒதுக்கி விட்டதாகப் பிறகு ஒரு சேதி அவன் காதுகளுக்கு எட்டியது.

''பணக்காரின்னு அவங்கமட்டுமில். எம் பொண்ணை கண்டேன், கண்டேன்னு கொண்டு போக எத்தனையோ பேரு வருவாங்க.'' குருநாதன் கோபத்தில் மீசையை முறுக்கினார்.

''அழகு மட்டும் இருந்திட்டா போதுமா? சம்பந்தின்னு சொல்லிக்கிட சமநிலை வேணுமா? நான் ஒத்துக்கிட மாட்டேன்!'' பஞ்சரத்தினம் பிடிவாதம் பிடித்தாள்.

''அகல்யாவை நீங்க மருமகளா ஏத்துக் கறதா இருந்தா, எனக்குக் கல்யாணம். இல்லாட்டி இப்படியே கால முச்சூடும் இருந்துடுவேன்'' என்று மகன் பயமுறுத்தினான்.



ஒருத்தி: இந்த அரசியல்வாதியைக் காத லிக்கக் கல்யாணம் பண்ணிக் கொண்டது தப்பா போச்சு.

தோழி: ஏன்?

ஒருத்தி: காதலிக்கும் பொழுது கொடுத்த வாக்குறுதியை எல்லாம் இப்போ காற்றில் விட்டு விட்டார்.!

-சந்திரசேகர்

◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆

''எனக்குக் கல்யாணம் வேணும்னு நானு கேட்டேன்?'' அகல்யா அழுதாள்.

முடிவில் பஞ்சரத்தினம் விட்டுக் கொடுத்தாள். ஆனால் முழு மனத்துடன் இல்லை. அவர்கள் திருமணம் வெகு விமரிசையாகவே நடந்தது. தேன் நிலவிற்கு மைசூருக்குப் புறப்பட்டுப் போன போது அவளுக்கே மலைப்பாக இருந்தது.

ஜகஜ்ஜோதியாக விளக்குகள் எரிந்து கொண்டிருந்த பிருந்தாவனம் பூங்காவில் கணவன் அருகில் உட்கார்ந்திருந்த அவள், ''இது உண்மையா?'' என்று திகைத்தாள்.

''நான் இதுவரை இங்கே வந்ததே இல் லிங்க. என்ன அழகா இருக்கு இந்த விளக்கு ஜோடனை?'' கணவனது அருகே தோள் மீது இடித்தபடி கேட்டாள். அவன் சூடான மூச்சுக்காற்று கன்னத்திலே பட்டது.

''நான் சில தடவைகள் வந்திருக்கிறேன். ஆனால் இப்ப என் கண்ணில தெரியறது ஒரே ஒரு விளக்குத்தான் அகல்யா! உன்னை நான் மனத்தினுள்!

எவ்வளவு ஆழமா நேசிக்கிறேன்னு தெரியுமா நீ என் உயிர்...''

''நானுந்தான்.... உங்களை'' அருகில் யாரோ வருவதைப் பார்த்து அவள் சட்டென எழுந்தாள். முடிக்காமல் அவள் நினைவில், நினைவுகள் மீண்டும் மீண்டும் ஒளிந்து விளை யாடின.

மிக நெருக்கமாக நேசித்த அவர்க ளிடையே இப்போது ஏதாவது வந்து கொண் டிருக்கிறதா? வேற்று நாட்டில் தனியே வசிக்கும் கோனாரினால்.... துணையைத் தேடி விட்டாரா?

''முத்துமாரித் தாயே!'' கண்கள் முத்து முத்தாக நீரைச் சொரிந்தன.

அறால் கடிகாரம் டாண், டாணென்று அடித்தது. ஒன்று, இரண்டு என எண்ணத் துவங்கியவள், ஐந்து என்றதும் திடுக்கிட்டு எழுந்து உட்கார்ந்தாள். விடிந்து ஐந்து மணி. அப்படியானால் அவள் உறங்கவேயில்லையா?

படுக்கையில் இருந்த பஞ்சரத்தினம் இருமினாள். ''அதுக்குள்ளாற எழுந்திட் டியா? என்ன அவசரம்?''

''இன்னிக்கு வெள்ளிக்கிழமை. ஆத்தா ளுக்கு அபிஷேகத்துக்கு இளநீரும், பன்னீரும் அனுப்பி வைக்கறதாச் சொல்லி இருந்தேன். கோயிலுக்குச் சீக்கிரம் போயிட்டு வரணும்.'' சட்டெனப் போர்வையை உதறியவள் அதை மடித்துத் தலையணை மீதுவைத்து கருட்டினாள்.

கனகசபை வீட்டிலிருந்து வந்த இளநீர், பன்னீர், பசும்பால், சந்தனம் என்று, முத்துமாரி, குளிரக் குளிர மூழ்கிக் கொண் டிருந்தாள். அவளது திரு உருவின் மீது பால் செம்பை அர்ச்சகர் சாய்த்த போது,

''தாயே முத்துமாரி! எங்க வாழ்க்கையில இடைஞ்சல் எதையும் செய்திடாதேம்மா. என் வயத்திலே பாலே வார்த்திடு தாயே!'' என்று வேண்டினாள் அகல்யா மனமுருக. ஏனோ அவளுக்கு அப்படி ஒரு தவிப்பு

(தொடரும்)

●●

குன்றாத காதல்

நான் அப்பொழுது ஒரு ராணுவ முகாமில் பணியாற்றிக் கொண்டிருந்தேன். அலுவல கத்தைச் சுற்றிலும் ரோஜாச் செடிகள். மாலை வீடு திரும்பும் பொழுது சில பூக்களைப் பறித்துச் சென்று மனைவிக்குக் கொடுக்க ஆசை. ஆனால் கட்டுப்படுத்திக் கொள்வேன்.

ஒருநாள் மனத்தை அடக்க முடியாமல் முகா மின் அதிகாரியிடம் சென்று சில பூக்கள் பறித்துக் கொள்ள அனுமதி கேட்டேன். அவர் ஒரு குறும்புப் பார்வையுடன் ''ஃபார் ஹூம் (யாருக்காக)?'' என்று வினவினார். அதன் உள்ளர்த்தத்தைப் புரிந்து கொண்டு, ''என் மனைவிக்குத்தான். வேறு யாருக்கும் அல்ல'' என்றேன்.

''How long are you married?'' (உனக்கு மணமாகி எவ்வளவு காலம் ஆகிறது?) ''

''Five years'' (ஐந்து வருடங்கள்)''

''and S..T..I..L..L! (இன்னுமா)!''

என்றார் புருவங்களை உயர்த்தி. அவர் பேச்சில் கிண்டலும், ஆச்சரியமும் நிரம்பி வழிந்தன. பூப்பறித்துக் கொள்ள அனுமதித்தார்.

இருபது வருடங்களுக்குப் பிறகு நான் ஐம்பதை எட்டி விட்டேன். ஒரு தனியார் நிறுவனத்தில் பணி புரிகிறேன். சொந்த வீடு. சுற்றிலும் தோட்டம். முன் பக்கத்தில் பூச் செடிகள். நிறம் நிறமான ரோஜாக்கள்.

சிகப்பு, மஞ்சள், வெள்ளை, ரோஸ் எல்லாம். இன்றும் ரோஜா மலரைப் பறித்து நான் மனைவிக்குக் கொடுக்கிறேன். நரையோடிய தலையில் அதைச் சூடிக் கொள்ளும் பொழுது அவள் முகம் பரவசத்தால் மலர்கிறது. அதைக் கண்டு நானும் அகம் மகிழ்வேன்.

அந்த ராணுவ அதிகாரிக்கு இது தெரிந்தால் என்ன சொல்வாரோ?

-என். வி. சுப்பிரமணியம்



காதல் - ஒரு சுயதரிசனம்

[காதல் தன்னைப் பற்றித்தானே கூறிக்கொள்வதாக அமைந்துள்ளது இக் கவிதை. பிரபல அராபியக் கவி கலீல் ஜிப்ரானின் தலைசிறந்த கவிதைகளில் இதுவும் ஒன்றாகும். எழுதப்பட்ட காலம் இருபதாம் நூற்றாண்டின் தொடக்கம்.]

நான்—
காதலவின் கண்கள்,
ஆன்மாவின் மது,
இதயத்தின் போஷாக்கு.

நான்—
ஒரு ரோஜா மலர்.
எனது இதயம்
காலையில் மலர்கிறது.
என்னை
கன்னி
முத்தமிட்டு,
தனது நெஞ்சின்மீது வைத்து
அணைத்துக் கொள்கிறாள்.

நான்—
உண்மையான அதிர்ஷ்டத்தின்
தங்குமிடம்:
சுகத்தின் தோற்றுவாய்;
அமைதிக்கும்,
நிம்மதிக்கும்
ஆரம்பம்.

நான்—
அழகின் இதழ்களில்
சங்கமிக்கும்
மென்மையான புன்னகை.
என்னை
இளைஞன்
ஆட்கொள்ளும்போது,
உழைப்பின் சிரமங்களை
மறக்கிறான்.
அவனது வாழ்க்கையின்
இனிய கனவுகள்
நிஜங்களாகின்றன.

நான்—
கவிஞனின் எழுச்சி.
சைத்ரிகனின் வெளிப்பாடு.
பாடகனின் ஈர்ப்புச்சக்தி.

நான்—
கருணையுள்ள தாயினால்
போற்றப்படும்
குழந்தையின் இதயத்தில்
ஓர்
புனிதமான
நீர்க்கனியாய்
வாசம் செய்கிறேன்.

நான்—
இதயத்தின் கூக்குரலுக்கு
செவி சாய்க்கிறேன்.
ஆணைக்கு
கட்டுப்படுவதில்லை.
எனது
முழு ரூபம்
இதயத்தின் குரலுக்குத்தான்
தரிசனமாகும்.
ஜீவனற்ற குரலுக்குப்
புலனாவதில்லை.

நான்—
காலத்தைப் போன்றவள்.
இன்றைய தினத்தை
உருவாக்கி
நாளைய தினத்தை—
அழிப்பதில்தான்!
நான்—
கடவுளைப் போன்றவள்,
ஆக்கலிலும் அழித்தலிலும்தான்!

நான்—
மென்மையான
மலரைவிட
இனிமையானவள்.
ஆனாலும்
பயங்கரமான
சூறாவளியைவிட
தீவிரமும் எனக்குண்டு.

என்னை—
பரிசுகள் மட்டுமே ஈர்க்கமுடியாது;
பிரிவு அதைரியப்படுத்த முடியாது;
வறுமை துரத்த முடியாது;
பொறாமை நெருங்கமுடியாது
அறிவின்மை அண்ட முடியாது.

என்னை—
நாடி அலைபவர்களே—
நான்
ஓர் உண்மை.
நாடப்படும் உண்மை.
என்னை
நாடுவதிலும், வரவேற்பதிலும்,
பாதுகாப்பதிலும்
நீங்கள் செலுத்தும்
உண்மைத் தன்மை
எனது குணத்தை
நிர்ணயிக்கும்.



தமிழாக்கம்: பி. ரங்கநாயகி



மனைவிற்குப் பெரிய கடிதமாக எழுதிப் போட்டு விட்டுக் காத்திருந்தாள் அவள். அவனிடமிருந்து பதில் வரும் என்று எதிர் பார்த்தாள். அவனுக்குத் தன் கடிதங்கள் போய்ச் சேரும் என்ற நம்பிக்கையில் இருந் தாள். அவன் விலாசம் கூட எதேச்சையாக யாரோ சொல்லித் தெரிந்துகொண்டதுதான். போன மாதம் வீட்டிற்கு வந்த அந்த மாமா இவன் காப்பி கொண்டு போன போது பேச்சு வாக்கில் சொன்னார்:

''ராமனுதன், உங்க வீட்டுக்குப் பக்கத்து வீட்ல இருந்தானே அந்தப் பையன் பேரு என்ன, பீட்டரா, விக்டரா.. அவனை நேத்து தான் பெங்களூர்ல பார்த்தேன்; என்கூட ரொம்பநேரம் பேசிண்டிருந்தான். தான் தங்கி இருக்கிற இடத்திற்குக் கூட அழைச் சுண்டு போனான்.'' அப்பா நறநறவென்று பல் லைக் கடித்தார். கண்ணும், முகமும் சிவுஞ் வுக்க அவனைப் பார்த்தார். அவள் எதிரில் அந்த மனிதர் அவனைப் பற்றி பேசினது அவருக்குப் பிடிக்கவில்லை. இரும்பவும் வேதாளம்முருங்கை மரம் ஏறி விடுமோ என்று பயந்தார். வேதா, ளம் முருங்கை மரத்திலேயே இருப்பது அவ ருக்குத் தெரியாது. ஒரு சந்தர்ப்பத்திற்காகக் காத்துக் கொண்டிருக்கிறது. அவன் இருப் பிடம் தெரிந்து — அல்லது அவனுக்குத் தன் இருப்பிடம் தெரிந்து ஒரு கடிதம் அல்லது ஒரு பார்வை — ஒரே ஒரு பேச்சு — 'கிளம்பி வா சாரு' என்ற தைரியமான வார்த்தை... கிடைத்தால் போதும். சத்தப் படுத்தாமல், அப்பா வீட்டில் இல்லாத நேரமாகப் பார்த்து- ஒரு துண்டுக் கடிதத்தில் நான்கு வரிகள் எழுதி வைத்துவிட்டு, போட்டுக் கொண்டிருக் கிற நகைகளைக் கழற்றி வைத்துவிட்டுப் போய் விடுவாள். அவன் இருப்பிடம் தெரியாமல், தான் இருக்கிற இடத்தையும் தெரியப்படுத்த முடியாமல் — தூக்கம் வராமல், சாப்பிடப் பிடிக்காமல், மனசு எதிலும் லயிக்காமல், இருட்டை, வானத்தை சுவரை வெறித்துக் கொண்டு ... எத்தனை ராத்திரிகள்.... எத்தனை பகல்கள் ....

''ஏம்மா காப்பியை வச்சுட் டுப் போயேன். எதுக்காக அப்படி நிக்கறே?'' -- அப்பா அடிக்குரலில் சொன்னதும் அவள் காப்பி டபராவை அவரிடம் கொடுத் தாள். மெதுவாய் சினேக பாவத்தோடு புன்னகை செய்தாள். பின் சட்டென்று உள்ளே போய் விட்டாள்.

அவர் கிளம்பின இரண்டு நிமிஷத்திற்கெல் லாம் அவளுக்கு உள்ளே காப்பிப் பொடி இல்லாமற் போயிற்று. அலமாரியைத் திறந்து கொட்டையை எடுத்துக் கொண்டு கூடவே தன் பேனாவையும், ஒரு சின்ன காகிதத்தையும்

ஒரு பெண்ணினால் தன் வாழ்க்கையை சந்தோஷ மயமாக்கவோ துக்ககரமாக் கவோ முடியுமென நினைக்கிறவன் வாலிபன். பெண்ணினால் தன் வாழ்க் கையை சந்தோஷமாக்க முடியும், துக்க கரமாக்க முடியாது என்று நினைக்கிறவன் மத்திய வயதுடையவன். பெண்ணினால் தன் வாழ்வில் சந்தோஷமோ துக்கமோ புகுத்த முடியாது என நினைப்பவன் வயோதிகன்.

—ஷா

திரட்டியவர்: ப. கந்தசாமி



மார்பிற்குள் சொருகிக் கொண்டு, ஒரு ரூபாய் நோட்டும், காப்பிக் கொட்டை பொட்டலமுமாகச் செருப்பை மாட்டிக் கொண்டு,

''அப்பா போயிட்டு வரேன். காப்பிக் கொட்டை அரைச்சுண்டு வந்துடறேன்.''

''அதுக்கு நீ போவானேன். தா, நானே அரைச்சுண்டு வரேன்.''

''வேணாம். போன தரம் நீங்க அரைச்சுண்டு வந்துதான் கறுக அடிச்சுட்டேன். பொடி கூட ரொம்ப நைஸா பில்டர்ல போட்ட உடனே தடதடவென்று இறங்கித்து. இந்தத் தரம் நானே போறேன். கொட்டை வறுக்கிற போது — அரைக்கிற போது கூட இருந்து சொல்றேன்...''

அவரால் ஒன்றும் சொல்ல முடியவில்லை. நடையை விட்டு இறங்கினதும் சின்ன ஓட்டமாக ஓட ஆரம்பித்தாள். 'இத்தனை நேரம் அந்த மாமா பஸ் கிடைத்து ஏறிப் போயிருந்தால்...? பார்க்க முடியாமற் போய் விட்டால்....? பிள்ளையாருக்கு உடைக்க வேண்டிய தேங்காயில் இன்றொன்று கூடிற்று.

அவள் மூச்சிறைக்க பஸ் ஸ்டாண்டை நெருங்கின போது அவர் அங்கே நின்று கொண்டுதான் இருந்தார். கையில் ஏதோ பத்திரிகையை வைத்துப் படித்துக் கொண்டிருந்தார். அவள் தன்னை ஆசுவாசப்படுத்திக் கொண்டு மெதுவாக அருகில் போய் கூப்பிட்டாள்.

''அடேடே....நீயாம்மா...? என்ன விஷயம்?''

''ஒன்றுமில்லே மாமா. இந்தப் பேனாவை விட்டுட்டுப் போயிட்டேளே நீங்க. போனதும் பார்த்தேன். உங்களுடையதாகத்தான் இருக்கும்னு எடுத்துண்டு ஓடி வந்தேன்....''

''ஐயோ... இதுக்காகவாம்மா இப்படி ஓடிவந்தே.... இல்லையேம்மா.... இது என்னுடைய பேனா இல்லையே....''

''உங்களுடையது இல்லையா?... அப்படி யானால் நீங்க வர்றதுக்கு முன்னால சுப்ரமணியம் வந்திருந்தார். அவருடையதாகத்தான் இருக்கு. ஆமாம் மாமா... நீங்க மனோவைப் பார்த்ததாகச் சொன்னீங்களே... எங்கே மாமா?''

''மனோவா, எந்த மனோம்மா....?''

''அதான். மாமா மனோகர் விக்டர். மெட்ராஸ்ல எங்காத்துக்குப் பக்கத்தில ரூம் எடுத்துண்டு இருந்தானே அந்தப் பையன்..''

''ஓ.... அவனா? என்ன விஷயம்மா?''

''ஒண்ணுமில்லே... என் கதை ஒண்ணைப் பத்திரிகையிலே போடறேன்னு வாங்கிண்டு போனான். இதுவரைக்கும் பதில் இல்லே. நாங்களும் மெட்ராஸை விட்டு இங்கே வந்துட்டோமா... அட்ரஸ் தெரிஞ்சிருக்காது. இப்போ உங்க கிட்டக் கேட்டு அவனுக்கு எழுதிப் போடலாம்னு நெனைச்சேன். உங்களுக்குத்தான் தெரியுமே, அப்பாவுக்கு இந்

காத்திருக்கிறாள்...

இந்துமதி

தக் கதை, கவிதை யெல்லாம் பிடிக்கா துன்னு....''

அவர் மெலிதாகச் சிரித்தார்.

''ஆமாம்மா. அவன் ஒரு முரடு. எப்போதுமே மகா முரடு'' என்று மறுபடியும் சிரித்தார். பின், ''அந்தப் பையனைப் பெங்களூரில் பார்த்தேன். அவன்ஜெயநகர் பக்கம் ஒரு வீட்டுக்குள் அழைச்சுண்டு போனான். லேக்வியூ ரோடு. நம்பர்தான் சரியா ஞாபகமில்லே. பத்தோ பதினைஞ்சோன்னு நினைக்கிறேன்...''

லேக் வியூ ரோட், நம்பர் 10 அல்லது 15.

மனசுக்குள் அழுத்தமாகக் குறித்துக் கொண்டாள். அதற்குமேல் அவள் ஓர் ஐந்து நிமிஷம் ஏதேதோ பேசிவிட்டுக் கிளம்பினாள். காப்பிக் கொட்டைக் கடையில் கொட்டையைக் கொடுத்து வறுத்து அரைத்து வைக்கச் சொல்லிவிட்டு போஸ்ட் ஆபீசுக்கு ஓடி, இன்லண்ட் கவர் வாங்கி டியர் மனோ என்று ஆரம்பித்தபோது கண்ணீர் எழுத்துக்களை மறைக்கத் தனியாக ஓர் ஓரமாகச் சுவரைப் பார்த்தபடி நின்று—

* * *

'மனோ, மனோ, மனோ....'

அவன் பக்கத்து வீட்டுப் பால்கனியில் நின்று கொண்டிருக்கிறான். அவள் மொட்டை மாடிக்கு எக்னாமிக்ஸ் புஸ்தகத்தோடு போகிறாள். சட்டென்று அவன் பார்வை அவள் மீது பாய்கிறது.

''ஹாய்....''

''ஹாய்...''

''விச் காலேஜ்....?''

''ஸ்டெல்லா.''

''நான் நியூ ... ஃபைனல் பி. காம்.''

''பர்ஸ்ட் இயர். எக்னாமிக்ஸ் பி.ஏ.''

அன்றைக்கே பஸ் ஸ்டாப்பிங்கில் மனோ அசல் சிகப்பு ரோஜாக்கள் கமல் மாதிரி, அதே சிகப்பில் ஒரு வெளி நாட்டுப் பனியன். நல்ல நீலத்தில் பாண்ட். பளிச்சென்ற சிரிப்பு.

''கோயிங் டு காலேஜ்?''

இது என்ன கேள்வி என்கிற மாதிரி சிரித்தாள் அவள். அவனும் சிரித்துக்கொண்டே சொன்னான்.

''யு லுக் லைக் ஸ்ரீதேவி. அதுவும் சிகப்பு ரோஜாக்கள் படத்துலே இதே மாதிரி ஒரு புடவை. காதுக்கு அருகில் ஓர் ஒற்றை ரோஜா. எக்ஸாக்ட்லி லைக் ஹேர்...!''

அவள் அதிர்ந்து போனாள். சற்று முன் அவனைக் கமல் மாதிரி என்று தான் நினைத்தது ஞாபகத்துக்கு வர... இது என்ன ஒற்றுமை என்று வியந்து போனாள்.

அதன் பின் தினமும் காலையில் பஸ் ஸ்டாப்பிங்கில் சந்திப்பது வழக்கமாயிற்று. அவள் வீட்டை விட்டுக் கிளம்பு முன் ஸ்டீரியோவில் 'நெவர் நோ ஹௌ மச் ஐ லவ் யூ' பெரிதாய் ஒரு தரம் வைத்துச் சட்டென்று நிறுத்திவிட்டுக் கிளம்புவாள்.

''அப்பா போயிட்டு வரேன்...''

அதற்குப் பின்னணியாக அவனுடைய மோட்டார் சைக்கிள் உறுமும். சைலன்ஸர் இல்லாத டபடப சத்தம். தெருவை அதிர அடிக்கும். அவளுடைய அப்பா பல்லைக் கடித்துக் கொள்வார்.

'இவனை யெல்லாம் சோறு தண்ணி இல்லாமல் ஆறு மாதம் ஜெயில்ல போடணும்' என்று நினைத்துக் கொள்வார்.

'இவன் தலையும், டிரஸ்ஸும், கழுத்துல ஒரு சங்கிலியும் அதில் தொங்குகிற லவ்வும்... லவ்வாம் லவ்... பாஸ்டர்ட்ஸ்...'

அவன் அவள் அப்பாவைப் பார்த்தால் மோட்டார் சைக்கிளை நிறுத்துவான். அழகாகச் சிரிப்பான்.

''குட் மார்னிங் அங்கிள்.''

''மார்னிங்...'' — அங்கிளாம்... அங்கிள். சாட்சாத் உங்கம்மாவோட கூடப் பிறந்தவன் பாரு....'

''வரேன் அங்கிள். காலேஜுக்கு நேரமாயிடும்.''

'ஓ.கே.'' — இவனெல்லாம் படிச்சு உருப்படவா போறாங்கள்....?'

அவன் சிரித்துக் கொண்டே போவான். பஸ் ஸ்டாப்பில் அவளைப் பின் பக்கம் ஏற்றிக் கொண்டு கிளம்புவான். மோட்டார் சைக்கிள் ஸ்டெல்லா மாரீஸ் பக்கமும் போகாமல், நியூ காலேஜ் பக்கமும் போகாமல் ஒவ்வொரு நாளும், ஒவ்வொரு இடமாகப் போகும்... மகாபலிபுரம், திருவான்மியூர் பீச், கோவளம் கோல்டன் பீச்...

எல்லாமே ரம்மியமாய், சந்தோஷமாய், சிரிப்பாய்.....

கையைக் கோத்துக்கொண்டு மணலில் நடந்து —

அவன் தோளில் தலையைச் சாய்த்து மணிக் கணக்கில் உட்கார்ந்து—

கொஞ்சம் லேசாக உரிமை எடுத்துக்கொள்கிற அவன் கையைத் தட்டிவிட்டு—

அவன் அதே பொய்க் கோபத்தில் சரேலென்று அவள் முகத்தை உயர்த்தி உதட்டில் தன் உதட்டை அழுத்தி....

ஒரு வினாடிக்குப் பின் அவன் விலகித் தள்ளி உட்கார்ந்து ''போ மனோ. நீ ரொம்ப மோசம்'' என்று செல்லமாய்ச் சிணுங்க...

அவன் 'ஸாரி டியர்' சொல்லி சிகரெட் ஒன்றைப் பற்றவைக்க, அவள் அதைப் பிடுங்கி மணலில் விசிறிப் போட்டு—

''நோ மனோ. ஐ ஹேட் தி ஸ்மெல் ஆஃப் இட்....''

''நான் அப்புறம்தானே பற்ற வைக்கிறேன். முன்னால இல்லையே....''

''அப்புறம் என்றால்...''

''கிட்டே வா காட்டுகிறேன்.''

காதல் கடிதம்!

உலகிலேயே மிக நீளமான காதல் கடிதம் இப்போது பிரிட்டிஷ் மியூஸியத்தில் உள்ளது? முதலாம் எலிஸபெத் ராணியின் அரண்மனையைச் சேர்ந்த ஒரு சேவகர், தன் காதலிக்கு எழுதிய கடிதம் இது? இந்தக் காதல் கடிதம் 400 பக்கங்கள் கொண்டது? -சம்பத்குமார்

''ஓ நோ....'' என்று அவள் சிரிக்க— அவனும் சிரிக்க—

வீட்டில் அவன் ரஸ்புதின் பாட்டுப் போட்டால் அடுத்து இவள் 'நெவர் நோ ஹெள மச் ஐ லவ் யூ' பாட்டுப் பதிலுக்கு அவன் 'டேக் இட் ஆஃப் மீ' வைக்க உடனே அவள் 'லிஸன் டு தி போரிங் ரெயின்' சுழலவிட்டு,டெலிபோனில் விக்னல்கொடுத்து அந்த போன் அடிக்கிறபோதெல்லாம் ஓடி வந்து — அதன் பக்கத்திலேயே தரையின் உட்கார்ந்து முதுகை வளைத்துக் கொண்டு நோட்ஸ் எழுதி—

''ஏம்மா இப்படி எழுதறும். உன் ரூம்ல போய் மேஜையில் உட்கார்ந்து எழுதேம்மா.''

''இல்லேப்பா, இங்கே நன்றுக் காத்து வர்றது. என் ரூம் ஒரே தகிக்கிறதுப்பா.''

அப்பா இல்லாதபோது அவன் போன் பண்ணினுல், 'ஹலோ ஸ்வீட் டியர் ரஸ்புதின்' சொல்லி, அப்பா இருந்தால்—

''ஓ ஷீலாவா? என்ன ஷீல்...? இன்னிக்கா? எட்டரை மணிக்குத்தானே? ஓ.கே. ஐ வில் பி தேர். எக்ஸாக்ட்லி பை எயிட் தர்ட்டி'' சொல்லி—

எல்லாமே பட்டென்று ஒரு நாள் முறிந்து போயிற்று.

''அவனுடி.... அந்தக் கிறிஸ்துவப் பையனுடி... உன் புத்தி ஏன் இப்படிப் போச்சு? எத்தனை நாளா இந்த மாதிரி கத்தறே....?'' என்று கண்ணும் முகமும் பளபளக்க அவளை இழுத்து ஓர் அறை அறைந்து—

''அப்பா ப்ளீஸ் ஸ்டாப் இட். ஐ லவ் ஹிம். நான் அவனைத்தான் கல்யாணம் பண்ணிக்கப் போறேன்.''

''கல்யாணம் பண்ணிக்கப் போறியா.... எங்கே? சர்ச்சலேயா...?''

''சர்ச்சல இல்லேன்னல் ரிஜிஸ்டர் ஆபீஸ்லே.....''

''என்னிக்கு....?''

''நாளைக்கே கூடப் பண்ணிப்பேன்.''

● ● ●

அந்த நாள் அவளுக்குத் தஞ்சாவூரில் விடிந்தது. ஹவுஸ் அரெஸ்ட் மாதிரி வைக்கப் பட்டது. கடிதங்கள், பேனக்கள், காகிதங்கள் எல்லாம் தவிர்க்கப்பட்டன.

ஏதாவது எழுதினல்—

''என்ன எழுதறே?'' — பாட்டி.

வெளியில் போனல்—

''எங்கே போறே.இரு நானும் வரேன்.—'' தாத்தா.

ஒரு வாரத்துக்குள் அப்பாவும் வந்து சேர்ந்தார். பின் ஒரு பெரிய லாரியில் பீரோ, கட்டில், மேஜை, நாற்காலி, துணிகள், புஸ்தகங்கள், பாத்திரங்கள், பக்கெட்டுகள், ஒட்டடைக் கொம்பு, துடைப்பம்....

ஆறு மாதம் பாட்டி தாத்தா வீடு. பின் அப்பா தனி வீடு பார்த்தார். எப்போதும் கூடவே இருந்தார். வெளியிலும் அவர் கூடவே வந்தார். அவளுடைய ஆபீஸ், அவளுடைய காலேஜ் எல்லாம் நின்று போயிற்று. அவளுக்கு எல்லாமே நின்று போய்—

எப்போதாவது ரேடியோகிராமில் ரஸ்புதின் கேட்டு, நெவர் நோ ஹெள மச் ஐ லவ் யூ'வுக்கு அழுது—

காதலிக்காக கண்ணீர் ஊற்று

சிரியாவில் பகிசரா என்றெரு ஊர் இருக்கிறது. அங்கு 450 ஆண்டுகளாக ஓர் ஊற்று கண்ணீரை விட்டுக் கொண்டிருக்கிறது. ஆச்சரியப்பட வேண்டாம். உண்மை. ஓர் அழகியின் மரணத்திற்காக அவ்வூற்று துக்கப் பட்டுக் கொண்டுள்ளது.

அப்துல் கிரே என்பவன் போலந்து நாட்டைச் சார்ந்தவன். ஓர் அழகியின் மீது காதல் கொண்டு அவளைச் சிறை எடுத்து வந்தான். அவனுக்குக் கோபம் வந்தால் தன்னையே மறந்து விடுவான். கோப மிகுதியால் அவன் தன் காதலியைக் கொன்று விட்டான். கோபம்



அடங்கிச் சுய நினைவுக்கு வந்தான். காதலியின் நினைவு அவனைத் துயரத்தில் ஆழ்த்தியது. தின மும் எவ்வளவு அழுதாலும் மனம் சாந்தி பெறவில்லை. தன் மாளிகையிலிருந்து நூறு அடிமைகளைக் கொண்டு வந்து தன் காதலி யின் மறைவுக்காக இடைவிடாது கண்ணீர் விடச் செய்தான். அப்படியும் அவன் மனம் சாந்தியடையவில்லை. எனவே காதலியின் மறைவுக்காகப் பல லட்சம் செலவழித்து, கண் ணீர் வடிப்பது போல் ஓர் ஊற்று அமைத்து, சொட்டு சொட்டாகக் கண்ணீர் விடச் செய்தான். அவன் மறைந்து 450 ஆண்டுகள் ஆகியும் அந்த ஊற்று அப்படியே இன்றும் இருக்கிறது.

'''விந்தை மனிதர்கள் நூலிலிருந்து''

— திருச்செங்கோடு எம்.ஜம்.எம். அக்கிம்

அப்பா 'யூ டோன்ட் நோ ஹெள மச் ஐ லவ் ஹிம் 'என்று முனகி... மனசுக்குள் அலைந்து, ராத்திரி தூக்கமில்லாமல் தவித்து சாப்பாடு பிடிக்காமல் கஷ்டப்பட்டு...

எப்படியோ ஒரு வருஷத்துக்கப்புறம் அவன் வீட்டுக்கு ஒரு கடிதம் எழுதிப் போட்டு, விலாசதார் இங்கே இல்லை என்று அவளுக்குப் புதிதாய்க் கிடைத்த அந்தச் சிநேகிதியின் வீட்டுக்கு அந்தக் கடிதம் திரும்பி வந்து— அவள் அந்தச் சிநேகிதியின் கையைப் பிடித்துக் கொண்டு, காவேரி ஓரம் உட்கார்ந்து. தன் கண்ணும் காவேரியாக மாற — 'மனே, மனே மனே....' இப்போது அவனுடைய விலாசம் கிடைத்ததும்—

மனே—

உடனே வா... உடனே, உடனே, உடனே நான் உன்னுடன் அப்படியே கிளம்பி வரத் தயார்'' என்று எழுதி அந்தச் சிநேகிதியின் வீட்டு விலாசத்துக்குப் பதில்போடச்சொல்லி, கை நடுங்கப் போஸ்ட் பண்ணிவிட்டு, வெளியில் வந்து காப்பிப் பொடியை வாங்கிக் கொண்டு வீட்டுக்கு விரைந்த அவள்....

நான் கண்ட ரஷ்யா

அகிலன்

5. குடும்பம், குழந்தை, பெற்ேறார்


மாஸ்கோவை விட்டு லெனின்கிராடுக்குப் போய்ச் சேருவதற்கு முன்னுல், சோவியத் மக்களின் குடும்ப வாழ்க்கையைப் பற்றிச் சில விவரங்களேக் கூறிவிட விரும்புகிறேன். இந்தப் பயணத்தின் போது மட்டுமல்லாமல், இதற்கு முன்பு இருமுறை சென்ற போதும் நான் நேரில் கண்டும் மற்றவர்களிடம் கேட்டும் தெரிந்து கொண்ட தகவல்கள் இவை.

மாஸ்கோவின் தெருக்களிலும் மற்ற நகரங்களின் தெருக்களிலும் நாம் செல்லும் போது, அவ்வப்போது புது மணமக்களுடன் செல்லும் கார்களேப் பார்க்கிறேம். இங்கே கிறிஸ்தவர்களின் திருமணம் நடைபெற்றுல், வண்ண நிறக் காகித நாடாக்களால் அலங்கரிக்கப் பெற்ற கார்கள் மணமக்களுடன் செல்கின்றன அல்லவா? அப்படிப்பட்ட மூன்று நான்கு கார்கள் மக்களுடனும் அவர்களுடைய நண்பர்கள் உறவினர்களுடனும் திருமண மாளிகைக்குச் (Marriage Palace) செல்கின்றன. அல்லது அங்கிருந்து திரும்புகின்றன.


திருமண மாளிகையில் மணமக்களின் நண்பர்கள்—உறவினர்கள் இருபது இருபத்தைந்து பேர் கூடியிருப்பார்கள். மாளிகையில் பல கூடங்கள் உண்டு. ஒரே நாளில் பல திருமணங்கள் நடைபெறுமாதலால், ஒவ்வொரு கூடத்திலும் மணமக்களும் அவர்களுக்கு வேண்டியவர்களும் கூடியிருப்பார்கள். வரிசைப்படி திருமணங்கள் நடைபெறும். மோதிரங்கள் மாற்றிக் கொள்வார்கள்; திருமணப் பதிவேட்டில் பெயர்களேப் பதிவு செய்து கொள்வார்கள். திருமணம் முடிந்தவுடன், அங்கேயே, வந்துள்ள விருந்தினர்களுக்கு மணமக்களின் சார்பில் ஒயின் வழங்கப் பெறும். பிறகு மணமக்கள் இரண்டாவது உலகப் போரிலோ புரட்சியிலோ உயிர்நீத்த தியாகிகளின் நினைவுச் சின்னங்களுக்குச் சென்று, மலர் வளையம் வைத்து, வணக்கம் செலுத்தி வருவார்கள். திருமணம் முடிந்தவுடன் தியாகியர்க்கு அஞ்சலி செலுத்துவது அந்நாட்டு வழக்கம். அதோடு திருமண நிகழ்ச்சி நிறைவு பெறுவதும் உண்டு. அல்லது, அன்று மாலேயோ மறுநாள் மாலேயோ ஓர் ஓட்டலில் நடைபெறும் விருந்தோடு நிகழ்ச்சி முடிவதும் உண்டு. சுமார் இருபத்தைந்து முப்பது பேர்களிலிருந்து ஐம்பது பேர்கள் வரை விருந்துக்கு அழைக்கப்படுவார்கள்.

முதல் திருமணங்கள் மட்டிலுமே திருமண மாளிகைகளில் நடைபெறும். விவாக ரத்து ஏற்பட்டு மறுமணம் நடைபெற்றுல், அதற்குத் திருமண மாளிகையில் அனுமதியில்லே. அங்கங்கே உள்ள திருமணப் பதிவு அலுவலகங்களில் பதிவு செய்து கொள்ள வேண்டும்.

இப்படி நடைபெறும் திருமணங்கள் மட்டுமின்றி, சர்ச்சுகளிலோ, அவரவர் சமய முறைப்படியோ நடைபெறும் திருமணங்



✖ குழந்தைகளுடன் அப்பா





⌘ காதலர்களின் களிப்பு

களும் உண்டு. ஆனால் சமயச் சார்பில் நடைபெறும் திருமணங்கள் இப்போது அங்கு குறைந்து வருகின்றன. திருமணங்கள் எப்படி நடைபெற்றாலும் அவை பதிவு செய்து கொள்ளப்படுகின்றன. நேரச் செலவோ, பணச் செலவோ, பலரது நெடுநாட்கள் உழைப்போ இல்லாமல் மிகச் சிக்கனமாகவே அங்கு திருமணங்கள் நடைபெறுவது குறிப்பிடத்தக்க விஷயம். சீர்வரிசை, வரதட்சணை, காசுபணம் என்ற பேச்சுக்கே திருமணங்களில் இடமில்லை.

திருமணம் செய்து கொள்ள விரும்புவோர் முன்னதாகவே தங்களைப் பற்றிய விவரங்களைக் கொடுத்துத் திருமண மாளிகைக்கு மனுச் செய்து கொள்ள வேண்டும். பெண்களுக்குக் குறைந்தபட்சம் 18 வயது இருக்கவேண்டுமென்று சில குடியரசுகளிலும், 16, 17 வயது இருந்தால் போதுமென்று வேறு சில குடியரசுகளிலும் விதிகள் இருக்கின்றன. ஒருவேளை இளம் காதலர்கள் நெருங்கிப் பழகும்போது, திருமண விதியில் குறிப்பிட்ட வயதுக்கு முன்பே பெண் கருவுற்று விட்டால், அவர்களுக்காகச் சட்டத்தில் விதிவிலக்குச் செய்யப்பட்டுள்ளது. வயது குறைந்த பெண்களின் விஷயத்தில் பெற்றோரின் இசைவு கோரப்படுகிறது. மற்ற திருமணங்களுக்கும் பெற்றோரின் சம்மதம் தேவைப்படுவதில்லை.

காதல் திருமணங்கள்தாம் பெரும்பாலும் அங்கு நடைபெறுகின்றன. சுமார் 130 மொழிகள் பேசுவோர் கொண்ட, — தனக்கென்று வெவ்வேறு மொழிகளை ஆட்சி மொழிகளாக்கிக் கொண்ட — பதினைந்து குடியரசுகள்



⌘ சாலை மர நிழலில்

இணைந்த — ஒரு மிகப் பெரிய கூட்டுக் குடும்பம் சோவியத் யூனியன். பல்வேறு இனங்கள், மொழிகள், கலாச்சார சமய வேறுபாடுகள் அங்கே இருந்தும்கூட இவற்றையெல்லாம் மீறி அவர்கள் திருமண உறவால் ஒன்று படுகிறார்கள். பொது உடைமைத் தத்துவம் அவர்களுக்கு அளித்துள்ள பொதுவான அரசியல் — பொருளாதார — கலாசார லட்சியம் அவர்கள் அனைவருக்கும் சம வாய்ப்புக்களும் வசதிகளும் அளிக்க முன்வருவதால், தங்களிடமுள்ள பிற வேற்றுமைகளை மறந்து அவர்கள் அதில் ஒன்றுபட்டு நிற்கிறார்கள். அத்தோடு ரஷ்ய மொழியும் அவர்களுக்குள் ஒரு வலிமையான இணைப்புப் பாலமாக விளங்குகிறது. அங்கே யாரும் படிப்பறிவு இல்லாதவர்கள் கிடையாது. ஒவ்வொருவருக்கும் தம் தாய்மொழியோடு ரஷ்ய மொழியும் தெரிந்திருக்கிறது. எனவே காதலர்களுக்குள் — கணவன் மனைவியர்க்குள் — மொழி வேற்றுமை குறுக்கே நிற்க வழியில்லை. அவரவர் தம் தாய்மொழி, கலாச்சாரம், பண்பாடு இவற்றைப் போற்றும் அதே சமயத்தில், ஓர் ஒருங்கிணைந்த சோவியத் கலாச்சாரம் உருவாகவும் காரணமாக இருக்கிறார்கள். புதிய சோவியத் தலைமுறை அங்கு பல்லாண்டுகளுக்கு முன்பே உருவாகி விட்டது. ஒருமைப்பாட்டின் ஆணி வேர் அங்கு உறுதிபெற்று வளர்ந்து வருகிறது.

திருமண மாளிகையில் மனுக் கொடுத்தால், அவர்கள் சுமார் ஒரு மாதம் முதல் மூன்று மாதங்கள் கழிந்த பின்னரே திருமணத் தேதியைக் குறிப்பிட்டு மணமக்களுக்கு அழைப்பு விடுக்கிறார்கள். இளமைக் கவர்ச்சியின் காரணமாக உணர்ச்சி வயப்பட்டுத் திடீரென்று முடிவு செய்துவிட்டு, பிறகு திடீரென்று அவர்களுக்குள் பிணங்கிக் கொண்டு, விவாகரத்துக்கு மனுப்போட்டு விடக் கூடாதல்லவா?

குழந்தைகள் — குடும்ப அளவு

சோவியத் மக்களின் குடும்ப வாழ்க்கை மகிழ்ச்சிகரமாக அமைய வேண்டுமென்பதில் அரசு மிகுந்த கவனம் செலுத்துகிறது. நுணுக்கம் நிறைந்த ஒரு சில உத்தியோகங்களில் ஈடுபடுவோரைத் தவிர, பெரும்பாலான மற்றவர்கள் வேலை காரணமாகக் குடும்பத்தை விட்டுப் பிரிந்திருக்க வேண்டுமென்பதில்லை. ஆண்களும் பெண்களும் வெவ்வேறு அலுவலகங்களில் உழைத்தாலும் அவர்கள் ஒரே ஊரில்தான் குடும்பம் குடும்பமாக வாழ்ந்து வருகிறார்கள். தனது குடிமக்கள் மிகுதியான குழந்தைகளைப் பெறும் பெண்களுக்குப் பரிசுகள், விருதுகள், வேலையிலிருந்து முன்னதாகவே ஓய்வு என்றெல்லாம் பல சலுகைகள் அங்கு அளிக்கப்படுகின்றன. என்றாலும் பெரிய — சிறிய நகரங்களில் வாழும் எந்தக் குடும்பத்தினரும் ஓரிரு குழந்தைகளுக்கு மேல் பெற்றுக் கொள்வதில்லை!

அளவான குடும்பம் என்பது சோவியத் நகரவாசிகளிடையே ஒரு வாழ்க்கை முறையாகி விட்டது. பிறக்கும் குழந்தை ஆணாக இருந்தாலும் அல்லது பெண்ணாக இருந்தாலும் ஒன்று அல்லது இரண்டுதான். இதற்கான காரணத்தை நான் கேட்டறிய முயன்றேன், ஒவ்வொரு குழந்தைக்கும் கல்வி, மருத்துவ வசதி, வேலைவாய்ப்பு, எதிர்காலப் பாதுகாப்பு இவ்வளவும் அங்கு கிடைக்கும் போது, எதற்காக அவர்கள் ஒன்று அல்லது இரண்டோடு நிறுத்திக் கொள்ளுகிறார்கள்? அரசு அங்கே எல்லா வசதிகளையும் குழந்தைகளுக்கு அளித்தாலும் கூட, கணவன் மனைவி இருவருமே வேலைக்குச் செல்வதால் குழந்தைகளிடம் போதிய அன்பு செலுத்தி, நேரடிக் கவனத்தில் வளர்க்க முடிவதில்லை. குழந்தைகளின் எண்ணிக்கை மிகுதியாகி, குடும்பம் பெரிதாகி விட்டால், குழந்தைகளை முழு அன்போடும் பாசத்தோடும் பராமரிக்க முடியாது. எனவே குடும்பம் அளவில் சிறிதாக இருப்பதையே அவர்கள் பெரிதும் விரும்புகிறார்கள். பெண் குழந்தை பிறந்தாலும் ஆண் குழந்தை பிறந்தாலும் அவர்கள் வேற்றுமை பாராட்டுவதில்லை.


ஆனால், மத்திய ஆசியக் குடியரசுகளின் கிராமப் புறங்களில் இந்த அளவுக்குக் குடும்பக் கட்டுப்பாடு பரவவில்லை. உஸ்பெக் குடியரசில், தாஷ்கென்டை அடுத்திருந்த ஒரு கிராமத்தின் கூட்டுப் பண்ணைக்கு முன்பு நான் சென்றிருந்தேன்.

''கூட்டுப் பண்ணையில் ஆண்டு முழுதும் வேலையிருக்காதே? பயிர்ப் பருவக் காலங்களில் தவிர, ஓய்வுக் காலங்களில் தொழிலாளர்கள் என்ன செய்வார்கள்?'' என்று கேட்டேன்.


''குழந்தை உற்பத்தியில் தீவிரமாக ஈடுபடுவார்கள்!'' என்று சிரித்துக்கொண்டே பதிலளித்தார் கூட்டுப் பண்ணையின் தலைவர். ''எங்கள் நாட்டுக்கு அதிகமான குழந்தைகள் தேவைப்படுகிறார்கள் அல்லவா?''

ஓர் உண்மையை நான் நேரில் கண்டு தெரிந்து கொண்டேன். ஆறு ஆண்டுகளுக்கு முன்பு நான் முதலில் சென்றபோது வாழ்ந்ததைவிட, இப்போது சோவியத் மக்கள் அதிக வசதிகளுடன் வாழ்கிறார்கள் என்றால், அதில் அளவான குடும்ப முறைக்கும் கட்டாயம் பங்குண்டு.

(தொடரும்)


சினிமாக் காதல்!
காதல்... வந்திடிச்சு....
ஆசையா.... ஓடிவந்தேன்!....
நீங்களும்
அந்த சினிமாப்
பார்த்தாச்சா!

இன்றே தமிழ்நாடு அரசு பரிசுச் சீட்டு வாங்கிடுவீர்



ஆர்வத்தோடு ஒரு ரூபாய் தருவீர்..
ஐம்பதினாயிரம் ரூபாய் பரிசு பெறுவீர்...
ஆசைக் கனவுகள் நிறைவேறக் கண்டுமகிழ்வீர்!

ஒவ்வொரு வரிசையிலும் இரண்டு முதற்பரிசுகள் ஒவ்வொன்றும்

ரூபாய் **50,000**

3 இரண்டாவது பரிசுகள்
ஒவ்வொன்றும் ரூ. **10,000**



மேலும் ஆயிரக்கணக்கான
இதர பரிசுகள்

குலுக்கல் நாள் 20-9-79
பரிசுச் சீட்டின் விலை ரூ. 1/-

வைரங்கள்

சுஜாதா



அத்தியாயம் 7
சில ஏற்பாடுகள்

வீடு திரும்பியதும் ப்ரேம் தன் தகப்பனரிடம் சென்ருன். மாடிப் பக்கம் இண்டு வைத்த அறையில் பெரிய சேட்டு அகர்சந்த் சரபோஜி மகாராஜா மாதிரி உட்கார்ந்திருந்தார். ''என்ன மகனே?''

''அப்பாஜி! ஒரு நிலத்தை வாங்க வேண்டும். சொந்தக்காரன் தர மாட்டேன் என்கிறுன்.''

''நிலம் எதற்கு?''

''அந்த இடத்தில் வைரம் கிடைக்கும் என்று தோன்றுகிறது.''

''வைரமா?''

விவரமாகக் கேட்ட பின், ''மகனே! நம் குலத்துக்கு இந்த மாதிரி வழக்கங்கள் கிடையாது. தொன்றுதொட்டு நாம் லேவாதேவி கொடுக்கல் வாங்கல், கட்டிடம் கட்டி வாடகைக்கு விடுதல் இவைகளில்தான் நம் அனுபவம். இந்த மாதிரி புதிய சமாசாரங்களில் காசைப் பாழாக்கும் முன் நீர யோசித்துப் பார்க்க வேண்டும்.''

ப்ரேம் தன் பையிலிருந்து அழுக்குக் கல்லை எடுத்துக் காட்டினுன். ''அப்பாஜி இது என்ன?''

''கூழாங்கல்'' என்ருர். ''எனக்குக் கண்ணில் பார்வை மங்கல். கூழாங்கல் மாதிரி தான் தெரிகிறது.''

''இது ஒரு வைரம். தீட்டினுல் இரண்டரை லட்சமாவது பெறும். இந்தக் கல் அந்த நிலத்தில் தோண்டும்போது கீழே கிடைத்திருக்கிறது மண்ணில்! இரண்டரை லட்சம் சம்பாதிப்பதற்கு நீங்கள் எத்தனை நாட்கள் பாடுபட்டிருக்கிறீர்கள். எத்தனை பத்திரங்கள்! எத்தனை அழுக்குப் பாத்திரங்கள்! கைக் கடிகாரங்கள்!'' மறுபடியும் அந்தக் கல்லைப் புரட்டி ''பைப் லைன் என்று சொல்கிருர்கள். அந்தப் பிரதேசத்தில், எங்கோ ஓர் இடத்தில் பைப் லைன் இருக்கிறது. அதை மட்டும் கண்டு பிடித்தால் நாம் கோடீசுவரர்கள்.''

''அதிகப் பணமும் உதவாது மகனே! ஜாக்கிரதை!''

''நான் அந்த நிலத்தை எப்படியாவது அடைவது என்று தீர்மானித்து விட்டேன் அப்பாஜி. அதற்கு வழி சொல்லுங்கள்'' என்ருன் ப்ரேம்.

''முதலில் நிலம் யாருடையது என்று ரிக்கார்டுகளைப் பார்த்துத் தெரிந்துகொள். கிராமத்துக்குப் போய் ரெவின்யூ உத்தியோகஸ்தர்களைக் கேட்டுப் பார். சொத்துக்கு உடைமை யார் என்பது முதலில் தெரிய வேண்டும்.''

''ஒரு மக்கடைக்காரன்.''

''நீ பத்திரத்தைப் பார்த்தாயா?''

''இன்னும் இல்லை.''

''முதலில் அதைச் செய். அப்புறம் லஞ்சம். இங்கே லஞ்சம் நிறையப் பேசும். லஞ்சத்தின் மதிப்பை அறிந்துகொள். வக்கீல் சொல்லுவார், யாருக்கு எவ்வளவு பணம் கொடுத்தால் என்ன என்ன சாதிக்கலாம் என்பதை. லஞ்சத் தொகை முழுவதையும் முதலில் கொடுத்து விடாதே. பத்துப் பைசா கொடு. காரியம் ஆன பிறகு தொண்ணூறு பைசா கொடு, என்ன?'' ப்ரேம் மௌனமாகத் தன் பிதாவின் அனுபவ முத்திரை பதிந்த உபதேச மொழிகளைக் கேட்டான்.

''கோயமுத்தூர்ல வைரக் கல்!'' என்ருர் ப்ரொபஸர் சீனிவாச சர்மா. எப்போதாவது புரொபஸர் காஸ்மா பாலிடன் கிளப்புக்குப் போய் ப்ரிட்ஜ் ஆட்டம் ஆடுவார். தம் நெடு நாள் நண்பர் வேத மூர்த்தியிடம் இந்த வைரத்தைப் பற்றிச் சொல்லாவிட்டால் ப்ரொபஸருக்கு மண்டை வெடித்து விடும்போல இருந்தது.

சர்மாவுக்கு அந்தக் கண்டுபிடிப்பின் வியாபார பொருளாதார சாத்தியங்கள் முக்கியமானதாகப் படவில்லை. ரொம்ப நாள் முன்பு தான் சொன்னது சத்தியமாகி விட்டது பற்றித்தான் அவருக்குப் பெருமை. அதற்காக யாராவது அவரை சபாஷ் சொல்ல வேண்டாமா?

'' 'ஹிந்து'விலே ஆர்ட்டிக்கிள் எழுதியிருந்தேன் வேதம். மினரல்கள் நிறைய இங்கு கிடைக்குது. வைரம் கூடக் கிடைக்கும்னு எழுதினேன்? எப்ப? அன்னிக்கு! பத்து

வருஷம் முந்தி! இப்ப அது உண்மையா யிடுத்து!''

''ஸ்பேட்டைப் போடறியே, துருப்பு இல்லியா?''

''துருப்பு என்ன?''

''சரியாப் போச்சு! டைமண்''

''டைமண் தோக்கி இருக்கே?''

''நாசமாப் போச்சு! போட்டுத் தொலே!''

''ராலிமுக்கு, பாலக்காடு போகிற பாதை யில் ஒரு திருப்பம். அங்கே வைரம் கிடைக் கிறதுக்கு நிறையச் சான்ஸ்!''

அருகே இருந்த சதாசிவ ராவ் இதைக் கேட்டுக் கொண்டிருந்தார். திடீரென்று நிமிர்ந்து எழுந்து சர்மாவிடம் வந்து ''என்ன இடம் சொன்னீங்க?'' என்றார்.

''ராலிமுக்கு.''

தாஸ் கட்டிலில் உட்கார்ந்திருந்தான். பெரியசாமி எதிரே நின்று கொண்டு தரை யைப் பார்த்துக் கொண்டு தன்னை அறியா மல் கோடுகள் கிழித்துக் கொண்டிருந்தான்.

''இந்தப் பிடிவாதம் உதவாது மாப்பிளே உனக்கு! சின்னவரு எவ்வளவு தரேன்னு சொல்றுப்ல?''

எவ்வளவு என்று பெரியசாமி கேட்க வில்லை.

''அவரு சொல்றதைத்தான் கொஞ்சம் காது கொடுத்துக் கேளுங்களேன்!'' என்று உள்ளே இருந்து நிலகத்தின் குரல் கேட்டது.

''தப்பாரு! போட்டன்று...!''

''பொண்டாட்டியைச் சவட்டிக் கிட்டே இரு. அதான் தெரியும். முகத்தின் முன்னால லெச்சிமி வந்து தாண்டவமாடுறு! அது தெரி யலியா?''

''தாஸண்ணே! எனக்கு லெச் சுமியும் வேண்டாம் சரசுவதி யும் வேண்டாம்.''

''பத்தாயிரம் ரூவாடா! கையக லம் தரிசாக் கிடக்கிற நிலத்துக்குப் பத்தாயிரம் ரூவாடா! சுளையா இதை விட வேற என்னவேணும் உனக்கு!''

''வெச்சுக்கிட்டு என்ன செய் யறதுன்னே தெரியாது. என் நிலம் போறுங்க எனக்கு. இதை எனக்கு நல்லாவே தெரியும். இதில இருக்கிற பொளப்புப் போறுங்க. அதிக ஆசைப்படா தேன்னு அப்பாரு சொல்லிக் கிட்டே இருப்பாரு. ஏதோ உளுந்து பயறுன்னு போடுறேன். வருது! தேவைப்பட்டா காசு கிடைக்குது. வாரம் ஒரு தபா ரெண்டு தபா குடிக்கிறேன். சந் தோஷமா இருக்கேன். உங்க மாதிரி நல்ல





மனுசங்க சகவாசம் இருக்குது போதுங்க!''

''கடைசி முறையாச் சொல்றே. நான் எஜமானுக்குத் திட்ட வட்டமாப் பதில் வாங்கியாறதாச் சொல்லியிருக்கேன் இன்னிக்கு. விக்கப் போறியா இல்லையா?''

''இல்லேங்க!''

''தங்கச்சி! கேட்டுக்க! இப்படி ஒரு நல்ல விலையெ எவனும் தரமாட்டான்!''

''நான் என்னங்க சொல்றது? அவர் பிடிவாதம் பிடிச்சாருன்னு!''

''த! சும்மாரு பொட்டைக் கம்மனுட்டி! ஆம்பிளைங்க பேசறப்ப குறுக்க பேசாதே மூதேவிக் கழுதெ!''

திலகத்துக்கு அழுகை வந்தது. என்ன ஒரு பிடிவாதம் இந்த மனுஷனுக்கு. சிங்காநல்லூரில் நல்ல நிலம் தருகிறேன் என்கிறார்கள்; பத்தாயிரம் பணம் தருகிறேன் என்கிறார்கள். வித்துத் தொலைக்காமல் செத்துப்போன அப்பன் ஏதோ சொல்லிப்போட்டுப் போயிட்டான் என்று இப்படி 'எல்லார்' முன்னிலேயிலும் என்னை மூதேவி, கழுதை என்று திட்ட வேண்டியது. குடித்துவிட்டு ராத்திரில கொட்டம் அடிக்க வேண்டியது. ஊமைப் பிள்ளையைப் பற்றிக் கவலையே கிடையாது. பெண்டாட்டி என்பவள் ஓர் அடிமை மாடு! செக்கு மாடு. சுற்றிச் சுற்றி வாழ்க்கை பூரா ஒரே வட்டம்!

''ஏ! காதரு வாடா!'' என்றான் தாஸ்.

காதர் மனோகரியிடம் விளையாடிக்கொண்டிருந்தவன் கடைக்குள் வந்து திலகத்திடம் ''தண்ணி குடுங்க அக்கா!'' என்றான்.

''ஏங்கா அழுவுறீங்க?''

''இல்லே காதர், புகை!''

''அழுவாதீங்கக்கா!'' என்று சொல்லி விட்டுப் பொறுமை இன்றி ஹாரன் அடித்துக் கொண்டிருந்த லாரிக்கு ஓடினான்.

தாஸ் சென்ற பிற்பாடு ஒரு மணி பஸ்ஸில் ஓர் ஆசாமி இறங்கி வந்து சுற்று முற்றும் பார்த்துக் கொண்டே வந்தான். காதில் வைரக் கடுக்கன். கழுத்தில் கருக்குப் போட்ட பட்டு துண்டு. கதர் வேட்டி பாணலி கிராப். உதடுகளைப் பூரா மறைத்த நரைத்த மீசை.

''ராவிமுக்குங்கறது இதுதானே?''

''ஆமாங்க!''

''ஷ்... அப்பாடா!'' என்று கயிற்றுக் கட்டிலில் உட்கார்ந்தான். ''ஒரு காப்பி குடேன்.''



✖ வைரங்கள் - முதல் அத்தியாயத்தில் இடம்பெற்ற சொல் ஒன்று சிலரது மனங்களைப் புண்படுத்தியிருக்கிறது. நாஞ்சான்குளம் ஜெயசீலன் கடிதம் எழுதியிருக்கிறார். 'மருதமலர்' ஆசிரியர் உமா சங்கர் தம் பத்திரிகையில் தலையங்கமே எழுதியிருக்கிறார்.

மிகவும் தற்செயலாக நேர்ந்ததே தவிர எவரையும் புண்படுத்தும் நோக்கம்; தொழுதுண்டு பின்செல்பவர்களில் ஒருவனுன எனக்குச் சற்றேனும் கிடையாது.

-சுஜாதா

''காப்பி இல்லீங்க. மடதான்.''

''சரி, மட கொண்டுவா.''

மட சப்பிக் கொண்டே சதாசிவ ராவ் ''இந்த இடம் உன்னதா?'' என்றார்.

''ஆமாங்க.''

''இதை யாரும் வந்து விலைக்குக் கேட்டாங்களா?''

''ஆமாங்க. ஒரு சேட்டுப் பையன்.''

''வித்துட்டியா?''

''இல்லீங்க. விக்க மாட்டேங்க.''

''வித்துருதே! எத்தனை கேட்டான்?''

''பத்தாயிரம்.''

''பாப்பா யாரு?''

''நம்ம குழந்தைங்க.''

''பத்தாயிரம் கேட்டானு? ஹா!'' என்று சிரித்துக் கொண்டு, ''இந்த இடத்துக்கு மதிப்பு என்ன தெரியுமா? பதினஞ்சாயிரம்!'' தம்முடைய தாராளமான பையிலிருந்து சில காகிதங்களை எடுத்தார்.

''உன் பேர் என்ன?''

''பெரியசாமி.''

''பெரியசாமி! இதில சின்னதா ஒரு கையெழுத்துப் போடு. இல்லே ரேகையா?''

''எதுக்குங்க?''

''எதுக்கா? உன் நிலத்துக்கு! பதினஞ்சாயிரம் ரூபாய்க்கு விக்கறதுக்கு இப்பத்தானே ஒத்துண்டே?''

''நல்லா இருக்கு நியாயம். யோவ், எந்திரிய்யா!''

''பின்ன எத்தினிதான் கேக்கறே கடையோ? பதினேழு அஞ்சுக்கு முடிச்சுடலாமா?''

''நான் நிலத்தை விக்கிறதில்லே. எந்திரிய்யான்னு?''

''பதினெட்டாயிரம்?''

''திலகம்! அந்தக் கம்பை எடுத்துட்டு வா!''

''இருபதினாயிரம் கூட வேண்டாமா?''

''ஓடுய்யா இந்த இடத்தை விட்டு! யாருக்கய்யா வேணும் ஒம் பணம்?''

''மாட்டயா? சரிதான்! சரியான சாவுக்கிராக்கி. உனக்காகப் பஸ் சார்ஜ் செலவழிச்சுண்டு வந்தேன் பாரு! எம் புத்தியைச் சொல்லணும். இந்த பாரு பெரியசாமி, நான் அனுபவஸ்தன். நான் சொல்றதைக் கேட்டு வைச்சுக்கோ. பின்னால அடடா சதாசிவ ராவ் சொன்னரு' அதை நிறைவேற்றலையேன்னு தெரிஞ்சுண்டு விரலைக் கடிச்சுப்பே. இருபதினாயிரம் இந்த நிலத்துக்கு நல்ல ஆஃபர்.''

''நான் வித்தாத்தானே சாமி!''

''நீ விக்காட்டிக் கூட உன்னை விக்க வெக்கலாம்.''

''அது எப்படி? முடியவே முடியாது.''

''அப்படி இல்லேன்னு கூடக் கடைசியில பிடுங்கிண்டுடுவா. ஒத்தைக் காசு கிடைக்காது. நிலத்துக்கு நிலமும் போயிடும்.''

''அது எப்படி? எம்பேர்ல எழுதி வெச்சப் பத்திரம் இருக்குதே.''

''பார்த்துண்டே இரேன்! திடீர்னு உன் மனசு மாறிடுத்துன்னு கோயமுத்தூர்ல ஜங்ஷனுக்கு எதுத்தாப்பல சந்துல சதாசிவ ராவ்னு எந்தக் கடையில கேட்டாலும் சொல்வா. மாடி வீடு. பச்சைக் கேட்டுப் போட்டது. நாய் ஜாக்கிரதைன்னு போட்டிருக்கும். நாயை மிதிச்சுடாம வா! வரட்டுமா? அம்மா! உன் புருஷனுக்குப் புத்தி சொல்லு!''

சதாசிவ ராவ் சென்றதும் திலகத்திடம் ''என்ன சொல்றே?'' என்றான் பெரியசாமி.

''பேசாம வித்துப் போட்டுற வேண்டியது தான்னு சொன்னு என்னைக் கோவிச்சுக்கிட்டு மொத்துவீங்க!''

''இருபதாயிரம்!''

''மனோகரிக்குப் பூரா வைத்தியம் பார்த்துறலாம்.''

பெரியசாமி இதைக்கவனிக்காமல் ''திடீர்னு நம்ம நிலத்துக்கு ஏன் திலகம் இத்தனை மவுசு?'' என்று கேட்டான்.

''தெரியலேங்களே!''

''பக்கத்துலே இவ்வளவு பொறம்போக்கு இருக்குதே. எல்லாரும் நம்ம மேலயே விழுறாங்களே? ஏன்?''

''ஏங்க?''

''எனக்குத் தெரியல திலகம்!''


''எப்படியோ வித்துறலாங்க. நிறையக் காசு வர்றதில்லே.''

பெரியசாமியின் முகம் கடுமையாயிற்று. ''செத்தாலும் விக்க மாட்டேன்.''

''உங்களுக்குக் குடிக்கிறதுக்கும் நிறையப் பணம் கிடைக்குமுங்க!'' என்றாள்.

''சீ! பேசற பேச்சைப் பாரு!'' என்று அவளை அடித்தான். தடுத்த மனோகரியை தூரத் தள்ளினான். பனியன் துண்டை மாட்டிக் கொண்டு பஸ் ஸ்டாண்டுக்குப் புறப்பட்டான். இன்றைக்கு என்று அவனுக்குச் சாராயம் தேவையாக இருந்தது.

(தொடரும்)





அத்தியாயம் 7

சோலைக் காட்சி

மாடி வட்டுதிப் படிகளிலிருந்து இறங்கி மாளிகையை நோக்கி வேகமாக நடந்து சென்ற கடல் ராணியைச் சினமும் சந்துஷ்டியும் கலந்த புன்முறுவலுடன் பார்த்துக் கொண்டு, அவள் எட்ட இருந்த பெரிய மாளிகையில் நுழையும்வரை இமை கொட்டாமல் நின்றிருந்த இந்திரஜித் அனந்த், அவள் கண்ணுக்கு மறைந்ததும் திரும்பவும் படிகளில் ஏறி மிக நிதானமான நடை நடந்து இங்கலண்டும் வில்வரும் இருந்த அந்தப் பழைய அறைக்கு வந்து சேர்ந்தான். திர்க்க யோசனையுடனும் விளக்கம் தர முடியாத புன்சிரிப்புடனும் உள்ளே நுழைந்த அனந்தை இரு கொள்ளைக்காரர்களும் இரண்டு விதக் கண்களுடன் பார்த்தார்கள். இங்கலண்டின் கண்கள் கோபத்தினால் சிவந்து இந்திரஜித்தை எரித்துவிடுவன போல் நோக்கின. ஆனால் வில்வரின் கண்கள் பழைய தோழமையையும் நன்றியையும் அன்பையும் அள்ளித் தெளித்தன. அவன் மீண்டும் பழைய படி நாற்காலியில் நன்றாகச் சாய்ந்து இரு கால்களையும் நீட்டிக் கொண்டிருந்தான். அவன் கையில் அந்த 'ரம்' குப்பி அப்பொழுதும் காட்சியளித்தது. அனந்த் உள்ளே நுழைந்ததும் வில்வரே அவனை ஏதும் நடக்காதது போல் வரவேற்று, ''அனந்த்! மை பாய்! ஐ ஆம் ஸாரி ஃபார் யூ. யூ ஹாவ் கிடர்ண்ட் டு க்விக்'' என்று கூறிக் கடகடவென்று நகைக்கவும் செய்தான்.

இந்திரஜித் அனந்த், இங்கலண்டின் கோபக் கண்களை அலட்சியம் செய்தாலும் வில்வரின் வரவேற்பை மட்டும் மிகுந்த எச்சரிக்கையுடன் ஏற்றுக் கொண்டு ''வில்வர்! நாம் இப்பொழுது மராட்டியில் பேசலாம். இங்கலண்டுக்கும் அந்த மொழி தெரியும்.'' என்று கூறிவிட்டு, ''இங்கலண்ட்! இப்பொழுது கடல் ராணியின் அழகைப் பற்றியோ, அவள் என்னைத் திரும்ப அனுப்பிவிட்டதைப் பற்றியோ விவாதிக்க அவசியமில்லை. ஆனால் நமது மூவருக்கும் உள்ள உறவு எப்படிப் பட்டது என்பதைத் தீர்மானித்துக் கொள்ள வேண்டியது மிக அவசியம்'' என்றும் சொன்னான்.

இங்கலண்டின் நீல விழிகளில் சினம் மறைந்து மதிப்பு உதயமாயிற்று. ''முற்றிலும் சரி'' என்ற அவன் சொற்களில் அந்த மதிப்பு ஒலித்தது.

வில்வர் குடியால் சிவந்து கிடந்த தனது கண்களைச் சற்றே உயர்த்தி இங்கலண்டை நோக்கினான். ''எது முற்றிலும் சரி?'' என்று வினவினான்.

''நம் மூவருக்கும் உள்ள உறவை முதலில் நிர்ணயிக்க வேண்டும் என்று அனந்த் கூறியது'' என்றான் இங்கலண்ட்.

இதைக் கேட்ட வில்வர் நகைத்தான். ''அதில் என்ன சந்தேகம் வந்துவிட்டது இப்போது?'' என்று வினவினான்.

அதுவரை அறையின் நடுவில் நின்றிருந்த இங்கலண்ட் சற்று நகர்ந்து சுவரில் சாய்ந்து கொண்டான். ''கொள்ளைக்காரர்களைப் பிடிக்கச் சபதம் செய்து இவன் வந்திருப்பதாக எனக்குச் செய்தி கிடைத்தது. இந்தப் பிராந்தியத்தில் இவன் எங்கோ உலாவுவதாகவும் தெரிய வந்தது. அதற்காக நான் விசாரிக்க வந்த சமயத்தில் இவனையும் ராணியையும் அந்த இரண்டு வெள்ளை மடையர்களையும் பார்த்தேன். இவன் அகப்பட்டு விட்டான் என்று எண்ணிய சமயத்தில் இவனிடம் நான் அகப்பட்டுக் கொண்டேன். இவனே இங்கு வந்து உன்னைக் காட்டுகிறான். அபாயமான கொள்ளைக்காரனான உன்னைத் தனது நண்பனென்கிறான். கடற் கொள்ளைக்காரியான ராணியை இவன் காப்பாற்றியிருக்கிறான். இரண்டு பிரிட்டிஷ் ஸோல்ஜர்

ஒருவர்: 'காலங்களில் அவள் வசந்தம்'னு ஒருத்தன் தன் காதலியை நினைச்சுப் பாடியிருக்கான் - இது மாதிரி உன்னால் முடியுமா?

மற்றவர்: ஏன் முடியாது? 'நாளங்களில் அவள் வேதாளம்'னு நான் என் மனைவியை நினைச்சுப் பாட முடியும்! - ஸ்ரீ. நடராஜன்





களிடமிருந்து; இவன் கொள்ளைக்காரனானால் கொள்ளைக்காரர்களைப் பிடிக்க வர முடியாது. கொள்ளைக்காரர்களைப் பிடிக்க வருவதானால் மஹாராஷ்டிரா ஸார்கேல் கனோஜி ஆங்கரேயின் வலது கை போன்ற ருத்ராஜி அனந்தின் தம்பியாக உலாவ முடியாது. ஒருபுறம் அரசாங்கத்தின் கையாகவும் இன்னொரு புறம் கொள்ளைக்காரர் நண்பனாகவும் திரியும் இவன் சரித்திரத்தைக் கேட்கக் கேட்க என் தலை குழம்புகிறது'' என்று வேகத்துடன் பேசிய இங்க்லண்ட் ''இவன் சட்டத்தின் பக்கமா நமது பக்கமா?'' என்றும் வினவினான். அவன் தோரணையும் கேள்வி ஒலித்த விதமும் திட்டமான பதிலை எதிர்பார்த்தன.

வில்வர் உடனடியாகப் பதில் சொல்லவில்லை. நீண்ட நேரம் யோசித்தான். பிறகு சிந்தனையிலிருந்து விடுபட்டுத் தெளிவடைந்து ''இங்க்லண்ட்! மை பாய்! யூ டாக் ஆஃப் லா'' (தம்பி இங்க்லண்ட்! நீ சட்டத்தைப் பற்றிக் குறிப்பிட்டாய்) என்று பதிலைச் சிறிது நீட்டினான்.

''ரைட்'' என்றான் இங்க்லண்ட்.

வில்வரின் இதழ்களில் ஒரு கொடூரமான புன்னகை விரிந்தது. ''மை பாய்! யூ நோ எவ்வரிபடி ஹாஸ் ஹிஸ் லா. தி மராட்டாஸ் ஹாவ் தெயர் லா. ஷாஹு ஆஸ் கிங் ஹாஸ் ஹிஸ் லா. ஆங்கரே ஹிஸ் ஓன் லா. வீ பைரேட்ஸ் ஹாவ் அவர் ஓன் லா. லா மை பாய் ஈஸ் எ ப்ராஸ்டிட்யூட். இட் ஸூட்ஸ் த கன்வீனியன்ஸ் ஆப் மெனி'' (தம்பி! ஒவ்வொருவருக்கும் தனிச் சட்டம் இருக்கிறது. மகாராஷ்டிரர்களுக்கு அவர்கள் சட்டம் இருக்கிறது. ஷாஹுவுக்கு அரசனென்ற முறையில் தனிச் சட்டம் இருக்கிறது. ஆங்கரே. அவர் சட்டம் தனி. நம்மைப் போன்ற கொள்ளைக்காரர்கள் தனிப்பட்ட சட்டத்



தைக் கையாளுகிறார்கள். சட்டம் ஒரு விபசாரி மாதிரி. பலருக்கு அவரவர் இச்சையின் இஷ்டப்படி வளைகிறது.) என்று சொன்ன வில்வர் ''ஆம் ஐ ரைட் அனந்த்?'' என்று அனந்த்தையும் கேட்டான்.

அதுவரை தானும் ஆங்கிலத்தை விட்டு மற்ற இரு வெள்ளையர்களையும் விடச் சொன்ன அனந்த், வில்வரின் ஆங்கிலத்தில் மயங்கி அவர்கள் மொழிக்கே திரும்பி ''பர்பெக்ட்லி ரைட்'' என்று திட்டமான குரலில் அறிவித்தான்.

இங்க்லண்டின் முகத்தில் அப்பொழுதும் சந்தேகம் விலகவில்லை. ''யூ மீன் டு சே யூ டோண்ட் பிலீவ் இன் லா ஆப் யுவர் கிங்?'' என்று கேட்டான் இங்க்லண்ட் சந்தேகம் குரலில் ஒலிக்க.

அனந்த் சிறிது யோசித்தான். பிறகு சொன்னான்: ''நான் ஒரே ஒரு சட்டத்தை நம்புகிறேன்'' என்று.

''விச் லா?'' (எந்தச் சட்டத்தை நம்புகிறாய்?) என்று வினவினான் இங்க்லண்ட்.

பதிலுக்குத் தனது கச்சையில் இருந்த இரு கைத்துப்பாக்கிகளையும் தொட்டுக் காட்டினான் அனந்த். ''திஸ் லா. பிஸ்டல் லா.'' (இந்தச் சட்டம். கைத்துப்பாக்கியின் சட்டம்) என்றும் கூறினான்.

இதைக் கேட்ட வில்வர் பெரிதாகக் கைகளைத் தட்டினான். மரக் காலையும் இருமுறை குதூகலமாகத் தரையில் உதைத்தான். ''கரெக்ட்! தட் சஸ் ஒன் லா யூ கான் பிலீவ்'' என்று குதூகலத்தைக் குரலிலும் செய்கையிலும் காட்டிய வில்வர் இங்க்லண்டை நோக்கி, ''மை பாய்! திஸ் பெலோ கன் எ கராக் ஷாட்'' (தம்பி! இவன் மின்னல் வேகத்தில் சுடக் கூடியவன்) என்றும் அறிவித்தான்.

இங்க்லண்ட் அனந்த் தனது படகில் வந்த போதே புரிந்து கொண்டிருந்தான். தான் அசந்து பேசிய சமயத்தில் அனந்த் பிஸ்டலை உருவிய வேகம் அந்த அறையில் கூட அவன் கண் முன் நின்றது. ஆகவே, ''ஐ நோ தட்'' (அது எனக்குத் தெரியும்) என்று கூறினான்.

அதுவரை பலபடிப் பேசி மற்ற இருவரையும் உற்சாகப்படுத்திக் கொண்டிருந்த மரக்கால் மனிதனான வில்வர் மெள்ள விஷயத்துக்கு வந்தான். பேச்சைத் துவங்கு முன்பு 'ரம்மை'ச் சிறிது ஊற்றிவிட்டுக். குப்பியை இங்க்லண்டுக்கும் அனந்துக்கும் நீட்டினான். இருவரும் தங்கள் தலையசைப்பினாலேயே அதை மறுத்துவிடவே வில்வர் குப்பியை மடியில் வைத்துக் கொண்டு அனந்தைத் தனது விழிகளால் ஏறிட்டு நோக்கி ''அனந்த்! இப்பொழுது எங்களை என்ன செய்ய உத்தேசித்திருக்கிறாய்?'' என்று வினவினான். சுத்தமான மராட்டியில் அந்தக் கேள்வியைக் கேட்டான் வில்வர்.

நேரான பதில் வரவில்லை அனந்திடமிருந்து. ''வில்வர்! யுவர் மராட்டி ஈஸ் வெரிகுட்'' (வில்வர்! உன் மகாராஷ்டிரம் மிக நன்றாயிருக்கிறது.) என்று சிலாகித்தான் அனந்த்.

''கொள்ளைக்காரனுக்குப் பல மொழிகள் தெரிய வேண்டும். அவன் ஒரு நாட்டுச் சொத்தை மட்டும் கொள்ளை யடிப்பதில்லை'' என்ற வில்வர் புன்முறுவல் காட்டினான்.

வில்வரின் பேச்சிலிருந்த நகைச் சுவையைப் பெரிதும் ரசித்தான் அனந்த். ''கடல் கொள்ளைக்காரர்களுக்கு நீ சொல்வது மிகவும் பொருந்தும். அவர்கள் பல நாடுகளையும் சுற்றி வருகிறார்கள். கொள்ளை யடிப்பதில் சொந்தநாடு பிற நாடு என்று பார்ப்பதில்லை. இந்த இங்க்லண்ட் பிரிட்டிஷ் கப்பல்களைச் சூறையாடவில்லையா? போர்ச்சுகீஸ், டச்சுக் கப்பல்களை மடக்கவில்லையா? இதில் ஒரு சமதர்மம் இருக்கிறது'' என்று அனந்தும் கூறினான்.

இங்க்லண்டுக்கு இந்தத் தர்க்கமும் தத்துவங்களும் பிடிக்காததால் தரையில் தனது பூட்ஸ்களைச் சங்கடத்துடன் அசைத்தான். ''அனந்த்! வில்வர் உன்னை ஒரு கேள்வி கேட்டான். நீ அதற்குப் பதில் சொல்லவில்லை'' என்று சீறினான்.

''என்ன கேள்வி?''

''எங்களை என்ன செய்யப் போகிறாய் என்று வில்வர் கேட்கவில்லை?''

''கேட்டான்.''

''அதற்குப் பதில் சொல்லவில்லை நீ.''

''சொல்ல அவசியமில்லை.''

''ஏன்?''

''கொள்ளைக்காரர்களுக்குத் தனிச் சட்டமிருக்கிறதென்று வில்வர் சொல்லவில்லையா?''

''ஆம். சொன்னான்.''

''அந்தச் சட்டத்தால் நானும் கட்டுப் பட்டவன்.''

''நீ கொள்ளைக்காரன் என்பதற்கு என்ன அத்தாட்சி?''

''வில்வரை ஏன் காப்பாற்றினேன்? தெறாய் டிட் ஸ்டாண்டல் அன்ட் த ஓல்ட் வுமன் ஷூட் மி!'' (ஸ்டாண்டலும் கிழவியும் என்னையும் ஏன் சுட வேண்டும்?)

இதைக் கேட்ட இங்க்லண்ட் சிறிது குழம்பினான். ''ஹூ ஈஸ் ஓல்ட் வுமன்?'' (கிழவி என்பது யார்?) என்று வினவவும் செய்தான் குழப்பம் துளிர் விட்ட குரலில்.


இங்கு வில்வர் நகைத்தான். ''டோண்ட் யூ நோ இங்க்லண்ட்? அஃப்கோர்ஸ் தட் பெலோ லெப்டினன்ட் ஸ்மித் ஈஸ் *ஓல்ட் வுமன். (உனக்குத் தெரியாதா இங்க்லண்ட்? லெப்டினன்ட் ஸ்மித்தின் பெயர்தான் கிழவி). லெப்டினன்ட் ஸ்மித் காட் த நேம் ஆஃப்டர் கார்வார் பைட். யூ நோ ஹி வாஸ் வெரி ஸ்லோ ஈவென் வென் வித்ட்ராயிங்'' (அவனுக்குக் கார்வார் போரில் அந்தப் பெயர் கிடைத்தது. பின்வாங்கும்போதும் தள்ளாட்டத்தைக் காட்டினான் ஸ்மித்.) என்று விளக்கினான் வில்வர் நகைப்பினூடே.

வில்வரை மேற்கொண்டு பேச விடாமல் அனந்த் குறுக்கிட்டு, ''இங்க்லண்ட்! பிரிட்டிஷ் சோல்ஜர்கள் என்னைச் சுட முயற்சி செய்கிறார்கள். வில்வரை நான் காப்பாற்றுகிறேன். உங்கள் பக்கத்தில் நான் இருப்பது இன்னும் என்ன அத்தாட்சி வேண்டும்?'' என்று வினவினான்.

இங்க்லண்ட் புரிந்து கொண்டதற்கு அறிகுறியாகத் தலையை அசைத்தான்.

* Smithnick named "The old woman" ordered Retreat and pulling off his red coat vanished "Indian Pirates" -By R. N. Saletore Page-79

ஒரு வாலிபனை இரண்டு பெண்கள் காதலித்தார்கள்; அவர்களில் ஒரு பெண் ஏழை. ஆனால் அழகுள்ளவள். மற்றொருவள் பணக்காரி; இருவரில் யாரை மணந்து கொள்வது என்று வாலிபன் தன் நண்பனை யோசனைக் கேட்டான். அதற்கு அந்த நண்பன், 'ஏழையாக இருந்தாலும் பரவாயில்லை; அந்தப் பெண்ணையே மணந்து கொள். அவள்தான் உனக்கு



வாழ்க்கையில் உறுதுணையாக இருப்பாள். மேலும் அவளோ அழகாக இருப்பதாகச் சொல்லுகிறாய்; எனவே அந்த ஏழைப் பெண்தான் உனக்கேற்றவள்' என்று கூறிவிட்டு 'அந்தப் பணக்காரியின் முகவரியை என்னிடம் கொடு' என்றானாம்.

(அறிஞர் அண்ணா சொன்ன குட்டிக் கதைகள் நூலிலிருந்து)

-அரக்கோணம் சங்கரபாண்டியன்

இருப்பினும் கேட்டான்: "நீ எங்களை என்ன செய்யப் போகிறாய் என்பதைச் சொல்லவில்லையே?" என்று வினவினான்.

"இங்கலண்ட்! என்னையும் உங்களையும் பிரித்துப் பேசுவதில்தான் உன் தவறு இருக்கிறது. நாம் என்ன செய்யப் போகிறோம் என்று நான் சிந்தித்துக் கொண்டிருக்கிறேன். இன்று இரவு பதில் சொல்கிறேன்" என்றான் அனந்த். அவன் சொற்களில் ஒரு முடிவு இருந்தது. உறுதியும் ஒலித்தது. இப்படிச் சொல்லிவிட்டு அந்த அறையை விட்டு அகன்றான் அனந்த்.

ஸில்வரும் இங்கலண்டும் அவனை அதற்குப் பிறகு உச்சி வேளைக்குப் பிறகே சந்தித்தார்கள். அவர்களுடன் மாளுமி விடுதியிலேயே உணவருந்த வந்தான் அவன். அவன் முகத்திலிருந்த வியர்வையும், சட்டை, சராய் இவற்றில் காணப்பட்ட ஈரமும் அவன் நல்ல வெய்யிலில் கடலோரத்திலோ கடலிலோ சஞ்சரித்து வந்திருக்கிறான் என்பதை இருவரும் புரிந்து கொண்டாலும் அவனை ஏதும் கேட்கவில்லை அவர்கள். உணவருந்திய பின்பு அறைக்கு அவர்களுடன் வந்த அனந்த் தரையில் படுத்து உறங்க ஆரம்பித்தான். அவன் எதைப் பற்றியும் நினைக்காமல், கவலைப் படாமல் உறங்குவதைக் கண்ட இங்கலண்ட் பெரிதும் ஆச்சரியத்துக்குள்ளானான். ஆனால் அதைப் பற்றிச் சிறிதும் லட்சியம் செய்யாத ஸில்வர் தன் பையிலிருந்த இரண்டு காகிதத் துண்டுகளையும் ஒரு டப்பியையும் எடுத்தான். டப்பியிலிருந்த புகையிலைத் தூளைக் காகிதத் துண்டில் கொட்டிக் காகிதத்தைச் சுருட்டி சிகரெட் தயார் செய்து அதைப் பற்ற வைத்துக் கொண்டு இங்கலண்டிடமும் சிகரெட் சாமக்கிரியைகளை நீட்டினான். இங்கலண்ட் சிகரெட்டை நிர்மாணித்துப் பற்ற வைத்துக் கொண்டு தரையில் உட்கார்ந்து சுவரில் சாய்ந்து கண்களை மூடிக்கொண்டான்.

கிட்டத்தட்ட மாலை நெருங்கும் நேரத்தில் கண் விழித்த அனந்த் மற்ற இருவரையும் நோக்கிப் புன்முறுவல் செய்தான். "அதிக நேரம் தூங்கி விட்டேன்" என்று மன்னிப்புக் கேட்கும் பாவனையில் கூறிவிட்டு வெளியே சென்றான். விளக்கு வைத்த பிறகே அவன் மீண்டும் திரும்பியபோது பழைய கிழிந்த உடைகளுக்குப் பதில் புத்தாடை அணிந்திருந்தான். அந்த உடையில் அவன் தோரணை ராஜ தோரணையாய் இருந்தது. "ஒரு பெண்ணைச் சந்திக்கச் செல்லும்போது பார்ப்பதற்காவது கண்ணியமாய்ச் செல்ல வேண்டும்" என்று தான் புத்தாடை அணிந்ததற்குக் காரணம் சொன்னான்.

"ஸில்வர்! நீங்கள் இருவரும் இங்கேயே இருங்கள். பன்னிரண்டு மணிக்கு உங்களைச் சந்திக்கிறேன்" என்று கூறிவிட்டு அவர்கள் பதிலுக்குக் காத்திராமல் மறுபடியும் வெளியில் சென்றுவிட்டான்.

அறையை விட்டுக் கிளம்பிய அனந்த், மாளுமி விடுதியின் முகப்புப் படிகளுக்கு வந்ததும் மேல் படியில் நின்றபடியே தூரத்தே கடலுக்கருகே வெள்ளிய மணற் பரப்பை அடுத்திருந்த தென்னஞ்சோலையைக் கவனித்தான் சில விநாடிகள். அப்பொழுதுதான் வானத்தில் கிளம்பிய நான்காம் பிறைச் சந்திரன் லேசான கிரணங்களைக் கடல் அலைகள் மீது பரப்ப முற்பட்டுத் தனது பலவீனத்தைக் காட்டினான். ஆனால் அத்தனை பலவீனத்திலும் கடற் கரையோரமாக இருந்த வெள்ளை மணலை அதிக வெள்ளையாக்கவும், பசுமையான தென்னஞ் சோலையைச் சிறிது கருமையாகச் செய்யவும் அவனால் முடிந்தது. பூரணத்வம் பெறாததால் பலவீனமாகக் காட்சியளித்த அந்தப் பிறை மதியின் கிரணங்களில் கூட ஓரளவு ரம்மியம் இருக்கத்தான் செய்தது என்பதை உணர்ந்த அனந்த் படிகளில் இறங்கித் தென்னந் தோப்பை நோக்கி மிக நிதானமாக நடந்து சென்றான். சோலையை அடைந்ததும் மிகுந்த எச்சரிக்கையுடன் அதில் நுழைந்த அனந்த் சோலையின் முகப்பிலிருந்து பத்தடி தள்ளியிருந்த நான்கு தென்னை மரங்களின் நடுவில் பிணைக்கப்பட்டுத் தொங்கிய மரக் கொடி ஊஞ்சலொன்றில் வெள்ளை வெளேரென்ற சேலையை உடுத்தி அப்சரஸ் போல் அமர்ந்திருந்த ராணியைக் கண்டான். கண்டபின் நகரவில்லை அவன். திடீரென்று நகர முற்பட்டபோது அவன் போக்கு மிக விபரீதமாயிருந்தது. இரண்டே எட்டில் பத்து அடிகளைக் கடந்த இந்திரஜித் மரக்கொடி ஊஞ்சலிலிருந்து அவளை அப்படியே தழுவிக் கொண்டு தரையில் விழுந்தான். தரையில் விழுந்தவன் தழுவலைத் தளர்த்தாமல் அவளைக் கட்டிக் கொண்டு மும்முறை மணலில் புரண்டான். பிறகு அவள் இடையில் கை வைத்துச் சேலையைச் சிறிது நெகிழ்த்தவும் தொடங்கினான். (தொடரும்)



காதல் பயிர்

பூம்பாவை மனநிலத்தில்
கண்சாடை விதைவிதைத்து
புன்சிரிப்பு நாற்றுநட்டு
மென்பேச்சு முளையும்விட
கல்யாணக் காற்றினிலே
கருகிப் பறந்ததுவே
முற்றாத காதல்பயிர்
-ச. முத்துமாணிக்கம்



சொற்களை மட்டுமே காதலித்துக் கொண்டிருக்க முடியாது!

நா. பார்த்தசாரதி

அவனுடைய பேச்சில்தான் அவள் மயங்கினாள். வீராவேசமாக, நளினமாக, நயமாக, தீமைகளைச் சாடியும், நன்மைகளை நாடியும் அவன் பேசும் போது அவை அந்தந்த ராகங்களை அந்தந்த லட்சணப்படி பாடும் சங்கீதங்களாக இருந்தன. கேட்பவர்களை வசப்படுத்தின. மயக்கின. பிரமிக்கச் செய்தன.

அவனுடைய வசன நடையில் கவிதை இருந்தது. கவிதை நடையிலோ இங்கிதங்கள் பூத்துக் குலுங்கின; அவள் அவற்றிற்கு அடிமையானாள். அவனால் ஆகர்ஷிக்கப்பட்டாள். அவன் சொன்னதை எல்லாம் செய்தாள். செய்ததை எல்லாம் ஒப்புக் கொண்டாள்.

அவனுடைய எதிரிகள் அவனைப் பற்றிப் பரப்பிய ஆயிரம் குறைகளில் ஒன்று கூட அவள் மனத்தில் உறைத்துப் பாதிக்கவில்லை. உள்ளூறப் பதிந்து அவனைப் பற்றிய நம்பிக்கையை உலைக்கவில்லை.

“நவீன வார்த்தைப் பிரயோகங்கள் என்ற பட்டறையில் யாராலோ தீட்டப்பட்டு மெருகேறிய புதுப் புதுப் பதச் சேர்க்கைகளால் அவன் முதலாளித்துவத்தையும், நிலப்பிரபுக்களையும் திட்டுகிறான். அவனே ஒரு முதலாளி என்பதையும் நிலப்பிரபு என்பதையும் மறைக்கவே அவை பயன்படுகின்றன. உண்மையில் அவன் ஒரு காகிதப் புலி. வார்த்தைப் பந்தல்காரன். சொல் விதூஷகன். சொற்கள் என்ற மகா சமுத்திரத்தில் மேம்போக்கான கரையோரங்களின் ஆழமில்லாத பிரதேசங்களில் நீந்துவது போல் பாவனை காட்டியே பிறரை ஏமாற்றுகிறான். அந்தக் கடலின் பொருளாழங்கள் என்ற பரந்த பிரதேசங்களில் நீந்த அவனுக்குத் தெரியாது. அவனால் முடியாது.”

— என்பது அவனைப் பற்றி அவனுடைய எதிரிகளின் விமர்சனம். அவனுடைய திறமைகளில் பொறாமைப்பட்டே எதிரிகள் அவனை இப்படி விமர்சிப்பதாக அவள் நினைத்தாள். இதனால் அவள் அந்த விமர்சனங்களைப் பொருட்படுத்தவில்லை. அவற்றால் அவள் அவனைக் குறைத்து மதிப்பிடவில்லை.

அவள் அதுதான் — ரம்யா — அவனை — ரகுவைக் காதலித்தாள். ரகுவும் அவளை நேசித்தான். தன் எழுத்தாற்றலும், பேச்சாற்றலும் ரம்யாவைப் போல் பிறரைப் பொறாமைப்படச் செய்யும் ஓர் அழகியைத் தன்னருகே நெருங்கி வரச் செய்ததற்காகக் குதூகலப்பட்டான் அவன்.

நகரில் அவனுடைய சொற்பொழிவு கவியரங்கம், பட்டிமன்றம் ஆகியவை எங்கு இருந்தாலும் ரம்யா முதல் வரிசையில் வந்து அமர்ந்து கேட்டுக் கரகோஷம் செய்வாள். அவள் வராவிட்டால் ரகுவுக்கு மிகப் பெரிய ஏமாற்றமாயிருக்கும். அவனைப் பார்க்கவும், கேட்கவும், போக முடியாவிட்டால் ரம்யாவுக்கும் அது தாங்கிக்கொள்ள முடியாத ஏமாற்றமாயிருக்கும்.

எந்தச் சிறிய பத்திரிகையில் அவன் கவிதையோ, வேறு எழுத்துக்களோ வந்திருந்தாலும் ரம்யா அதைத் தேடிப் போய் வாங்கி வாசிப்பாள். அவளும் அவற்றைப் பற்றி அவன் அபிப்பிராயங்களையோ, பாராட்டுக்களையோ கேட்கத் தயாராயிருப்பதோடு ஆவலாகவும் காத்திருப்பாள். அவர்களுடைய காதலுக்கு வயது கொஞ்சம்தான் ஆகியிருந்தது. அதாவது 3 மாதம் 6 நாட்கள்தான் ஆகியிருந்தது.

மிகவும் நாகரிகமானவையும், பக்கத்துப் பக்கத்துப் பகுதிகளாக இருப்பவையுமான இரண்டு புதிய எக்ஸ்டென்ஷன்களில் அவர்கள் வசித்தார்கள். அவன் கல்லூரிப் படிப்பை முடித்து விட்டு வேலை தேடவோ, பார்க்கவோ அவசியமில்லாத குடும்ப வளப்பத்தின் காரணமாகச் சொற்பொழிவு, கவியரங்கம், பட்டிமன்றத்திற்குப் போவதையே ஒரு வேலையாகச் செய்து கொண்டிருந்தான். அவளோ படிப்பை முடித்து விட்டுக் கல்யாணத்துக்குக் காத்திருந்தாள். இருவருமே ‘காதல்’ என்பதைப் பற்றிக் கதைகளிலும், நாவல்களிலும், புத்தகங்களிலும், கவிதைகளிலும் நிறையப் படித்துக் கிறக்கம் அடைந்திருந்தார்கள். சொக்கிப் போயிருந்தார்கள். சுலபமென்று எண்ணினார்கள். போதாக் குறைக்குத் தமிழ் வாரப் பத்திரிகைகளில் கிறக்கமூட்டும் விதத்தில் எழுதக் கூடிய ரோஜா ரங்கத்துரை, நவஜாதா, கஜேந்திர குமார், சுபகௌரி, சிந்துவதி, பூமாபிரேம தீர்த்தன் போன்றவர்களின் ஜிலுஜிலு எழுத்துக்களால் அவர்கள் இருவருமே போதுமான

> பறவைகளின் பாட்டையும், மலர்களின் கந்தத்தையும், குழந்தையின் சிரிப்பையும், ஞாயிற்றின் ஒளியையும், காற்றின் உயிர்ப்பையும், விண்மீன்களின் கதிர்களையும் காதலர் தூது விடுகிறார்கள். தெய்வத்தின் படைப்பு முழுவதும் காதலுக்குத் தொண்டு செய்யும் பொருட்டே அமைந்திருக்கிறது. உலக முழுதையும் தூது போகச் செய்கிற திறமை காதலர்க்குண்டு.
>
> -பாரதியார்
>
> அனுப்பியவர்: மா. வண்ணமுத்து

அளவு போதையூட்டப் பட்டிருந்தார்கள். அடிக்கடி மாட்டினிஷோவில் நிறையத் தமிழ் சினிமாக்களையும் இந்திச் சினிமாக்களையும் வீட்டுக்குத் தெரியாமல் ஒன்றாகச் சேர்ந்து பார்த்துக் கொண்டிருந்தார்கள். சினிமாக்களையும், அதில் வரும் சொகுசான காதல் வாழ்வையும் பார்ப்பது சுகமாயிருந்தது என்றால் அவற்றை வீட்டுக்குத் தெரியாமல் பார்ப்பதில் இரட்டை மடங்கு சுகம் இருந்தது. இருவருமாகச் சேர்ந்து பார்ப்பதில் அந்தச் சுகம் மூன்று மடங்காயிற்று. இவை தவிர உலகின் சுகமில்லாத சுலபமில்லாத வேறு விஷயங்கள் அவர்கள் சேர்ந்து நினைப்பதுகூட இல்லை.

தாங்கள் இப்படி ஒருவரை யொருவர் எதிர் பார்ப்பது, ஒருவருக்காக மற்றொருவர் தவிப்பது, வேறு யாருக்கும் தெரியாததைத் தெரிய விடாததைத் தங்கள் இருவருக்குள் மட்டும் தெரிய வைத்துப் பழகிப் பரிமாறிக் கொள்வது, இவற்றை எல்லாம் சேர்த்துத் தான் அவர்கள் காதல் என்பதாகப் புரிந்து கொண்டிருந்தார்கள், பழகிக் கொண்டிருந்தார்கள்.

மானாய்ப் பார்க்கின்ற கருவிழிகள்-இள
மயிலாய் நடக்கின்ற நடை-பேச்சில்
தேனாய் இனிக்கின்ற செஞ்சொல்-நல்ல
சங்கீதமாய் ஒலிக்கின்ற இன்குரல்''

என்று ஒரு கவிதையில் அவன் வர்ணித்திருந்ததை அவளைப் பற்றித்தான் என நினைக்கும்படி இருந்தன. அவனும் அவளிடம் அப்படித் தான் சொன்னான். அவள் நம்பினாள். கிறங்கினாள். கிளுகிளுத்தாள்.

அவனுக்குப் பட்டிமன்றமும், கவியரங்கமும் இல்லாத மாலை வேளைகளில் அவர்கள் பார்க்கில் சந்தித்தார்கள். அதாவது அவனே சொல்லிக் கொள்வதுபோல் 'தமிழை வளர்க்க முடியாத மாலை வேளைகளில் காதலை வளர்த்தான்' அவன். ஒரு வேலையும் இல்லாவிட்டாலும் அவனுக்கென்று ஒரு ஸ்கூட்டரை வாங்கிக் கொடுத்திருந்தார் அவன் தந்தை. ஸ்கூட்டர் உள்ள இளைஞனுக்குக் காதலியும் இருந்தால் அவளை எங்காவது அழைத்துப் போகாமலிருக்க முடியுமா? ஆகவே அவனும் அந்த விதியிலிருந்து பிறழாமல் அவளை ஸ்கூட்டரில் பார்க்குக்கு, கடற்கரைக்கு, என்று அவ்வப்போது அழைத்துப் போகத் தொடங்கியிருந்தான். அரும்பு மீசை, ஹிப்பித் தலை, சொர சொரப்போ ஆண்மையோ தெரியாத ஸெலூலாய்ட் முகம், ஸஃபாரி ஷர்ட், என்று அவனுக்காகவே ஒருவித நடை உடை அலங்காரம் பழக்கமாகிப் போயிருந்தது. தமிழ்க் கவிதை ஸஃபாரி ஷர்ட் அணிந்தால் வளராது, ஜிப்பா போட்டுக் கொண்டால் தான் வளரும் என்று ஒரு பட்டிமன்றத்தில் அவனுடைய எதிர் அணித் தலைவன்கூட அவனைக் கிண்டல் செய்து விட்டான்.. அவன் அதைப் பற்றிக் கவலைப்பட்டுக் கொள்ளவில்லை. பட்டிமன்றம் என்றால் பலதும் பேசத்தான் செய்வார்கள். கேட்டுக் கொண்டுதான் ஆக வேண்டும்.

எதிர்த்த அந்தத் தலைவர்களின் தாக்குதல் வார்த்தைகளை எல்லாம் ரம்யாவைச் சந்திக்கும்போது அவள் கூறும் காதல், கனிமொழி' களைக் கேட்கும்போது மறந்து விடுவான் ராஜு.

''நீங்கள் அழகாகப் பேசுகிறீர்கள்.''



"எல்லாம் உன் கடைக்கண் பார்வைகளின் தூண்டுதல்தான் காரணம் கண்ணே."

"நீங்கள் பேசத் தொடங்கினாலே அழகான பதங்கள் உங்களைத் தேடி வந்து சரணடைகின்றன."

"நீ கேட்டு மகிழ்கிறாய் என்பதால்தான் அவை அப்படி வந்து சரணடைகின்றன போலும்! நான் உனக்காகப் பதங்களை மட்டுமென்ன? உயிரையே கூடத் தருவேன்."

வழக்கமாக இப்படி வளர்ந்து முடியும் அவர்கள் உரையாடல். பிறர் கவனத்தை அடிக்கடி கவரக் கூடாதென்பதற்காக அடிக்கடி தாங்கள் சந்திக்கும் பார்க்குகளையும், இடங்களையும், மாற்றிக் கொண்டிருந்தார்கள் அவர்கள்.

ஒருமுறை நகரின் ஒதுக்குப்புறமான அதிகம் மின்விளக்குகள் எரியாத (கார்ப்பரேஷன் புண்ணியத்தில்) ஒரு பார்க்கில் அவர்கள் சந்தித்த போது சில அசம்பாவிதங்கள் நடந்தது.



காதலி: தேவர்கள் கண் இமைக்கிறதே இல்லையாமே! ஏன்?
காதலன்: எதிர்த்தாப்பலே ரம்பையும் ஊர்வசியுமில்ல இருக்காங்க?

-வ. தேனப்பன்

ரகுவும் ரம்யாவும் சிரித்துப் பேசிக்கொண்டிருக்கும் போதே ஹிப்பிகள் போல் தோற்றமுடைய வேறு இரண்டு ரௌடி இருந்தார்கள். அப்பக்கமாக வந்தார்கள். அவர்கள் வந்த போது அப்படி வந்ததையே கவனிக்காதது போல் ரம்யாவும் ரகுவும் பேச்சில் கவனமாக இருந்து விட்டார்கள். வந்தவர்களில் ஒருவன் தன் கையிலிருந்த காகிதத்தில் அம்புசெய்து அந்த அம்பை ரம்யாவின் அழகிய பிடரிக்குக் குறிவைத்து எய்தபோதுதான் அவளது கவனம் கலைந்தது. அவள் எரித்து விடுவதுபோல் அந்த ரௌடி இளைஞர்களை முறைத்துப் பார்த்தாள். அவர்களோ விசிலடித்து அட்டகாசமாகச் சிரித்தார்கள். அவளையும், அவனையும் சீண்டிச் சண்டைக்கு இழுப்பதே வந்தவர்களின் நோக்கமாக இருக்குமென்று தெரிந்தது.

ரகு முஷ்டியை மடக்கிக் கொண்டு போய், அந்த ரௌடிகளோடு தனக்காகச் சண்டை போடுவான் — போட வேண்டும் என்று அவள் ஆசைப்பட்டாள். தான் முகத்தைச் சுளித்ததிலிருந்தே ரகுவுக்கு அப்படி ஒரு ரோஷம் பிறந்து அவர்களை நோக்கிப் பாய்ந்து விடுவான் என்று நினைத்தாள் ரம்யா.

ஆனால் அப்படி ஒன்றும் நடந்து விடவில்லை. முகத்தில் பதற்றமும், பயமும், அவசரமும் தெரிய, "எழுந்திரு! உடனே இங்கேயிருந்து போயிடலாம்! சுத்தக் காலிப்பசங்க நடமாடற இடமாயிருக்கும் போலிருக்கு..." என்று அவள் காதருகே மெல்லச் சொல்லி அவளைத் துரிதப்படுத்தினான் ரகு.

"முதல்லே ஏண்டா அப்படிப் பண்ணினேன்னு அவங்களைப் போய்க் கேளுங்க.... அப்புறம் நாம போகலாம்."

"வேண்டாம் ரம்யா! வீண் வம்பு எதுக்கு? நாம போயிடலாம்.... வா...."

"உங்களை வலுச்சண்டைக்குப் போகச் சொல்லலே. ஆனா வந்த சண்டையை ஏன் விடணும்?"

"முரட்டுப் பசங்க... சேத்துலே கல்லை வீசி எறிஞ்சா அது நம்ம முகத்திலேதான், வந்து தெறிக்கும்."

— பதில் பேசாமல் ரம்யா அவனோடு எழுந்து வெளியேறினாள். அவர்கள் இருவரும் அவசரம் அவசரமாகப் பயந்து வெளியேறுவதைக் கண்டு பின்னால் நின்று அந்த இரு ரௌடிகளும் எக்காளமிட்டுச் சிரித்துக் கைதட்டி ஆரவாரித்தார்கள். ரம்யாவுக்கு அதைக் கேட்டு அப்படியே நாக்கைப் பிடுங்கிக் கொண்டு சாகலாம் போலிருந்தது. ஸ்கூட்டரில் வீடு திரும்பும் போது — அவள் ரகுவோடு ஒருவார்த்தை கூடப் பேசவில்லை. அவள் வீட்டு வாசலில் அவளை அவன் இறக்கி விடும்போது வலுவாகச் சொன்ன 'குட்நைட்'டுக்குக்கூடப் பதிலுக்கு ஒன்றும் சொல்லாமலே நடைப்பிணமாக உள்ளே போனாள் அவள்.

இந்தச் சம்பவத்திற்குப் பின் பத்து நாள் அவள் அவனைச் சந்திக்கவுமில்லை. ஃபோன் பண்ணவுமில்லை. அவனுடைய கவியரங்கங்கள், பட்டிமன்றங்களின் பக்கம் எட்டியும் பார்க்கவில்லை. அவனுக்கு எதுவும் எழுதவுமில்லை. அவனாகவே பேசவும், சந்திக்கவும் முயன்ற போதுகளில் கூடத் தட்டிக் கழித்து விட்டாள். கடைசியில் அவன் மிக உருக்கமான சொற்களால் அவளுக்கு ஒரு கவிதை நடைக் கடிதமே எழுதி மன்றாடினான் :

"முன்னும் பின்னும் இளைத்தாலும்—பிறர்
முயலா வகையில் என்னுள்ளம்
தன்னில் புகுந்த தண்ணுயிலே—நீ
தவிர்த்தால் யானுயிர் வாழ்வேனோ?
பொன்னே பூங்கனவே புத்தமுதே—உன்
புண்ணியக் கடைக்கண் திறவாதோ?
இன்றே வருவாய் கடற்கரைக்கு—நம்
இங்கிதக் கதைகளைப் பேசிடலாம்" —

அவள் மேல் நிறையக் கோபம் இருந்தாலும் இதைப் படித்ததும் ரம்யா மனமிளகி விட்டாள். தானே அவனுக்குஃபோன்செய்து கடற்கரைக்கு வரும் நேரத்தையும் சந்திக்கும் இடத்தையும் சொன்னாள். கவிதையைப்

பாராட்டினாள். அவன் உச்சி குளிர்ந்து போனான். உள்ளம் உருகிப் போனான்.

கடற்கரையில் இருட்டி வெகு நேரமான பின்பும் எழுந்திருக்க மனமின்றி ஒதுக்குப்புறமாக ஓரிடத்தில் தனியே அமர்ந்து ரகுவும் ரம்யாவும் பேசிக் கொண்டிருந்தார்கள். நேரம் போவதே தெரியவில்லை. கடற்கரையில் ஆளரவம் கூடக் குறைந்து விட்டது.

அப்போது தேங்காய் மாங்காய் பட்டாணி விற்கிறவனைப் போல் பரட்டைத் தலையோடு ஒரு சிறுவன் அந்தப் பக்கமாக வந்தான். திடீரென்று அவர்கள் இருவருமே எதிர்பாராத விதமாக ஒரு துருப் பிடித்த பேனாக் கத்தியை எடுத்து நீட்டி, ''மரியாதையா அந்தக் கடிகாரத்தைக் கழட்டிக் குடுத்துட்டு நட! இல்லாட்டிக் கிச்சுப் புடுவேன் கிச்சு'' — என்று சீறினான் அந்தச் சிறுவன். இருவருமே நடுக்கிட்டனர்.

அவனுடைய கத்தி முனை ரம்யாவின் முகத்துக்கு நேராக இருந்தது. ரகு முயன்றால் அந்தத் துருப் பிடித்த கத்தியைப் பிடுங்கி எறிந்துவிட்டு அந்தச் சிறுவனை நாலுபோத்து போத்தி அனுப்பியிருக்க முடியும். அது ரொம்ப சுலபம் என்றே ரம்யாவுக்குத் தோன்றியது.

ஆனால் ரகு அப்படிச் செய்யவில்லை. அவன் முகத்தில் முத்து முத்தாக வேர்த்து விட்டது. பயமும், பதற்றமும், அவசரமுமாக மலைத்துப் போய் நின்று விட்டான் அவன். எதிரே, பாம்பையோ, பாயும் புலியையோ, பார்த்தவன் போல் அந்தத் துருப் பிடித்த பேனாக் கத்தி வீரனைக் கண்டு நடுங்கி நின்று விட்டான் அவன். அதோடு போகாமல் அவளுக்கு அவன் யோசனையும் கூறினான்:

''வீண் வம்பு வேண்டாம். கழட்டி, அவன் மூஞ்சியிலே எறி, அந்த வாட்சை. இதே மாதிரிப் புது வாட்ச் நான் வாங்கித் தரேன் உனக்கு.''

ரம்யாவுக்குப் பற்றிக் கொண்டு வந்தது ஆத்திரம். அவள் ரகு சொன்னபடி செய்யவில்லை. கத்தி இன்னும் அவள் கழுத்தருகே நெருங்கியது.

''ஐயையோ! கத்தியாலே குத்திடப் போறான்... சீக்கிரம் சனியனைக் கழட்டி அவன் மூஞ்சியிலே எறி!''

''தூ!.... நீங்களும் ஒரு ஆம்பிளையா?''

''நமக்குள்ளே அப்புறம் சண்டை போடலாம்! முதல்லே வாட்சைக் கழற்றி அவன் மூஞ்சியிலே எறி... வாட்சை விட நீ முக்கியம். குத்துப்படாமல் நீ தப்பியாகணும்'' — என்று கூறியபடியே அவன் பலாத்காரமாக அவள் திமிறுவதையும் பொருட்படுத்தாமல் வாட்சை அவள் கையிலிருந்து கழற்றி அந்தச் சிறுவனிடம் எறிந்தான். சிறுவன் வாட்சை எடுத்துக் கொண்டு ஓடத் தொடங்கினான்.

ரம்யா அவனைத் துரத்த முற்பட்டு அது முடியாமல் பாதியிலேயே தளர்ந்து மூச்சு இரைக்க நின்று விட்டாள்.

ரகு அவளருகே சென்று, ''சீக்கிரம் வா! ஸ்கூட்டரில் கொண்டு போய் வீட்டில் 'டிராப்' செய்கிறேன். நாளைக் காலையிலேயே நானே வந்து அழைத்துப் போய்ப் புது 'வாட்ச்' வாங்கித் தருகிறேன்'' — என்று கெஞ்சினான்.



அவள் அவன் நின்ற திசையை நோக்கிக் காறித் துப்பினாள். கையைச் சொடக்கு முறித்தாள்.

''நான் உன் கூட வரவில்லை. எனக்கு வீட்டுக்குப் போய்க் கொள்ள தெரியும்'' — என்று அவனை லட்சியம் செய்யாமலே பீச் ரோட்டுக்கு விரைந்து அவன் கண் காணவே ஒரு டாக்ஸியை நிறுத்தி ஏறி விட்டு சென்றாள் ரம்யா. அவ்வளவு கோபத்தோடு அவளை அவன் அதற்கு முன் என்றுமே பார்த்த தில்லை. தன்னை அத்தனை துச்சமாக அதற்கு

◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆

எங்கள் நண்பர் ஒருவர் இளம் வயதுதான். இன்னும் திருமணம் ஆகவில்லை என்றாலும் தலையில் வழுக்கை விழுந்து விட்டதால் அவர் தலைக்கு 'விக்' (Wig) வைத்துக் கொண் டிருந்தார். போன வாரம் ஸ்ரீரங்கம் கோவிலில் அவர்கள் வீட்டு மண்டகப்படி இருந்ததால் அவர் குடும்பத்தாரும் அவரும் கோவிலுக்கு சென்றிருந்தனர். அவர்கள் சமூகத்தில் பெண் பார்க்கும் வழக்கம் இல்லை. இருந்தாலும் அவர் தாயார் கொஞ்சம் நாகரீகம். ஆதலால், பெண் வீட்டாரைக் கோவிலுக்கு வரச் சொல்லி மண்டகப்படி சமயத்தில் பெண்ணும் பிள்ளையும் ஒருவரை ஒருவர் பார்த்துப் பிடித்து விட்டால் திருமணம் செய்து விடலாம் என்று ஏற்பாடு செய்திருந்தார். கோவிலில் பூஜை நடக்கும் பொழுது பெண்ணும் பிள்ளையும் பரஸ்பரம் பார்த்துப் பிடித்து விட்டது.



பூஜை முடிந்தவுடன் கோவில் வழக்கப்படி எல்லோருக்கும் பரிவட்டம் கட்டப்பட்டது. ஆனால் பரிவட்டத்தை எடுக்கும் பொழுதுதான் நேர்ந்தது அனர்த்தம். பரிவட்டத்தை எடுக்கும் பொழுது நண்பரின் ''விக்''கும் அதனுடன்வந்து விட்டது. பெண்ணைப் பார்த்து மயக்கத்திலிருந்த நண்பரோ அதைக் கவனிக்கவில்லை. திடீரென்று மொட்டையாகக் காட்சியளித்த அவரைக் கண்ட தும் பெண்ணின் முகம் போன போக்கைப் பார்க்க வேண்டுமே! இனி இந்தத் திருமணம் அவ்வளவுதான் என்று எங்களுக்குத் தோன்றி விட்டது. ஆனாலும் அந்தப் பெண் நண்ப ரையே மணந்து கொண்டதுதான் அதிசயம்.

-சுசீலா கிருஷ்ணமூர்த்தி

◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆

முன் என்றுமே அவள் நடத்தியதில்லை என்ப தும் நினைவு வந்தது அவனுக்கு. கடற்கரையில் வேலை கெட்ட வேளையில் கையில் கத்தியோடு வந்து மிரட்டுபவனிடம் அவளோ தானோ ரத்தக் காயம் படும்படி ஆகிவிடக் கூடாது என்பதற்காகத் தான் கூறிய சுலபமான யோசனையை, அவள் ஏன் இவ்வளவு தாரம் தவறாகப் புரிந்து கொள்ள வேண்டுமென்பது தான் அவனுக்கு விளங்கவில்லை. அதுபோல் ஆயிரம் ரிஸ்ட் வாட்சுகளை வாங்கும் பண பலம் தனக்கு உண்டு என்பது அவளுக்குத் தெரிந்திருந்தும் அவள் ஏன் கொசுக்கடி போன்ற இந்தச் சிறிய நஷ்டத்தை இவ்வளவு தூரம் பெரிதுபடுத்துகிறாள் என்பது அவனுக் குப் புரியாத தாயிருந்தது.

அடுத்த நாள் காலை அவன் அவளைத் தேடிப் போனான். வீட்டு வாசலில் அவனுடைய ஸ்கூட்டர் தென்பட்டதுமே தயாராகக் காத்திருந்த மாதிரி ஓடி வந்து நாலைந்தாக மடித்த சில காகிதக் கத்தைகளை அவன் முகத் தில் எறிந்து விட்டுப் போனாள் ரம்யா. அவன் திகைப்பு அடங்குவதற்குள் திரும்பிச் செல்லும் புயலாக அவள் உள்ளே ஓடி விட்டாள்.

அவை எப்பெப்போதோ அவளுக்கு அவன் எழுதிய கவிதைகள் — கடிதங்கள். அதோடு புதிதாக ஒரு துண்டுக் கடிதமும் இருந்தது.

''கோழையே! உனக்காக என் பொன்னான சாயங்காலங்களை வீணாக்க இனி நான் தயாரா யில்லை. கவியரங்கங்களிலும், பட்டிமன்றங் களிலும், நீ உதிர்க்கும் அழகிய சொற்கள் உன் ஆண்மையின்மையின் வெளிப்பாடு களே என்பதைப் புரிந்து கொண்டேன். ரோஷமும் மானமுமுள்ள ஆண் பிள்ளை ஒரு வனைத்தான் ஒரு பெண் காதலிக்க முடியுமே தவிர ஆண் பிள்ளையைப் போல் தோன்றும் மான ரோஷமில்லாத கோழைகளைக் காத லிக்க முடியாது.

வெறும் அழகிய சொற்களை மட்டுமே காதலித்துக் கொண்டிருக்க நான் இனியும் பேதையில்லை. சொற்களை வைத்துக் கவியரங் கமும், பட்டிமன்றமும் நடத்தலாம். கையா லாகாத அரைவேக்காட்டுக் காதல் கவிதைகள் எழுதலாம். ஆனால் காதலிக்க முடியாது. காதலிக்கப் பௌருஷம் வேண்டும். சீறிப் பாயும் ஆண்மை வேண்டும். ரோஷம் வேண் டும். மெல்லிய இங்கிதமான சொற்களை விடச் கரடுமுரடான ஆண்மையையும், ரோஷத்தையுமே நான் காதலிக்க முடியும். தயவு செய்து இனி இங்கே என்னைத் தேடி வராதே. வெறும் ரோஷத்தைக் கூடத் தர முடியாத நீ எனக்காக உயிரையே தரச் சித்த மாக இருப்பதாய் எத்தனை முறை கூறினாய்?

இப்படிக்கு,
உன்னை இனி என்றுமே வெறுக்கும்
ரம்யா

என்று கடிதம் முடிந்திருந்தது. கடிதம் மட்டு மென்ன? எல்லாமே முடிந்துதான் போயிருந்தது.

ரகு, ஸ்கூட்டரைத் தள்ளிக் கொண்டே, நடைப்பிணமாக மேலே நகர்ந்தான். அதை 'ஸ்டார்ட்' செய்து அதன் மேல் ஏறிச் சவாரி செய்யும் ஞாபகமேயின்றி மறதியாக எவ் வளவு தூரம்தான் அதை அவன் அப்படித் தள்ளிக் கொண்டு போனான் என்று தெரிய வில்லை.



கோழி கூவிற்று... சண்முகத்திற்கு விடிவு காலம் பிறந்தது!

கடந்த ஆண்டு வரை பண்ணையாளாக ஏழ்மையில் வாடி வந்தவர் சண்முகம். இன்றோ அவர் வாழ்வு மலர்ந்து விட்டது. அவரது மலர்ச்சிக்குக் காரணம் இந்தியன் ஓவர்ஸீஸ் வங்கி அளித்த கடனுதவி மூலம் அவர் துவக்கியுள்ள கோழிப்பண்ணை!

ஏழை சண்முகம், துயர் சூழ ஒருநாள் ஐ.ஓ.பி.யின் கிளையினை அணுகினார். கிராம வளர்ச்சியில் நாட்டம் கொண்ட அக்கிளை மேலாளர் சண்முகத்தின் கதையை அக்கறையுடன் கேட்டு, வங்கியின் கோழி வளர்ப்புத் திட்டத்தின் கீழ் ஒரு சிறு கோழிப்பண்ணை அமைத்திட அறிவுரைகூறி கடனுதவியும் அளித்தார்.

சிறிய கோழிப்பண்ணையினை அமைத்து, அதனின்று பெற்ற உபரி வருமானத்தினால் வாங்கிய கடனையும் திருப்பி அடைக்க ஆரம்பித்து விட்டார் சண்முகம்.

கோழிப் பண்ணைகள் தவிர, பால் பண்ணை, ஆடு வளர்ப்பு, மீன் வளர்ப்பு, வாத்து வளர்ப்பு, தேனீ வளர்ப்பு, பட்டுப்புழு வளர்ப்பு போன்ற தொழில்களுக்கும் கடனுதவி எளிதில் கிடைக்கும்.

உங்களிடம் நாங்கள் வேண்டுவதெல்லாம் கடின உழைப்பு, தளராத முயற்சி, நவீன முறைகளைக் கற்றுக் கொள்ளும் ஆர்வம்.



அருகேயுள்ள எமது கிளைக்கு வருக—
வாழ்வு மலர வழிகாட்டும் அரிய பல திட்டங்களைப் பெறுக.

இந்தியன் ஓவர்ஸீஸ் பாங்க்

உங்கள் வளர்ச்சிக்கோர் உத்தம நண்பன்

IDB/91A 79 Tam

காதல் = ரூ 122 + அப்பாவின் கர்ண கடூரமான திட்டுக்கள்



பி. ரங்கநாயகி

விடிந்தால் வள்ளிசாகக் கண்ணனிடம் நூறு ரூபாய் வெட்டியாக வேண்டும்! கையில் என்னவோ தற்போதைக்குப் பணம் இருக்கிறது. ஆனால் தண்டமாகப் போகப் போகிறதே என்கிற வயிற்றெரிச்சல்.

''சாரதி நீ ஓர் இடியட்டுடா... தைரியத்துக்கும் காதலுக்கும் என்னடா சம்பந்தம்... சூழ்நிலையும், அதிர்ஷ்டமும்தாண்டா காதலுக்கு அடித்தளம். இது ரெண்டும் இருந்துட்டா, கோழைக்குக்கூடத் தானே காதலிக்கும் தைரியம் வந்துடும்'' என்றான் கண்ணன் ஒரு நாள்.

''போடா ஃபூல்! சூழ்நிலை, ஊழ்வினை, அதிர்ஷ்டம்னு ஏன்டா அநாவசியமா அளக்கறே... எல்லாம் நம்ப கிட்டத்தாண்டா இருக்கு'' – இது நான்.

''வாய் கிழியப் பேசறயே... நீயே ஒரு பெண்ணை 'லவ்' பண்ணிக் காட்டேன்... ஆறு மாசம் டைம் தரேன்... ஓகே?''

''ஆறு மாசம் எதற்கு? ப்ச்... மூன்று மாசம் போறும். லவ் பண்ணிக் காட்டிட்டா என்ன சாலென்ஜ்?''

''நூறு ரூபாய்.''

''ஓகே.'' ஒப்புக் கொள்ளப்பட்டது.

ஏதோ அசட்டுத் துணிச்சலில் ஒப்புக் கொண்டேனே தவிர, போகப் போகத்தான் அது எவ்வளவு பைத்தியக்காரத்தனமான 'சாலென்ஜ்' என்று எனக்குப் புரிந்தது.

கண்ணனுடன் பந்தயம் போட்ட பிறகு யாரைக் காதலிக்க ஆரம்பிக்கலாம் என்று நான் யோசனை பண்ண ஆரம்பித்து நாட்கள் ஓடிக் கொண்டிருந்தன.

> நீங்கள் எந்தப் பெண்ணை இருதயபூர்வமாக நேசிக்கிறீர்களோ அவள், எப்போதும் உங்கள் கண்களுக்குக் குமரியாகவே காணப்படுவாள். அவளின் வயோதிகம் உங்கள் கண்களுக்குத் தெரியாது. காலம் அவள் முகத்தில் வயோதிகக் கோடுகளைப் போட்டுக் காட்டலாம். அவள் முகத்தில் நிரைகளை நிரப்பிக் காட்டலாம். ஆனால் நீங்கள் அவளை உண்மையாக நேசிப்பீர்களேயானால் உங்களால் முதலில் காதலிக்கப்பட்ட அவள்-உங்கள் இருதயத்தைக் கவர்ந்து கொண்ட அவள்-எப்போதும் அப்படியே இருப்பாள்.
>
> – இங்கர்சால் –கந்தசாமி

எதுவுமே சரிப்பட்டு வரவில்லை.

நாளை விடிந்ததும் கண்ணனுக்கு நூறு ரூபாய் அழுதாக வேண்டும் என்ற வேதனை பிடுங்கித் தின்றது. தோல்வி மனப்பான்மை வேறு வாட்டி எடுத்தது.

சற்று மாறுதலுக்காக ஏதாவது படம் பார்க்கப் போகலாம் என்று கிளம்பினேன். ஓடுகிற படத்தில் 'கல்யாண ராமன்' நன்றாக இருக்கிறது என்று யாரோ சொன்னது நினைவில் வர, அலங்கார் தியேட்டருக்குப் போன போது இரண்டு கிலோ மீட்டருக்குக் கியூ நின்று கொண்டிருந்தது. ஆண்கள் க்யூவில் நிச்சயம் டிக்கட் கிடைக்காது. பெண்கள் க்யூவில் தெரிந்த மாமி யாராவது இருக்க மாட்டாளா என்ற நப்பாசையுடன் நோட்டம் விட்டேன்.

சட்டென்று என் கண்கள் ஓரிடத்தில் நிலைத்தன.

ஓர் இருபது வயது ஷிஃபான் ஜார்ஜெட் என்னையே பார்ப்பது போல் தோன்றியது. டைட் சாரியும், லோ கட் பிளவுஸ் உள்ளே திமிறிக் கொண்டிருந்த 'நாயுடு ஹால் ஜூம்' அந்த அழகு உடம்புக்குக் கவர்ச்சியைக் கூட்டின. ஒருவித மதர்ப்புடன் அவள் நின்ற நிலை என்னைத் தூண்டில் போட்டு இழுத்தது. ரொம்ப நாட்கள் பழகியது போன்றதோர் உறவு உணர்ச்சி என்னுள் விளையாடவே, என்னையும் அறியாமல் அவளைப் பார்த்துப் புன்னகை செய்தேன்.

ஒரு பாவலை முறுவல் அவள் முகத்திலும் மலர்ந்து மறைந்ததைக் கண்டேன்.

உற்சாகப் பெருவெள்ளம் என் உள்ளத்தில் கரை தட்டிக் கொண்டு ஓட ஆரம்பித்தது.

''எக்ஸ்க்யூஸ் மீ... லேடீஸுக்கு ரெண்டு டிக்கெட் தருவாங்களே... எனக்கு ஒண்ணு வாங்கித் தருகிறீர்களா?'' தைரியத்தை வரவழைத்துக் கொண்டு கேட்டு விட்டேன்.

''ஓ... வாங்கித் தரேனே...'' என்று அவள் பதில் சொன்னவுடன், என் மனம் என்னை ரோமியோவாகவும் அவளை ஜூலியட்டாகவும், என்னை ராஜேஷ் கன்னாவாகவும் அவளை டிம்பிளாகவும்... இன்னும் என்னென்னவோ கற்பனை பண்ண ஆரம்பித்தது.

ஓர் ஐந்து ரூபாய் நோட்டை நீட்டினேன். அவளும் பெற்றுக் கொண்டாள்.

இதற்குள் தியேட்டர் ஆள், ''ஆம்பிளைங்களெல்லாம் தள்ளிப் போய் நில்லுங்க'' என்று விரட்டி விட்டான்.

''ஏண்டா சாரதி! நான் பாட்டுக்குக் கூப்பிட்டுக் கொண்டே இருக்கேன். நீ என்னடா வென்றால் லேடீஸ் பக்கமா திருதிருன்னு முழிச்சுண்டு இருக்கயே! வீட்டுக்குத் தெரியாம யாரையாவது தள்ளிண்டு வந்திருக்கயா?'' என்று சுற்று வட்டாரத்தில் இருப்பவர்கள் எல்லோர் காதிலும் விழும்படியாகப் பச்சையாகக் கத்திக் கொண்டு 'அறுவை' ரங்கநாதன் முதுகெலும்பு முறிகிறாற்போல் ஒரு ஷொட்டுக் கொடுத்தான். பிறகு தொடர்ந்து ''நான் டிக்கெட் வாங்கிட்டேன். உனக்கும் கிடைக்கதுன்னு சேர்ந்தே உட்கார்ந்துக்கலாம்'' என்றான். குடிமுழுகியது போலிருந்தது எனக்கு.

இதற்குள் என் 'டிம்பிள்' டிக்கெட்டையும் சில்லறையையும் கொடுத்துவிட்டு ஒரு மோகனப் புன்னகையை வீசிவிட்டுத் தியேட்டருக்குள் போனாள்.

மனத்துக்குள் 'போனால் போகட்டும் போடா' பாடிக் கொண்டு அறுவை ரங்கனுடன் படம் பார்க்கலானேன்.

கமலஹாசனும், ஸ்ரீதேவியும் சேர்ந்து வரும் 'டூயட்' காட்சிகளின் போதெல்லாம் என் டிம்பிள் பக்கத்தில் உட்கார்ந்திருந்தால் எவ்வளவு குஷியாக இருந்திருக்கும் என்று மனம் ஏக்கமிட்டது.

ரங்கனின் சகிக்க முடியாத அறுவை, 'ஓ' வென்று அழலாம் போல் இருந்தது. படம் முடிந்ததும் ரங்கனை ஒரு வழியாகக் கழற்றி விட்டு அவளைத் தேடினேன்.

ஆனால் அவளைக் கண்டு பிடிக்கமுடியவில்லை.



ஓரளவு கும்பல் கலையும் வரை காத்திருந்து பஸ் ஸ்டாண்ட் போவதற்கும் நான் போக வேண்டிய பஸ் அங்கு வருவதற்கும் சரியாக இருந்தது.

உட்கார இடம் கிடைக்கவில்லை. நின்ற படி எனது வழக்கமான பழக்கப்படி 'லேடீஸ் சீட்' பக்கம் பார்வையைப் படர விட்டேன்.

பூமாரி பொழிந்தது போலிருந்தது. என்னுடையஅவள்நான் நிற்பதிலிருந்து இரண்டாவது சீட்டில் உட்கார்ந்து என்னைப் பார்த்து மெலிதானதொரு புன்னகையைத் தவழ விட்டுக் கொண்டிருந்தாள்.

கன்னங்களில் இலேசான சிரிப்பிலேயே விழுந்த குழி, ஓடி விளையாடும் கருவண்டு விழிகள், சரிந்து தொங்கிய செண்டு மல்லிகை ஆகியவை என்னை ஏதோ ஓர் உலகுக்கு அழைத்துச் சென்றது.

''பஸ்லே ஏறின கேட்டு டிக்கெட் வாங்கக் கூடாதா... எங்கே ஸார் போகணும்...அப்பாலே அந்தப் பக்கம் பார்க்கலாம்'' என்று என்னைத் தட்டிக் கண்டக்டர் கேட்கவும் என் நிலைக்கு வந்தேன்.

''ஆர்ட்ஸ் காலேஜ்... சிச்சி... பவர் ஹவுஸ்... இல்லே இல்லே... டெர்மினஸ்... உளறிக் கொட்டினேன்.

'கத்தரி வெயில்' என்று நினைத்தாரோ என்னவோ, ஒரு மாதிரி பார்த்துவிட்டு முப்பத்தைந்து பைசா டிக்கெட்டைக் கிழித்துக் கொடுத்தான்.

அவளுடன் ஏதாவது பேச வேண்டும் என்று என்னுள் முஸ்தீபுகள் செய்துகொண்டிருக்கும்போது, திடீரென்று இறங்குவதற்கு அவள் தயாரானாள்.

இறங்கும்போது லேசாகத் தலையை அசைத்து அர்த்த புஷ்டியுள்ள ஒரு புன்னகையை உதிர்த்து விட்டுப் போனாள்.

அங்கேயே இறங்கிவிடக் கையும் காலும் பரபரத்தன. யதேச்சையாக அவள் உட்கார்ந்த இடத்தைப் பார்த்த எனக்கு உண்டான மகிழ்ச்சிக்கு அளவே இல்லை.


போகும் அவசரத்தில் தனது கைப்பையை அவள் மறந்து விட்டுப் போயிருந்தாள்.

துடிப்புக் கலந்த வேகத்துடன் 'கண்டக்டர் ஹோல்டான்' என்று பலமாகக் கத்திவிட்டேன். நான் கத்திய கத்தல் டிரைவர் காதிலேயே விழுந்து, என்னவோ ஏதோவென்று பயந்து அவர் பஸ்ஸை உடனே நிறுத்தி விட்டார்.

காதலன்: உனக்காக ஒரு புது 'ப்ரா' வாங்கிட்டு வந்தேன், வரும் வழியில் எங்கோ 'மிஸ்ஸாயிட்டது...''

காதலி: ''பிராமிஸ்ஸா?''

-ரவீந்திரன்



கைப்பையைக் 'குபுக்'கென்று எடுத்துக் கொண்டு பஸ்ஸிலிருந்து தாவலாய் நான் குதிக்க முற்படுவதைக் கண்ட கண்டக்டருக்கு நான் ஏதோ திருடிக் கொண்டு ஓடுகிறேன் என்பதாகத் தோன்றியிருக்க வேண்டும். என் சொக்காயைப் பிடித்துக்கொண்டு அடிப்பதற்குக் கையையும் ஓங்கி விட்டார். 'தர்ம அடி' கொடுப்பதற்கு வாய்ப்புக் கிடைக்காதா என்று ஏங்கிக் கொண்டிருக்கும் சில ஜன்மங்கள் ஒரே பாய்ச்சலில் என்னை நோக்கி வந்தன. என்னைச் சூழ்ந்துள்ள அபாயத்தை நொடியில் புரிந்துகொண்ட நான், சற்று நிதானத்தை வரவழைத்துக் கொண்டு கண்டக்டரிடம், 'கைப் பை மகாத்மியத்தை'ச் சொல்லித் தூரத்தில் சென்றுகொண்டிருந்த என் டிம்பிளைக் காட்டினேன். கண்டக்டர் பிடி சற்றுத் தளரவும் என்னை விடுவித்துக் கொண்டு ஓட்டமாக ஓடி நாலே எட்டில் அவளை அடைந்தேன். அவள் என்னவோ வெகு நிதானமாகத்தான் போய்க் கொண்டிருந்தாள்.

''எக்ஸ்யூஸ் மீ... இந்தப் பை உங்களுடையதுதானே!'' என்றேன். வேகமாக ஓடி வந்ததில் மூச்சு இரைத்தது.

''ஆமாம்... என்னுடையதுதான்'' என்று எவ்விதப் படபடப்புமின்றி, நிதானமாக அவள் பதில் சொன்னது பை அவளுடையதாக இருக்காதோ என்ற எண்ணத்தை என்னுள் தோற்றுவித்தது.

''கைப் பை விஷயத்தில் இவ்வளவு அஜாக்கிரதையாக இருக்கலாமா?'' என்று உரிமையுடன் கேட்டேன்.

''அஜாக்கிரதை என்று யார் சொன்னது? வேண்டுமென்றேதான் பஸ்ஸில் தவற விட்டு வந்தேன்.''

என்னுள் பெருத்த குழப்பம். அவளே தொடர்ந்தாள்.

''நீங்கள் அதை நிச்சயம் எடுத்து வருவீர்கள் என்ற நம்பிக்கையில்தான் பையை விட்டு வந்தேன்.''

அவளுடைய துணிச்சல் என்னை அயர வைத்தது.

என்னுடன் தனியாகப் பேச இவ்விதம் நடந்து கொண்டாள் என்ற நினைப்பு என்னை ஆகாசத்தில் பறக்க விட்டது.

''வீடு பக்கத்தில்தான் இருக்கிறது வாருங்களேன்!'' என்று கூறினாள்.

ஆட்டுக் குட்டி மாதிரி பின்தொடர்ந்தேன். வீடு சின்னதுதான். நாகரிகமாக இருந்தது. ஹாலில் எவரையும் காணோம். சோபாவில் அமர்ந்தேன்.

'அன்னம்மா... அன்னம்மா...' என்று 'டிம்பிள்' குரல் கொடுக்கவும் நாற்பது வயது மதிக்கத் தக்க ஒரு பெண்மணி வெளியில் வந்தாள்.

''ரெண்டு 'லஸ்ஸி' வாங்கிண்டு வா!'' என்று அவள் உத்தரவிடவும், என்னையுமறியாமல் ஒரு பத்து ரூபாய் நோட்டை அன்னம்மாவிடம் நீட்டினேன். அன்று காலை 'கோவாபரேடிவ் சொஸைட்டியில்' ஃபீஸ் செலவுக்காக அப்பாவிடம் கொடுப்பதற்காக வாங்கிய முந்நூறு ரூபாய் கடனில் ஒரு



சென்னை விளம்பர நிறுவனமான ஸ்ரீதர் ஏஜென்சீஸ் நிர்வாகி திரு எம்.வி.கே. கி. அவர்களின் குமாரர் சிரஞ்சீவி பட்டாபிராமன் அவர்களுக்கும், கோட்டைவரம்பாளையம் திரு எஸ். ராமநாதன் அவர்களின் குமாரத்தி சௌபாக்கியவதி சீதா என்கிற சுபவதிக்கும் சமீபத்தில் சென்னையில் வெகு சிறப்பாகத் திருமணம் நடைபெற்றது. பத்திரிகை உலகப் பிரமுகர்களும் மற்றும் நண்பர்களும் வந்திருந்து மணமக்களை வாழ்த்தினர்

வாழ்க மணமக்கள்



திருச்சி ஜில்லா ஆங்கரை ஸ்ரீ ஏ.எஸ். வெங்கட்டராமன் அவர்களின் பேரனும், திரு ஏ. வி. ஸ்ரீனிவாசன் (Under Secretary, Ministry of Finance New Delhi) அவர்களின் புதல்வன் சிரஞ்சீவி ஏ. எஸ். பார்த்தசாரதிக்கும் (Officer, Bank of India, New Delhi) சௌபாக்கியவதி புவனேஸ்வரிக்கும் சமீபத்தில் திருமணம் சென்னையில் வெகு சிறப்பாக நடைபெற்றது.

வாழ்க மணமக்கள்



நூறு ரூபாய் நோட்டு பையிலிருந்து தலை நீட்டி யது. உள்ளே தள்ளி நிமிர்த்தினேன்.

கடிகாரம் பத்தே கால் காட்டியது.

''ஐயையோ... மணி ஏகமா ஆயிடுத்து- அன்னம்மா வந்ததும் நான் கிளம்பிடறேன். அப்புறம் பஸ் கிடைக்காது'' என்றேன்.

''அப்படி என்ன அவசரம்? பேசாம இரவு தங்கிட்டுக் காலையிலே போனாப் போச்சு'' என்று அவள் சாவதானமாகச் சொன்னாள்.

அவள் சொன்ன விதம் என்னவோ போல் இருந்தது.

''ஐ...ஐ... என் அப்பா ரொம்பக் கோபக்காரர். ராத்திரிலே லேட்டா வீடு திரும்பினாலே 'ஓ'ன்னு கத்துவார். வீடே திரும்பாட்டா அவ்வளவுதான்... பீஸ் பீஸாக் கிழிச்சுடுவார். அம்மா வேறே எனக்காகச் சாப்பிடாமக் காத்துண்டு இருப்பா. அதோட நான் இங்கே ராத்திரி தங்கினால் அக்கம் பக்கத்திலே இருக்கிறவா நம்பளைப் பத்தித் தப்பா நெனைச்சுப்பா...'' அசடு வழியக் கூறினேன்.

''இங்கே நம்ப ரெண்டு பேரைத் தவிர வேறே யாரும் கிடையாது. அன்னம்மா கூடத் திரும்பி வர மாட்டா. அவள் கதவை வெளிப்புறம் பூட்டிண்டு போய்விட்டாள். வேறே எந்த விதத் தொந்தரவும் நமக்கு இருக்காது...''

''ஐயையோ... நீங்க என்ன சொல்றீங்க... இது என்ன ஏதாவது தப்பான எடமா?... நீங்க... நோ... நோ....''

''என்ன இது... குழந்தை மாதிரி பயந்து பயந்து நடுங்கறீங்க... உங்களைப் போன்ற வசதியான இளைஞர்களுக்குத் திருப்தியையும் சந்தோஷத்தையும் அளிக்கறதுக்குத்தான் நான் இருக்கேன்...'' என்றவள் என்னிடம் நெருங்கி வந்து 'அரங்கேற்றம்' கதாநாயகி மாதிரி மேலாடை நழுவிய நிலையில் என் னுடைய தோள்கள் மீது லேசாகச் சாய்ந்து கொண்டாள்.

ஒரு பெண்ணுடனான நெருக்கமான ஸ்ப ரிச உணர்வு அன்றுதான் முதல் தரம். ஆரம் பத்தில் இணக்கமான ஒரு சிலிர்ப்பு என் உடலில் வழிந்தோடியது.

ஒரு கணம்தான் அந்நிலை.


'போலீஸ் ரெய்ட் செய்வது போன்ற காட்சி... கோர்ட்டில் தலை குனிந்து நிற்பது போன்ற அவல நிலை... காட்சி மாற்றம்... ஜெனரல் ஆஸ்பத்திரியில் பால்வினை நோய் பகுதியில் அட்மிட் ஆவது போன்ற காட்சி...

மனத் திரையில் இம்மாதிரியான காட்சி ஓடவும் உடல் முழுதும் வியர்வை கொட்டி யது?. என்ன செய்து தப்பிப்பது என்று புரி யாத திக்பிரமை....

''என்ன பேசாம இருக்கீங்க... நான் படுக் கையைத் தட்டிப் போடட்டுமா...'' என்று அவள் என் மீது மேலும் உரசினாள்.

என்னுடைய 'கற்புக்கு'க் களங்கம் வரப் போகிறது என்ற நினைப்பு அழுகையாக வெடித்து விடும்போல் முட்டி நின்றது.

''வந்து... பாத் ரூம் போகணும்...எங்கே இருக்கு?'' என்று சமாளித்துக் கொண்டு கேட் டேன். பாத் ரூம் போய் உள் பக்கம் தாழ்ப்



இவையெல்லாம் என்ன என்கிறீர்களா? "நான் உன்னைக் காதலிக்கிறேன்" என்று வெவ்வேறு மொழிகளில் சொல்லும் விதம் தான் இவை!

—கஸ்தூரி

பாள் போட்டுக் கொண்டு விடலாம் என்று ஒரு யோசனை.

''புழக்கடையில் இருக்கு... நான் ரெடியா இருக்கேன். போய் வாங்க...'' என்றாள்.

புழக்கடையிலிருந்து சுவர் ஏறிக் குதித்துத் தப்பி விடலாம் என்ற ஒரு திமர் யோசனை பளிச்சிட்டது. மதில் சுவர் ஆறு அடிக்கும் மேலான உயரம். துணி துவைக்கும் கல் மீது ஏறிச் சுவரை எட்டிப் பிடித்துத் தாண்டி, மறு பக்கம் குதித்து விட்டேன்.

முட்டியெல்லாம் சிராய்ப்பு.

நான் குதிப்பதைப் பார்த்த ஒரு சொறி நாய் ஆக்ரோஷமாய்க் குரைத்தபடி என் மீது பாய்ந்தது.

திரும்பிப் பார்க்காமல் ஓடினேன். மெயின் ரோடு வரும்வரை துரத்திக் கொண்டுவந்து விட்டு நினைத்ததை நடத்திவிட்ட சாதனைப் பெருமிதத்துடன் நின்றபடி சற்றுக் குரைத்து விட்டுத் திரும்பி விட்டது.

ரோடு வெறிச்சென்று இருந்தது. இனி பஸ் இருக்காது என்று புரிந்தது.

ஒரு டாக்ஸிக்காரனுடன் பேரம் பண்ணி முடித்து வண்டியில் ஏறி உட்கார்ந்தேன்.

வீட்டில் நுழையும்போது இரவு மணி பதி னொன்று நாற்பது. அப்பாவும் அம்மாவும் வாசலிலேயே தவம் கிடந்தனர்.

எனக்காகச் சாப்பிடாமல் அம்மாவும் காத்துக் கொண்டிருந்ததைப் பார்த்து எனக்கு அழுகையே வந்து விட்டது.

படுக்கையில் படுத்தபடி எனது 'காதல்' புராணத்தால் ஏற்பட்ட நஷ்டத்தை மனம் கணக்குப் போட்டது.

அன்னம்மாவிடம் 'லஸ்ஸி' வாங்கக் கொடுத்த பத்து ரூபாய், டாக்ஸிக்குக் கொடுத்த பன்னிரண்டு ரூபாய், நாளைக்குக் கண்ணனுக்குக் கொடுக்க வேண்டிய நூறு ரூபாய் ஆக மொத்தம் நூற்று இருபத்தி இரண்டு ரூபாய் நஷ்டம். அப்பாவிடம் வாங் கிக் கட்டிக் கொண்ட கர்ண கடூரமான திட்டுகள். சுவர் ஏறிக் குதித்ததால் முட்டியில் உண்டான சிராய்ப்புகள்...இத்யாதி...இத் யாதி வேறு.

உதடுகள் என்னையும் அறியாமல் 'கண்ணு! நீ ஜெயிச்சுட்டே' என்று முணுமுணுத்தன

"அங்காள பரமேஸ்வரி தாயே "காமாக்ஷி தாயே" கருணை புரியும்மம்மா! நோயாளிகளின் குறைகளை நீக்கி, நல்வாழ்வு-சுகவாழ்வு-இன்ப வாழ்வு ஆரோக்கிய வாழ்வு அருளும்மம்மா."

"குழந்தை பாக்யமில்லாமல், மனம் வருந்துவோர்க்கு, அவர்கள் இருவர்களின் உடலிலுள்ள குறைபாடுகளை நீக்கி மழலை செல்வம் கிடைக்க, வரம் தாருமம்மா."



Dr. S. R. SIVARAJ

வாலிபர்களே! மணமானவர்களே!!

நாம் அறியாமையால், தெரிந்தோ தெரியாமலோ, நண்பர்களின் சகவாசத்தாலோ, பலவித ஆபாச புஸ்தகங்கள், சினிமாவில் வரும் ஆபாச காட்சிகள், ஆபாசமான உடையலங்காரமுள்ளவர்களைப் பார்ப்பதாலும், அதில் மனதைப் பறிகொடுத்து, தவறான செயல்களில் ஈடுபட்டும், நம் பருவத்தை பலவிதமான முறைகளில் செலவழித்தும் விடுகிறோம். இதனுடைய பின்விளைவுகளைப் பற்றி எவரும் சிந்திப்பதில்லை. சிந்திக்க முடிவதிலும் தவறி விடுகிறோம்.

சில வருஷங்கள் பொறுத்துத்தான், நம் உடல் நலம், கீழ்க்கண்டவாறு பாதிக்கப்பட்டு வருவதைப் பற்றி புரிய ஆரம்பிக்கிறோம்.

உடல் பலஹீனம் - கைகால் அசதி - சோர்வு - களைப்பு - கனவுகள் மூலம் ஜீவசக்தி அடிக்கடி வெளியாதல் - கண் எரிச்சல் - பார்வைக் குறைதல் - உடல் மெலிவு - முகம் ஒட்டிப் போதல் - ஞாபக மறதி - தைரியமின்மை - வீண் எண்ணங்கள் - உடலுறுப்புக்கள் தளர்ச்சியும் - சிறுத்துப் போதலும் - நரம்புத் தளர்ச்சி - நடுத்தண்டு வலி - உடல்வலி - மலச்சிக்கல் - பசியின்மை - க்ஷண நேரத்தில் சோர்வடைதல் போன்று உடல்நிலை பாதிக்கப்பட்டு

சிலர் கல்யாணம் செய்யப் பயப்படும் நிலை ஏற்படுகிறது. சிலர் மணம் செய்து கொண்டு, வாழ்க்கையின் சுகங்களை, முழுமையாக பெற முடியாமல், குடும்ப ஒற்றுமையில்லாமல் வேதனையடைகிறார்கள்.

மேலே சொன்ன காரணங்களால், ஜீவசக்தியில் கர்ப்ப அணுக்கள் சக்தி இல்லாமலிருப்பது தேவையான அணுக்கள், போதுமான அளவு இல்லாமை - உடலில் சில சக்திக் குறைவால் அணுக்களே இல்லாமலிருப்பதுபோன்ற நிலை சிலருக்கும் ஏற்படுகிறது.

இக் காரணங்களால் "குழந்தை பாக்கியம்" இல்லாமலிருப்பவர்கள் அநேகர்

தமிழகத்தில் 28 ஆண்டுகளாக மங்காத புகழ்பெற்ற உங்கள் சித்த வைத்திய நண்பர்

சேலம் டாக்டர் S. R. சிவராஜ் அவர்கள்

சித்த வைத்திய முறையில் வைத்திய ஆலோசனையும் சிகிச்சையும் தேவையானவர்கள் கேம்புகளில் பெறலாம். சந்திக்கமுடியாதவர்கள் தேவையான சிகிச்சையை வி. பி. பி. மூலம் பெறலாம். பார்சல் செலவு ரூ. 10.50 தனி செலவு.

ஆலோசனை மட்டும் தேவைப்படுவோர் ரூ. 5-00 — மணியார்டர் மூலம் அனுப்பினால்தான் விபரம் அனுப்பப்படும்

வாலிபர்கள் சிகிச்சை	மணமானவர்கள் சிகிச்சை	குழந்தை பாக்கியம் இல்லாதவர்
(ஒரு மாத சிகிச்சைக்கு)	(ஒரு மாத சிகிச்சைக்கு)	(ஒரு மாத சிகிச்சைக்கு)
மீடியம் சிகிச்சை ரூ. 115-00	A வகுப்பு ரூ. 350-00	40 வயது To 50 வயது வரை A வகுப்பு ரூ. 350-00
ஸ்பெஷல் .. 90-00	B .. ரூ. 250-00	20 வயது To 40 வயது வரை B வகுப்பு ரூ. 250-00
1 நெம்பர் .. 75-00	C .. ரூ. 175-00	
இதற்கு குறைவு இல்லை	இதற்கு குறைவு இல்லை	இதற்கு குறைவு இல்லை

தலைமை அலுவலகம்:

டாக்டர் S. R. சிவராஜ் (KLK)

சென்ட்ரல் டாக்கீஸ் வடபுறமுள்ள ஏரியில் – காந்தி ஸ்டேடியம் சமீபம்

சேலம் 636007

காதல் மதிப்பீடுகள்

''உங்களுடைய லட்சியக் காதலன் அல்லது காதலி எப்படி இருக்க வேண்டும் என விரும்புகிறீர்கள்?'' என்று சிலரைக் கேட்டபோது:

திரு ராஜ்பரத்

என்னுடையவள் நிச்சயம் அதிக பருமனாக இருக்கக் கூடாது. ஆனால் பார்ப்பதற்குக் கவர்ச்சியாக இருக்க வேண்டும். கண்கள் கறுப்புத் திராட்சை போலவும், இடையளவு நீண்ட முடியும் கொண்டவளாக இருக்க வேண்டும். எப்போதும் சுவையாகப் பேசுபவளாக இருக்க வேண்டும். அதே நேரத்தில் லொட லொடவென்று அரட்டை வாயாக இருக்கக் கூடாது. அவள் என்னை விடப் புத்திசாலியாக இருந்தாலும் நான் பொறாமைப் பட மாட்டேன். ஆனால் என் ஒவ்வொரு செய்கைக்கும் அவள் தோள் கொடுப்பவளாக இருக்க வேண்டும். அவள் எனக்கு எல்லாவற்றிலும் கீழ்ப்படிந்து நடக்க வேண்டும் என்று நான் சொல்லமாட்டேன். அவளுக்குச் சரியாகப்பட்டதை நான் வரவேற்கிறேன். இசையில் ஈடுபாடு கொண்டு அறிவூட்டும் ஆங்கிலப் புத்தகங்களை அவள் படிப்பதை நான் விரும்புகிறேன். தமிழ்ப் புத்தகங்கள் படிப்பதில் தவறில்லை. ஆனால் கிசுகிசு பத்திரிகைகளைப் படிப்பவளை நான் நிச்சயமாக வெறுக்கிறேன்.

மதிப்பெண்:

அழகு	—	25
புத்திசாலித்தனம்	—	40
பழகும் முறை	—	20
இசையில் ஈடுபாடு	—	15
மொத்தம்		100

குமாரி பத்மா

என் லட்சிய புருஷர் என்னை விட எல்லா விதத்திலும் புத்திசாலியாக இருப்பதை நான் விரும்புகிறேன். அவரது ஒவ்வொரு செய்கையும் விவேகத்தோடு இருக்க வேண்டும். நல்ல குடும்பத்தைச் சேர்ந்தவராக இருக்க வேண்டும். ரொம்பவும் அழகானவர் என்பதை விட, நுண் அறிவு பெற்றவரை, கல்வி கற்றவரை நான் பெரிதும் விரும்புகிறேன். என்னிடம் அளவுக்கு மீறிக் குழைவதையோ, கெஞ்சுவதையோ நான் விரும்ப மாட்டேன். ஏராளமாய்ப் பணம் படைத்தவரை விடத் தமது சம்பாத்தியத்தில் எனக்கு எந்தக் குறைபாடும் இல்லாமல் வைத்துக் கொள்ளக் கூடியவரை விரும்புகிறேன். எப்போதும் சிரித்த முகத்தோடும் இருக்க வேண்டும். கோபமே இல்லாதவராக நண்பர்கள் உறவினர்கள் முன்னிலையில் என்னை மதிப்போடு நடத்துகிறவராக இருக்க வேண்டும்.

பண்புகள்	—	40
கல்வி	—	30
பணம்	—	20
இசை	—	10
		100

திரு க. தேவநாதன்

என்னுடையவள் நிரம்பப் படித்திருக்க வேண்டும் என்பதை விட என்னை நன்றாகப் புரிந்து கொள்பவளாக இருக்க வேண்டும். நல்ல குடும்பப் பாங்காக இருக்க வேண்டியது முக்கியம். ரொம்பவும் கடவுள் பக்தியுள்ளவளாக இருக்க வேண்டும். நான் ரொம்பவும் நாகரிகமாக இருந்தாலும் அவள் அப்படி இருப்பதை விரும்பவில்லை. பார்ப்

× திரு ராஜ்பரத்






× திரு க. தேவநாதன் × குமாரி டென்னிஸ் × திரு ரவி சந்தர்

× குமாரி பத்மா

× குமாரி ஜெயா









பதற்கு மாதிரமாக இருந்தால் நல்லது... ஹாக்கி போன்ற விளையாட்டுக்களில் அதிக ஈடுபாடு கொண்டவளாக இருக்க வேண்டும். சினிமா ஆசை அதிகம் இல்லாதவளாக இருக்கவேண்டும். நொறுக்குத் தீனி தின்பவளாக இருக்கக்கூடாது. முன்கோபம் கொண்டவளாக இருப்பதை நான் விரும்பவில்லை. மெத்தப் படித்துவிட்டோம் என்று கர்வம் அவளிடம் உருவாகாதிருக்க, என்னைவிடக் குறைவாகப் படித்த பெண்ணையே விரும்புகிறேன். கலகலப்பாக விளங்கி, நம்ம ஊர் வட இந்தியச் சமையலை அருமையாகச் செய்யக் கூடியவளாகவும் இருக்க வேண்டும். அவள் உறவுக்காரர்கள் பலர் அடிக்கடி வந்து போரடிப்பதை என்னால் சகிக்க முடியாது. நான் பணக்காரப் பெண்ணை, நகையாசை கொண்டவளை விரும்ப மாட்டேன்.

என்னை

நன்றாகப் புரிந்துகொள்வதற்கு	—	30
இசை ஞானம்	—	30
தெய்வ பக்தி	—	30
விளையாட்டில் ஈடுபாடு	—	10
		100

குமாரி டென்னிஸ்

என் லட்சிய மனிதர், அதாவது என் கணவர் நல்ல உயரமாகவும் சிறிது பூசினாற் போல் குண்டாகவும் இருக்க வேண்டும். மாதிரமாக இருக்கலாம். Drooping மீசை முக்கிய தேவை. கண்கள் துருதுருவென்று சுழல வேண்டும். அதற்காக முட்டைக் கண் கூடாது.

அவர் பேச்சு மிகவும் அமைதியாகவும் தெளிவாகவும் இருக்க நான் ஆசைப்படுகிறேன். பெரியவர்கள் முன்னிலையில் ஆண்மை கலந்த அடக்கம், மனைவியிடம் அன்பு, நம்பிக்கை, மற்றவர்களிடம் கலகலப்பாகப் பழகும் தன்மை ஆகியவை எனக்கு ரொம்பப் பிடிக்கும். சொத்து சுகத்துக்கு நான் ஆசைப்படவில்லை. படிப்பும், ஒரு நிரந்தர வேலையும் இருந்தால் போதும். எனக்கு முழு சுதந்திரம் அளிக்கா விட்டாலும், என் மனத்தைப் புரிந்து கொள்பவராக இருக்க வேண்டும். என்னை, தன் சொந்த முயற்சியாலும், உழைப்பாலும் கண் கலங்காதபடி காத்து அன்போடு நடத்தும் உள்ளத்தை ரொம்பவும் நேசிக்கிறேன்.

தோற்றம்,

அழகு, பழகும் விதம்	—	40
பண்புகள்	—	15
செல்வம்	—	5
கல்வி	—	10
		100

திரு ரவிசந்தர்

என் லட்சிய மனைவி வெறும் கட்டுப் பெட்டியாக இருப்பதை நான் விரும்பவில்லை. ரொம்பவும் மாடர்னாக இருப்பதையே வரவேற்கிறேன். 'ஒல்லி'யாக இருப்பவளைத் தான் அதிகம் விரும்புகிறேன். புடவை தவிர வேறு எந்த வித உடை அணிந்தாலும் நான் பாராட்டுவேன். குறைந்தது புகுமுக வகுப்பு வரை படித்திருக்க வேண்டும். கடவுள் பக்தியை வெளிக்காட்டாமல் உள்ளத்தில் கொண்டுள்ள பெண்ணைத்தான் விரும்புகிறேன். என்னைப் போலவே எல்லா விஷயத்திலும் சுதந்திர மனப்பான்மை கொண்டவளை எனக்கு அதிகம் பிடிக்கும். முக்கியமாக மேல் நாட்டு இசை ஞானம் அவளுக்கு அதிகமாக இருக்க வேண்டும். அவள் நடுத்தர வர்க்கத்தைச் சேர்ந்தவளாக இருக்க வேண்டும்.

வேலைக்குப் போகும் பெண் என் லட்சிய மனைவி இல்லை. என்னைப் போல்வே தோட்டக் கலையில் ஈடுபாடு கொண்டவளை நான் அதிகம் விரும்புகிறேன். அரட்டை வாயாக இருந்தால் எனக்குப் பிடிக்கும். ஆனால் போரடிக்காமல் பேச வேண்டும். தென்னிந்தியச் சமையல் வகைகளில் அவள் ஓர் எக்ஸ்பர்ட்டாக விளங்க வேண்டும். சமையலறையில் நான் உதவ வேண்டும் என்று அவள் எதிர்பார்க்கவே கூடாது.

மாடர்ன் உடை,

பழகும் முறை	—	50
தென் இந்திய சமையலுக்காக	—	20
அழகு	—	15
இசை	—	10
கல்வி	—	5
		100

குமாரி ஜெயா

எத்தனையோ அம்சங்களில் முன்னேறி வரும் இந்த இருபதாம் நூற்றாண்டில் கூட இங்கு கல்யாணம் என்பது ஒரு பெண்ணைப் பொறுத்த வரை ஏதோ ஆடு மாடுகளைச் சந்தையில் விலை பேசுவது போலத்தான் நடந்து வருகிறது.

வரதட்சணை வாங்காமல் பெண் வீட்டாரை எல்லாச் செலவுகளுக்காகவும் கசக்கிப் பிழியாமல், பரந்த மனப் பான்மையோடு நடந்து கொள்ளும் ஆண்மகனை நிச்சயம் வரவேற்கிறேன்.

என் கணவராகப் போகிறவர் என்மேல் உண்மையான அன்பு வைப்பவராக இருக்க வேண்டும். நல்ல பண்போடு எல்லோரிடமும் நடந்து கொள்பவராய் இருப்பதை வரவேற்கிறேன். அதோடு ஓரளவாவது படித்திருக்க வேண்டும். எதையுமே வெளிப்படையாகப் பேசுகிறவரைக் காண விருப்பம். எந்தக் கருத்தையும் ஆழ்ந்து சிந்தித்து முடிவு எடுப்பவரை வரவேற்கிறேன். அவரை ஒரு கோபக்காரர் என்று யாரும் சொல்லக் கூடாது.

என்னிடம் உண்மை

அன்பு செலுத்துவதற்கு	—	40
கல்வி	—	25
நல்ல குண நலன்கள்	—	20
வரதட்சணை வாங்காததற்காக	—	15
		100

பேட்டி: "சிக்கி"



காதல் கிளிகளுக்கு ஒரு சங்கடம்

ராஜேந்திரகுமார்

பிருந்தாவன் எக்ஸ்பிரஸ் புறப்படத் தயாராக இருந்தது.

புத்தகக் கடை ஆள், காசெடுக்க மனமின்றி, அட்டை அழகினை மட்டும் பார்த்து ரசிப்பவர்களை அலட்சியப்படுத்தினான்—சுத்தமாக.

''வயீ....வயீ....'' என்று டிராலி தள்ளும் ஆளின் வேகத்துக்குப் பயணிகள் துள்ளி விலகினார்கள்.

''போனதும் லெட்டர் போடு'', ''அக்காவை விசாரிச்சதாச் சொல்லு'' போன்ற வழக்கமான வாசகங்களும் ''ஸே சீயர்ஸ்ட்டு மீ...'', ''ஆறு மணிக்கு மேல் கப்பன் பார்க் இருட்டிலே நிக்காதே'' போன்ற புது வாசகங்களும் ஒலித்தன.

முதல் வகுப்புப் பெட்டிக்கு அருகிலே அட்டகாசமாய் வந்து நின்ற ரதி கண் கொள்ளு மட்டும் ஆராய்ந்தாள். எதிரே வந்த சில இளவட்டங்கள் சட்டென்று நின்று 'திக்'கென்று விழிக்கவே — புரியாமல் பார்த்தாள். அவர்கள் பார்வை போகுமிடத்தைத் தொடர்ந்து பார்த்தவள்—சட்டென்று நழுவிய தன் சேலைத் தலைப்பை-இழுத்துப் போர்த்திக் கொண்டு சிடுசிடுப்புடன் பார்த்தாள்.

கொஞ்ச நேரம் 'பே' என்று விழித்து விட்டு நகர்ந்தது அந்த இளைய தலைமுறை.

''மீசை கூட முளைக்கல்லே. அதுக்குள்ளே கண்ணாலேயே கற்பழிக்கப் பார்க்கிறான்கள்

பாவத்தைப் போக்கக் கூடிய மகிமை பெற்ற புண்ணிய நீர் பாயும் கங்கை நதிக் கரையில் வசிக்க வேண்டும்; இல்லாவிட்டால், மனோகரமான மாலைகள் புரளும் மங்கையரின் நெஞ்சகத்திலே வாசம் செய்ய வேண்டும்.

*

காதலன் காதலி இருவரும் பரஸ்பரம் மனம் ஒன்றுபட்டு விட்டால், அவர்கள் ஒருவரை ஒருவர் பிரிந்திருந்தாலும் கூடி இருப்பதற்குச் சமமே. மனம் ஒன்றுபடா விட்டாலோ அவர்கள் கூடி இருந்தாலும் பிரிந்திருப்பதே ஆகும்.

பர்த்ருஹரியின். 'சிருங்கார சதக'த்திலிருந்து - அனுப்பியவர் இரா. மோகன்

இடியட்ஸ்'' — என்று முணு முணுத்தவாறு வலது மணிக்கட்டைத் திருப்பிப் பார்த்தான்.

அந்த எச் எம்.டி. தயாரிப்பு 'ஏழு பத்து' என்றது.

''சட்!'' — அலுப்புடன் திரும்பியவளின் பார்வை நிலைத்தது. ஜன்னல் வழியாகப் பார்த்துக் கொண்டிருந்தான் அந்த ஆள். வெளிர் நீல மூக்குக் கண்ணாடிக்கு அப்பால் அவன் கண்கள் அவளையே பார்த்தன.

''கல்சர்லெஸ் ப்ரூட்'' மனத்துக்குள் ஆங் கிலத்தில் திட்டிக் கொண்டாள்.

''பெண்ணே! இப்ப நேரம் என்ன?'' என்றான் அவன் தமிழில்.

'பேச்சை ஆரம்பிக்கிற முறையைத் தெரிந்தே வைத்திருக்கிறான்' என்று நினைத் துக்கொண்டவள், அவன் மறுபடியும் ''பெண்ணே!'' என்று ஆரம்பித்ததும்...

''ஏழு பத்து'' என்றாள் எரிச்சலுடன் முகம் சுளித்து.

இவள் முறைப்பு அவன் முகத்தில் எந்த மாற்றத்தையும் ஏற்படுத்தவில்லை. அதே சிரிப்பு மாறாத முகத்துடன் கேட்டான்: ''ஏழு முப்பத்தைந்து நிமிடங்களுக்குத் தானே வண்டி ஓடத் துவங்கும்.''

''ரயில்வே கைடைப் பார்க்க வேண்டிய சங்கதி.''

''அதற்குச் சந்தர்ப்பமில்லை. பெண்ணே... ஏழு முப்பத்....''

''ஆமாம்'' என்றவள் திரும்பி நின்று முகம் மலர்ந்தாள். பிரபு வந்துவிட்டான்.

இங்கிருந்தே கையாட்டி, ''ஹாய்'' என்று இவள் கத்த அவன் அங்கிருந்தே உற்சாக மாக ''ஹாய்'' என்றான்.

'இப்ப என்ன சொல்கிறாய்?' என்பதுபோல் அந்த ஆளைத் திரும்பிப் பார்த்தவளின் கர்வம் விநாடியில் கரைந்து போயிற்று.

அதே சிரிப்பு மாறாத முகத்துடன் பார்த் துக்கொண்டிருந்தான் அவன். ''அவர் வந்து விட்டாரா?'' என்றான்.

''மைண்ட் யுவர் ஓன் பிஸினஸ்'' என்று சொல்ல வாயைத் திறந்தவள் — அந்தப்பிரபு பாய்ந்து வரும் வேகத்தைக் கண்டு எங்கே அப்படியே தூக்கி விடுவானோ என்ற பயத் தில் துள்ளி ஓர் அடி நகர்ந்து கொண்டாள்.

''ரயில்வேயில் ரிசர்வேஷன் கவுண்டரில் இருக்கும் பெண்ணைக் காதலிப்பதாகச் சொன் னாயே? அவள் சம்மதத்தைக் கேட்டியா?''

''ஓ. கேட்டேனே! இன்னும் ரெண்டு பேர் அவளைக் காதலிக்கிறாங்களாம்!''

''அப்ப என்ன பண்ணப் போறே!?''

''வெயிட்டிங் லிஸ்டிலே போடச் சொல்லி யிருக்கேன்.''

- ஸ்ரீ. நடராஜன்



''என்ன இவ்வளவு லேட் பண்ணிட்டே பிரபு! நான் தவிக்கப் போயிட்டேன். இங்கே இருக்கிற ஆளுங்களோ முன்னே பின்னே பெண்களையே பார்க்காதது மாதிரி முறைக் கிறாங்க'' என்று அந்த ஆளைத் திரும்பிப் பார்த்தாள்.

அவன் சிரிப்பு மாறாத முகத்துடன் பார்த் துக் கொண்டிருந்தான்.

''எருமைத் தோல்.''

''ஏய், யாரைச் சொல்றே?'' என்று அந்தப் பிரபு மூக்கைத் திருக வர—

'ஸ்ஸு' என்று அவன் கையைத் தட்டி விட்டு மறுபடியும் அந்த ஆளைத் திரும்பிப் பார்த்தாள். — அர்த்தத்துடன்.

''ஏய்! யார் அவன்? உங்கப்பாவுக்குத் தெரிஞ்சவனா?'' என்றான் பிரபு ரகசியமாக.

''இல்லே. உள்ளே வா சொல்றேன்'' என்று பெட்டியில் ஏறினாள். அவனும் தொடர்ந்து உள்ளே போனான்.

''யாரு சொல்லேன்?''

''உலக்கு வில்லன்! அரை மணி நேரமா வைச்ச கண்ணு வாங்காமப் பார்க்கறான். வலிய வலியப் பேச்சுக் கொடுக்கறான்.''

''ராஸ்கல். இரு வரேன்'' என்று இளம் பியவனைக் காலரைப் பிடித்து இழுத்து நிறுத்தினாள். அவன் திமிறினான். ''இரு. ஒரு வார்த்தை கேட்டுட்டு வந்துடறேன்.''

''என்ன கேட்பே? ஏண்டா என் காத லியை முறைக்கிறேன்னு? சேச்சே. அதெல் லாம் சொல்லித் தெரிகிற நாகரிகமில்லே. இப் கொய்ட்.''

இடத்தைத் தேடிப் போனபோது அங்கே இரண்டு முஸ்லிம்கள் விழித்தவாறு உட் கார்ந்திருந்தார்கள்.

''இந்த ஸீட் எங்களுடையது'' என்றான் பிரபு அழுத்தமாக.

டிக்கெட்டை அவசரமாக எடுத்துச் சோதித்தார்கள். ''இருவத்தி நாலு இருவத் தைஞ்சு. நம்மள் ஸீட்தாம்மா'' என் றார்கள் முறைப்புடன்.

''அடுத்த கம்பார்ட்மெண்டா இருக்கும். ஸாரி'' என்று ரதியுடன் நடந்தான் பிரபு.

அடுத்த பெட்டியின் இருபத்திநாலும் இருபத்தி ஐந்தும் காலியாக இருந்தன. உட்கார்ந்து கொண்டார்கள்.

''ரிலாக்ஸ்டா உட்கார்'' என்று கைப் பிடியைத் தளர்த்தி விடச் சாய்மானம் கனிச மாகப் பின்புறம் சாய்ந்தது.

''சொர்க்கம்'' என்று சிரித்தாள்.

விஸில் சத்தம் கேட்டதும் வழியனுப்பும் சாக்கில் முதல் வகுப்பைப் பராக்குப் பார்த்துக் கொண்டிருந்த கும்பல் சரசர வென்று இறங்கிக் கொள்ள....

''ங், 'பாய்ங்' என்ற என்ஜினின் அலற லுடன் வண்டி நகர்ந்தது.

''நீ சொன்னது நிஜம் ரதி. இதுதான் சொர்க்கம்'' என்ற பிரபு அவள் கையைத் தொடப் போகும்போது அவள் கையை எடுத்து விட்டாள்.

''நவம்பர் ஏழு'' என்றாள் சிரிப்புடன்.

''சட்'' என்றான் அவன் அலுப்புடன். (நவம்பர் ஏழில் அவர்களுக்குக் கல்யாணம். அதுவரை அவன் அவன்தான். அவள் அவள்

தான்: அப்படியோர் ஒப்பந்தம் அவர்களுக்குள்ளே.)

பெரம்பூர் ஸ்டேஷன் வரிசைகளுக்குப் பின் வில்லிவாக்கத்தை அலட்சியப்படுத்திக் கடக்கும்போதுதான் டிக்கட் பரிசோதகர் வந்தார். டிக்கெட்டை வாங்கிப் பார்த்து அவர்களைக் குனிந்து எட்டப் பார்வை லென்ஸில் பார்த்தார். ''பெங்களூருக்கா போறீங்க?''

''ஏன்?'' இரண்டு பேரும் நிமிர்ந்தார்கள். ''இந்த வண்டி பெங்களூருக்குத்தானே போகிறது?''

''வண்டி பெங்களூர் போகிறது சரி. இந்த ஸீட் காட்பாடி மட்டும்தான் போகிறது. காட்பாடி அலாட்மெண்ட் ஸீட் இது. நீங்க அடுத்த கம்பார்ட்மெண்டுக்குப் போங்க'' என்று அவர்கள் வந்த வழியையே அவர் சுட்டிக்காட்டியபோது....

''அங்கே யாரோ உட்கார்ந்திருக்காங்களே'' என்று பிரபு சொல்லும்போதுதான் அங்கேயிருந்து டி. ஸி. துரத்தியிருப்பார்... போலிருக்கிறது. அந்த முஸ்லீம் பெரியவர்கள் 'ஙே' என்று விழித்தவாறு நின்றார்கள்.

சிரிப்பை அடக்கியவாறு பெட்டிகளை எடுத்துக் கொண்டு அடுத்த பெட்டிக்குத் திரும்ப வந்தவர்கள் 'ஓ. நோ' என்று அலுத்துக் கொண்டார்கள்.

நேர் பக்கத்து ஸீட்டில் அந்த ஆளின் கண்கள் கண்ணாடிக்குப் பின்னால் பளபளத்துக் கொண்டிருந்தன. உதட்டில் அதே சிரிப்பு. (இண்டல் பண்ணிச் சிரிக்கிறாரா?)

''இட்லி, வடை சட்னி ஸார்.''

சிலிர்த்துக் கொண்டு எழுந்த பிரபுவை இழுத்து அமர்த்தினாள் ரதி. ''அப்பவே சொன்னேனில்லே. சண்டைக்குப் போறது நாகரிகமில்லேன்னு.''

''எது... சீச்சீ அதில்லே.'' பூரிப்புடன் சொன்னான். ''இட்லி வடை வந்திட்டது.''

''அதுக்கேன் பாயறே? வரட்டும் வாங்கிட்டாப் போகுது.''

''அட அதில்லே ரதி. இட்லிக்காரன் வந்துட்டான்னா காண்டீன்காரன் திறந்துட்டான்னு அர்த்தம். வா. போய் ஆம்லெட் ப்ரெட் சாப்பிடலாம். அப்புறம் கூட்டம் சேரும்.''

''ஊர்மம்.'' தலையில் அடித்துக் கொண்டாள். ''யூ கோ. நான் வரல்லே.''

அடுத்த விநாடியே அந்தப் பிரபு காணாமல் போனான்.

விற்கும் பொருளுக்குச் சம்பந்தமே இல்லாது ஒல்லியான அந்த ஆள் அந்த 'அவளை'க் கடக்கும்போது நின்றான். ''வணக்கம் சார்.'' (தெரிந்தவன் போலிருக்கிறது.)

''முருகப்பனா?''

''ஆமா சார். இட்லி பாக்கெட் சார்?''

''ஒரு பொட்டணம் பிரித்துக் கொடு.'' என்றான், பணத்துக்குப் பையைத் துழாவியவாறு. அந்த இட்லிக்காரன் பாக்கெட்டைப் பிரித்து, சட்னியை உதிர்த்து அவன் மடியில் வைத்தான்.

''உரித்த வாழைப்பழம்'' என்ற தனது முணுமுணுப்பு அவன் காதில் ஸ்பஷ்டமாக விழுந்தது. சட்டென்று திரும்பிச் சிரிக்கவே வெலவெலத்துப் போனாள் ரதி.

''அவர்களுக்கும் இட்லி தேவைபோல் இருக்கிறது. ஒன்று கொடு'' என்று அவன் சொல்ல அந்த ஆள் பாக்கெட்டை நீட்ட அவசரமாக மறுத்தாள்.

''நோ நோ வேணாம்.''

''ஏம்மா, செஞ்சா இல்லையா நோட்டா இருக்கா?''

''பரவாயில்லை. கொடு முருகப்பா, நான் காசு கொடுக்கிறேன்.''

''வேண்டாம், வேண்டாம். எனக்குப் பசி இல்லை.'' தன்னைத் தனியாகத் தவிக்க விட்டு ஆம்லெட் சாப்பிடப் போய்விட்ட பிரபுவுக்காகக் கண்களை அலைய விட்டாள். மனத்துக்குள் சபித்தாள்.

காதலன் காதலியைக் கொஞ்சும் மொழிகள்

தமிழில் – 'கண்ணே, கண்மணியே'
ஜெர்மானியர் — சின்னஞ்சிறு பன்றியே!
கிரேக்கர் — அழகிய மலரே!
ஜப்பானியர் — வெல்லப்பாகே!
சீனர் — லவங்கப்பட்டையே!
போலந்தியர் — பிஸ்கட்டே!
பின்லாந்தியர் — இளந்தளிரே!
அரேபியர் — வெள்ளரிக்காயே!
யூகோஸ்லேவியர் — சின்னஞ்சிறு புலியே!
வியன்னா — சிறு நந்தையே!
ஸோவியர் — வெட்டுக்கிளியே!

-சௌந்தரம்




''அடாடா!'' வரும்போதே பூரித்துப் போய் வந்தான் பிரபு. ''யூ மிஸ்ட் இட். பெஸ்ட் ஆம்லெட்.'' மிளகுத் தூளின் பழுப்பு நிறமும், உப்புத் தூளின் வெள்ளையும் அவன் மீசையில் இன்னும் கூட ஒட்டி இருந்தன.

''மீசையைத் துடை.''

''ஏன்? மண்ணா? நான் ஒண்ணும் குப்புற விழல்லியே.''

''இல்லே. பெப்பர் சால்ட். வயசு ஆகுதே ஒழிய நீ இன்னும் சின்னப் பிள்ளையாவே இருக்கே. தின்கிற விஷயத்திலே!'' என்று கைக் குட்டையால் அவன் மீசையை ஒட்டத் துடைத்தவளின் பார்வை அந்த ஆள் தின்பதை மறந்து சிரிப்புடன் பார்ப்பதை அறிந்ததும், கையை எடுத்து விட்டுக் கைக்



திருமலை-திருப்பதி தேவஸ்தானம் திருப்பதி

திருமலைக்குப் புனித யாத்திரை
திருமலை - திருப்பதியில் தங்குவதற்கான வசதிகள்

திருமலைக் குன்றில் அடிவார நகரமான திருப்பதியில் திருமலை திருப்பதி தேவஸ்தானத்துக்கு இரு பிரும்மாண்டமான சத்திரங்கள் உள்ளன. ரயில்வே பாதைக்கு மேற்கத்திய பகுதியிலுள்ள ஸ்ரீநிவாச சத்திரத்தில் கட்டணம் கட்டித் தங்குவதற்கான வசதியாக இடங்கள் உள்ளன. ரயில்வே பாதைக்குக் கிழக்குப் பகுதியிலுள்ள ஸ்ரீ கோவிந்தராஜ சுவாமி சத்திரத்தில் இலவசத் தங்குமிடங்கள் உள்ளன. யார் முதலில் வந்து பதிவு செய்கிறார்களோ அந்த வரிசை முறைப்படி இலவசத் தங்குமிடங்களில் இடங்கள் ஒதுக்கப்படும். கட்டண வசதி தங்குமிடங்களில் முன்பே தகவல் தெரிவித்துப் பதிவு செய்து கொண்டு விடுமாறு யாத்திரிகர்களைக் கோருகிறோம். கட்டணம் செலுத்தி தங்குவதற்கு இருவகை அமைப்பு உள்ளன. பெரிய குடும்பம் தங்கும் வசதிக்காக Rs. 12/- கட்டணத்தில் இட வசதி உண்டு, ஆனால் இங்கே சமையல் செய்யும் வசதி இல்லை. பெரிய குடும்பம் தங்கும் வசதி படைத்த இடத்தில் Rs. 15/- கட்டணம் செலுத்தி, சமையல் செய்யும் வசதியும் அங்கே பெறலாம்.

கோத்ரெஜ் பெட்டக வசதியும் சமையல் பாத்திரங்களும் டெபாஸிட் கட்டணம் கட்டிப் பெறலாம். யாத்திரிகர்களின் மூட்டை முடிச்சுகளைப் பத்திரமாகப் பாதுகாக்க சாமான் பாதுகாப்பு அறை வசதிகளும் உண்டு.

இதைப் போலவே திருமலையிலும் இலவசமாகவும் மற்றும் கட்டணம் செலுத்தித் தங்கும் இடங்களும் உள்ளன. திருமலையில் அறைக்குடில் வசதி கட்டணம் Rs. 5/- லிருந்து Rs. 10/- வரை உள்ளன. யாத்திரிகர்கள் திருமலை திருப்பதி தேவஸ்தான வரவேற்பு அதிகாரிக்கு Rs. 20/- மணியார்டர் அனுப்பிப் பதிவு செய்து கொள்ளலாம். தங்கும் இடவசதி நிலவரத்துக்கேற்பத் தரப்படும். யாத்திரிகருக்கும் இடவசதி கிடைத்ததற்கான பதிவு கார்டும் அனுப்பி வைக்கப்படும் இந்தக் குடிலை விட்டுக் காலி செய்யும்போது மிதமுள்ள பணம் திருப்பித் தரப்படும். இடவசதி ஒரே ஒரு நாளைக்கு மட்டுமே பதிவு செய்து கொள்ள அனுமதிக்கப்படும். நீண்ட நாள் தங்குவதற்குக்குப் பொதுவாக அனுமதி அளிப்பதில்லை.

எக்ஸிக்யூடிவ் ஆபீசர்
திருமலை திருப்பதி தேவஸ்தானம், திருப்பதி

குட்டையைப் பிரபுவின் கையிலேயே வைத்தாள். ''நீயே துடைத்துக்கொள்!''

''நாகரிகம் தெரியாத ஜென்மம்.''

''துளியூண்டு பேப்பர் அதுக்குப் போய் இந்த வார்த்தையைப் பிரயோகிக்கணுமா?''

''உன்னைச் சொல்லலே....''

''அடேடே, நீ ஏன் கம்மா அவனையே பார்க்கறே?''

''நான் எங்கே பார்க்கறேன். அவன் இல்லே, பார்க்கிறான்?''

''அதெப்படி உனக்குத் தெரியுமாம்?''

திணறிப் போனாள்.

''ஆமாம் பெண்ணே.'' அந்த ஆள் சொன்னான். ''பெண்ணின் அடக்கமே கண்ணைல் தான் இருக்க வேண்டும். இல்லாவிட்டால் காலிகளுக்கு கொண்டாட்டமாகி விடும்.''

''வெல் ஸெட் பெரியவரே'' என்றான் பிரபு எல்லாம் மறந்தவனாக. ''அதென்ன இட்லியா?''

வெடுக்கென்று கிள்ளினாள் ரதி.

பெங்களூர் கண்டோன்மெண்ட் வரும் வரை ரதி நரகத்திலிருந்தாள்.

அவள் பார்க்கும் போதெல்லாம் அந்த ஆள் கையிலிருந்த ஹெரால்ட் ராபின்சன்புத்தகத்தின் அட்டையில் அந்தரங்கப் பிரதேசங்களைப் பற்றி அதிகம் கவலைப்படாத பெண்ணின் படத்தை வருடிக் கொண்டிருந்தான்–பிரித்துப் படிக்காமல் – சிரிப்புடன்.

அதைக் கவனிக்காமல் வளவளவென்று பேசும் பிரபுவை மனசுக்குள் சபித்தாள். அவனிடம் சொல்லவும் பயம். 'நீ ஏன் அவனையே பார்க்கிறாய்?' என்பானே பச்சையாய்.

''கண்டோன்மெண்ட் வந்தாச்சு'' என்று பிரபு சொன்னதும் அந்த ஆளிடம் பரபரப்பு தோன்றியது. ''அதுக்குள்ளேயா வந்து விட்டது?'' என்று எழ முயன்றான்.

வண்டி நின்றதும்....

முன்னால் பெட்டியுடன் நடந்த பிரபுவைப் பின்தொடர ரதி முயல...

அந்த ஆளும் சட்டென்று எழுந்து தள்ளிக் கொள்ள விரிட்டு அலறி உதறினாள் ரதி.

''யூ ராஸ்கல்'' என்று ஓங்கிய கை அவன் கன்னத்தில் ஒய்ந்தது. அடுத்த விநாடி அவள் கண்கள் திடுக்கிட்டு நிலைகுத்தி நின்றன.

விஷயம் புரிந்து அவன் மேல் பாய முயன்ற பிரபுவைத் தடுத்து நிறுத்தினாள்.

கீழே விழுந்துவிட்ட மூக்குக் கண்ணாடிக்காகத் துழாவிக் கொண்டிருந்தான் அந்த ஆள்.

உள்ளே ஏறி வந்த ஒரு பையன் ''அங்கிள். கண்ணாடியையா தேடறீங்க? இதோ இங்கே இருக்கு.'' எடுத்துத் தந்தான். ''கண்ணு தெரியாத நிலையில் ஏன்தான் இப்படி தனியா மெட்ராஸுக்கும் பெங்களூருக்குமா அலைய றீங்களோ?''

''கண்ணு தெரியல்லேன்னு என்னப்பா?'' அவன் சிரிப்பு மாறாமல் சொன்னான். ''பிறர் பேசுகிறதை வைத்தே உணர்ச்சியைப் புரிந்து கொள்ள முடியும் என்னால்... பாபு, உனக்காக உன் மாமி ஏதோ புத்தகம் கொடுத்தாள். இங்கேதான் விழுந்திருக்கும். அதை எடு!''

காரணமின்றிக் கலங்கி நின்ற ரதியிடம் கிசுகிசுத்தான் பிரபு.

''போகலாமா?''

நெகிழ்ச்சியுடன் சிரித்தாள்.

''போகலாம்!''

எங்கள் காதல் கல்யாணம்

அப்பொழுது சாரதாச் சட்டம் அமுலில் இருந்த காலம். எனக்கு வயது 12. எனக்கும் எதிர்வீட்டுப் பையன் ராமுவுக்கும் காதல் அரும்பியது. அந்தக் காலத்தில் பீச்சுக்கோ அல்லது பார்க்குக்கோ போக முடியுமா?

எப்படியோ நாங்கள் சன்னல் வழியாகவே சைகை பாஷையில் பெற்றோரிடம் சொல்லிக் கல்யாணம் செய்து கொள்ளலாம் என்று ஏற்பாடு செய்தோம். ஆனால் எங்களுக்கு ஒரு பயம். 16 வயதுக்குள் கல்யாணம் செய்யக்கூடாது என்ற சட்டம் உள்ளதே என்று.

ஒருவழியாக எங்கள் கல்யாணம் காரைக்காலில் இனிது நடைபெற்றது. தாலி கட்டி முடிந்தது தான் தாமதம். எல்லோரும் ஆளுக்கொரு மூலையாக ஓடிச் சென்று மறைந்து கொண்டார்கள். நாங்கள் இருவர் தான் அங்கு இருக்கிறோம். எனக்கோ ரொம்ப பயமாகப் போய் விட்டது. அந்த பயத்திலேயே




நான் அழ ஆரம்பித்து விட்டேன். என் கணவர் நிமிரென்று என் கையைப் பிடித்துக் கொண்டு ஓடி அங்கு பக்கத்தில் இருந்த அறையில் பரண் மீது என்னை ஏற்றிவிட்டுத் தாமும் ஏறிக் கொண்டு விட்டார். நாங்கள் ஒருவர் அவரைப் பின் மற்றவர் மறந்து இருந்தோம், கீழே என்ன நடக்கிறது என்று தெரியாமல்.

சிறிது நேரம் கழித்துக் கீழே இறங்கி வந்து பார்த்தால் சாஸ்திரிகளைச் சுற்றி ஒரே கும்பல். என்னவென்று கேட்டால் இரண்டு அதிகாரிகள் வந்து எல்லோரையும் தேட இரட்டைநாடியான சாஸ்திரிகள் எங்கும் மறைந்து கொள்ள முடியாமல் மாட்டிக் கொள்ள அவர் கையில் ஊசியைக் குத்திவிட்டுப் போய் விட்டார்களாம். என்னடா வென்று கேட்டால் அந்தப் பகுதியில் காலரா பரவுவதால் தடுப்பு ஊசி போட்டு இருக்கிறார்கள் என்று தெரிய வந்தது. நாங்கள் எல்லோரும் சாரதா சட்டத்தினால் தான் அதிகாரிகள் கைது செய்ய வந்திருக்கிறார்கள் என்று எண்ணி ஒளிந்து கொண்டு இருந்தோம்.


எங்கள் காதல் கல்யாணத்தில் நடந்த இந்தச் சம்பவத்தை இப்போது நினைத்துப் பார்த்தால் கூட சிரித்துச் சிரித்து வயிறு வலி வந்து விடுகிறது.

-நி. மைதிலி


காதலாவது கத்தரிக்காயாவதுன்னு நானே சொல்றாங்க... காதலாவது பூசணியாவது, காதலாவது பரங்கியாவது, காதலாவது காலிஃப்ளவராவதுன்னு சொல்றாங்களா?... அப்படின்னு இந்தக் கத்தரிக்காய்க்கு திமிர்!
உன் பாட்டி 'லவ் மாரேஜ்' பண்ணிக்கிட்டாங்க!.. நான் உங்கப்பாவை 'லவ் மாரேஜ்' பண்ணிக்கிட்டேன்! இந்தப் பரம்பரை பழக்கத்தை மாத்தி ஜாதகம் பார்த்து கல்யாணம் பண்ணனும்னு சொல்றியே? உனக்கு நல்லாருக்குதா?
லவ் ஜோக்ஸ்
• உன் காதலுக்காக கடலில் விழுந்து சாகவும் தயார், கண்ணே!
• கடலில் விழுந்தா தானே உயிர் போகுது!.. அதிலென்ன இருக்கு? கடலில் விழுந்து நீச்சலடிச்சுக்காண்பியுங்க!
காதலிப்பது எப்படி?
சுத்த அசடு! புஸ்தகத்தைப் பிடுங்கி ஓடறதுக்கா பின்னாலேயே துரத்தி வந்தது?
காதலிப்பது எப்படி?
காதலன்
• உங்கப்பாவுக்குத் தெரியாம ரிஜிஸ்டர் மாரேஜ் பண்ணிக்குவோம்!
காதலி
• அது தான் முடியாது! எங்கப்பா தான் ரிஜிஸ்ட்ரார்!



• ஏண்டி, உன்னை லவ் பண்றவன் உன்னைக் கல்யாணம் பண்ணிக்காம ஏமாத்திட்டான்னு!
• ஏமாத்த மாட்டார்! நிச்சயமா சொல்லுவேன்! அவர் பெயரே கல்யாணராமனாச்சே!
காதலுக்காக உயிரையே விடறேன்னு அப்ப எங்கிட்ட சொன்னே நீங்க இப்ப ...
.. இப்ப தினமும் நீ என் உயிரை வாங்கிட்டுத் தானே இருக்கே!
காதல் பாதை கல்லும் முள்ளும் நிறைந்தது... அதுக்குத் தான் இவ்வளவு பெரிய ஹை ஹீல்ஸ்!
நீ சுத்த மோசம் ரமேஷ்! கல்யாணம் பண்ணிக்கத் தான் வரதட்சணை! நீ காதல் பண்றதுக்கே வரதட்சணை கேக்கறியே!
பண்டாரம் சார்! கிண்டல் பண்றதா நினைக்கக் கூடாது... நீங்க யாரையாவது காதலிச்சதுண்டா?
என்னைப் பார்த்து நீங்க இப்படி ஒரு கேள்வியைக் கேட்டிருக்கக் கூடாது! நான் பண்டாரம் ஆனதுக்கே காரணம் காதல் தானே!



காலம்	வட்டி விகிதம்	விவரங்கள்
5 வருடங்கள்	வருடம் 10 சதவிகிதம்	* வட்டி ஆண்டுதோறும் பட்டுவாடா செய்யப்படும்.
3 வருடங்கள்	வருடம் 8 சதவிகிதம்	* உங்களின் தபாலாபீஸ் சேமிப்புக் கணக்குக்கு வட்டியை தபாலாபீஸே மாற்றிவிடும்.
2 வருடங்கள்	வருடம் 7½ சதவிகிதம்	* வட்டித் தொகை ரூ. 50ன் பெருக்கல் தொகையில் அதே டைம் டெபாஸிட்டில் தபாலாபீஸே மீண்டும் முதலீடு செய்துவிடும்.

இதர சலுகைகள்

எவ்வளவு வேண்டுமானாலும் முதலீடு செய்யலாம். ஆனால் ரூ. 50க்குக்குறையக் கூடாது. கிடைக்கும் வட்டி, வருடம் ரூ. 3000 வரை வருமான வரிச்சலுகை பெறுகிறது. காலாவதிக்குமுன் அதாவது கணக்கு ஆரம்பித்த ஒரு வருடத்துக்குப் பின் கணக்கை நிறுத்தி விடவும் அனுமதிக்கப்படும். அப்படி செய்யும்போது கணக்குக்கு கொடுக்கப்பட்டு வந்த வட்டி விகிதத்தில் 2 சதவிகிதம் குறைத்து வட்டிக் கணக்கிடப்படும்.

விவரங்களுக்கு கீழ்க்கண்டவர்களை அணுகவும் :

★ அருகிலுள்ள போஸ்டாபீஸ், அல்லது
★ அங்கீகரிக்கப்பட்ட ஏஜெண்ட், அல்லது
★ மாவட்ட சேமிப்பு அதிகாரி, அல்லது
★ சம்மந்தப்பட்ட மாநில ரீஜினல் டைரக்டர் (தேசிய சேமிப்பு)

தேசிய சேமிப்பு நிறுவனம்

த. பெ. எண். 96, நாக்பூர்-440001

DAVP — 79/92



நிறம் மாறாத பூக்கள்

'ராஜா'க்களின் மற்றுமொரு 'வார்ப்பு'த்தான் இந்தப் பூக்கள்.

பட்டதாரியான சுதாகரின் ஏழைமையையும், பகட்டும் படாடோபமுமான ராதிகாவின் பணக்காரத் தனத்தையும் மோதவிட்டு இந்தப் பூக்களை மலர வைத்திருக்கிறார் பாரதிராஜா. பட்டதாரி இளைஞனின் ஏழைமை நிலையை இதயத்தைத் தொடும் வகையில் அமைத்திருக்கும் அதே சமயத்தில், தம்மால் ஒரு நல்ல நகைச்சுவைப் படத்தையும் உருவாக்கித் தர முடியும் என்று இந்தப் பூக்கள் மூலம் நிரூபிக்கப் போகிறாராக்கும் என்ற எண்ணத்தைப் படத்தின் ஆரம்பக் காட்சிகள் ஏற்படுத்த; நம்மை ஏமாற்றி விட்டு வழக்கமான தமது முந்தையப் படங்களின் பாணியிலேயே முடிக்கிறார் கதையை.

ஐம்பது காசு எத்தனை மதிப்புடையது சுதாகருக்கு என்பதைச் சித்திரித்துள்ள விதம் சிறப்பு. அந்த ஐம்பது காசே அவருக்கு ராதிகாவின் காதலையும் அல்லவா சம்பாதித்துக் கொடுக்கிறது. இளம் உள்ளங்களில் காதல் அரும்புவதற்கு எந்த ஒரு சிறு சம்பவமுமே காரணமாகலாம் என்பதை சுதாகரின் டைரியைப் படித்து விட்டு ராதிகா அவன் மீது மையல் கொள்ளுவதை ரசனையோடு செய்திருக்கிறார் ராஜா. 'வேண்டுமானால் என்னுடைய பழைய டைரிகளையும் கொண்டு வந்து தருகிறேன் படிப்பதற்கு' என்று சுதாகர் ராதிகாவிடம் கூறும்போது கொட்டகை கலகலக்கிறது. திடீர் அதிர்ஷ்டம் வந்த தின் விளைவை மானேஜர் நாற்காலியில் அமர்ந்த படி சுதாகர் ரசிக்கும்படி செய்திருக்கிறார்.

சிரிக்க மட்டுமே தெரியும் என்ற எண்ணத்தை மாற்றித் தமக்கு நடிக்கவும் தெரியும் என்பதை நிரூபித்திருக்கிறார் ராதிகா. சுதாகர்மீது தான் கொண்டுள்ள காதலை உறுதிப்படுத்த சாப்பாட்டு மேஜை முன்னே அமர்ந்து 'நீங்க சாப்பிடுங்கப்பா' என்று அடுத்தடுத்துக் கூறும் விதம் நயம். சுதாகரை மறக்க முடியாமல் விஜயனுடன் வாழ்வில் ஈடுபாடும் சாய்வும் ஏற்படும் கட்டங்களிலும் ராதிகா பாராட்டும் பெறும்படி நடித்திருக்கிறார்.

'மெட்ராஸ் கேர்ள்!' என்று கூப்பிட்டபடி கையில் மதுப்புட்டியுடனும் காதல் வேதனையுடனும் தோன்றும் விஜயனின் நடிப்பு பாத்திரத்துக்கு ஏற்றபடி சோபிக்கிறது. ரதியை விஜயன் சந்திக்கும் விதம், அவர்கள் காதல் வளர்ந்த முறை, விளையாட்டே வினையாகி ரதியை விஜயன் இழக்கும் பரிதாபம் புதுமையாகவும் உள்ளத்தைத் தொடும்படியாகவும் சித்திரிக் கப்பட்டிருக்கின்றன. ரதியின் ஜலசமாதி உருக்கமான காட்சி. 'நான் அவளைக் கற்பழித்து விட்டேன்' என்று விஜயன் கூறி அதற்கு விளக்கம் தருவது புதுமை. பாரதிராஜாவுக்கு 'சபாஷ்' கூற வைக்கிற இடம். இரண்டு மூன்று கட்டங்களில் படம் பார்ப்போரின் கணிப்புக்களை யெல்லாம் தவறாக்கி, தமக்கே உரித்தான பாணியில் எதிர்பாராத திருப்பத்தில் கதையை முடித்திருக்கும் உத்தி பாரதிராஜாவுக்கே உரித்தான ஒன்று.

இத்தனை இருந்தும் : அவரது முந்தையப் படங்களின் நிழல் : திருப்பு ஏதோ இதில் ஏற்படவில்லை. பிரிந்த காதலர்களை முடிவில் ஒன்று சேர்த்து ஓடச் செய்யும் இந்த உத்தியை இனி அவர்தம் அடுத்த படத்திலாவது மாற்றிக் கொள்ள வேண்டும்.

வீட்டுக்காரரின் வயது வந்த மனைவி, இளைஞன் சுதாகரின் மீது மையல் கொள்ளும் காட்சிகள் தேவையில்லாதவை. கதையோடு சேராத ஒன்று.

இளையராஜாவின் இசை பழைய படங்களின் மெட்டுக்களை நினைவுபடுத்துகிறது. இனி புதிய மெட்டுக்களை உருவாக்கினால்தான் ரசிக்கும். நிவாஸின் காமிரா தனக்கிலும், பார்த்ததையே பார்க்கிறோமோ என்ற நினைப்புக்கு இடமிருக்கிறது. ஆனால் குறை கூற முடியாது.

ஒருசெடியின் பூக்கள் எங்கு பூத்தாலும் எவ்வளவு தடவை பூத்தாலும் அதன் நிறம் மாறுவதில்லை. அதேபோலக் காதலின் தன்மையும் மாறுவதில்லை. இதுவே படத்தின் தத்துவம். இப்படி நிறம் மாறாத பூக்களினால் பாரதிராஜாவின் தரமும் உயரவில்லை.

கௌசிகன்

இவ்விதழ் அட்டையில் இப்படத்தின் சுதாகர் ராதிகா காதல் ஜோடியைத்தான் காண்கிறீர்கள்.

TEXTILES, SUGAR,
INDUSTRIAL CHEMICALS,
ALCOHOLIC BEVERAGES,
VANASPATI, PVC, RAYON TYRE CORD,
FERTILIZERS,
ELECTRONIC CALCULATORS,
IRON CASTINGS.

IN THE SERVICE OF THE NATION



DCM THE DELHI CLOTH AND GENERAL MILLS CO. LTD., DELHI

வட்டமேஜை

ஜேம்ஸ்பாண்ட் அருணுக்கு அன்பு!



● அட்டையில் புன்னகைச் சிரிப்புடன் ஜேம்ஸ் பாண்ட் பாணியில் இருக்கும் அருணின் படம் என்னை மிகவும் கவர்ந்தது. வண்ணத்தில் தந்த உங்களை மனம் திறந்து பாராட்டுகிறேன்.
கீழ்மதுரை—7 திருமதி பாலகிருஷ்ணன்

● கார்ட்டூன் — ராஜ்நாராயணனின் தாடியை அனைவரும் தூக்கிச் செல்வது... எப்படிச் சொல்வேன்? விழுந்து விழுந்து சிரிக்க வைத்தது. தலையங்கம் நக்கீரத்தனமானது.
காஞ்சிபுரம் நாராயணன்

● ஜனாதிபதி ஏதோ ஹரிச்சந்திரனின் மறு வாரிசு போல் சில பொறுப்பு வாய்ந்த பத்திரிகைகள் கூட சித்திரித்திருந்தது வேதனை அளித்தது. இச் சூழ்நிலையில் உள்ளதை உள்ளபடி விமர்சித்துக் கல்கியில் எழுதப்பட்ட தலையங்கம் மிகவும் பாராட்டப்பட வேண்டிய ஒன்று.
சென்னை—8 டி. பி. சாம்பமூர்த்தி

● பாராளுமன்ற தலைமைப் பதவியைவிட்டு மொரார்ஜி முன்பே விலகியிருந்தாலோ ஹரிஜன வாழ்வே தன் வாழ்வு எனக் கூறும் அன்னை இந்திரா 82 தேர்தல் வரையில் தன் முழு ஆதரவு ஜெகஜீவன் ராமுக்கே எனப் பெருந்தன்மையாக இருந்திருந்தாலோ நாடு வயம் சிரிக்கும் நாடகம் நடந்திருக்குமா?
திருவெண்காடு நா. நாகராஜன்.

● ஒரு மாதம் நடந்த நாடகத்திலேயே மக்கள் அரசியல்வாதியைப் பற்றி முழுக்கத் தெரிந்து கொண்டு விட்டார்கள். மதுரையில் கோப்புகள் குவிந்து விட்டன எனவும் 'இந்து'வில் படித்தோம். இன்னும் நீடித்து இருந்தால் செய்திப் பத்திரிகைகளுக்கும் அரசியல்வாதிகளுக்கும்தான் கொண்டாட்டமே தவிர, மக்களுக்கு அல்ல.

தொடர்ந்து அசிங்கங்கள் நடக்காமல் இருக்க வேண்டி, நாடாளுமன்றம் கலைக்கப் பட்டது சரி. ஆனால் நாடாளுமன்றத்தையே சந்திக்காமல் ராஜிநாமா செய்த சரண்சிங் மந்திரி சபையை வைத்திருப்பது அதர்மம்.
சென்னை—30 வி. ரங்கராஜன்

● கடலை எண்ணெய் விலை ஏறி விட்டது. ஏதாவது இரண்டு வாரப் பத்திரிகைகளை நிறுத்த வேண்டும் என்றும் எதை வாங்க வேண்டாம் என்று மறைமுகமாக ஓட்டுச் சீட்டுப் போட்டதில் சொல்லி வைத்தாற் போல ஏழு நபர்களும் கல்கியை மட்டும் நிறுத்தக்கூடாது என்று எழுதியிருந்தார்கள். காரணம்:

பூக்குழி, வைரங்கள், கடல்ராணி — இந்தத் தொடர்கதைகள் வாரத்துக்கு வாரம் விறுவிறுப்பாக இருப்பதுதான்.
வெளிநெல்லூர் கிராமம்
எம். சு. சுந்தராச்சாரியார்

● ''வட்ட மேஜை'' பகுதியில் வெ. ஹேமலதாவின் கடிதத்தைப் பிரசுரித்ததற்கு நன்றி. அது பல வாசகர்களின் எண்ணத்தைப் பிரதிபலிப்பதாக இருக்கிறது. அதைப் படித்ததும் 1939 லயோலா கல்லூரித் தமிழ்ச் சங்கத்தில் பேசிய திரு டி.கே.சி. அவர்கள் விமர்சனக் கலையைப் பற்றிக் குறிப்பிடும்பொழுது of all the cants that are canted in this canting world, although the cant ot hypocricy is the worst the cant of criticism is the most tormenting. என்று ஆங்கிலத்தில் சொன்னது நினைவுக்கு வந்தது.
சென்னை—28 அ. வெ. கிருஷ்ணமூர்த்தி

● 'கமலா நடராஜன்', 'நீ பாதி நான் பாதி' என்ற கதையை எழுதியுள்ளார். இதைப் படித்துப் பார்த்து விட்டுச் சிரித்த சிரிப்பு இருக்கிறதே! இன்னும் சிரிப்பு நிற்கவில்லை. பாதிதான் சிரித்து முடித்திருக்கிறேன்!
மதுரை சக்திநாயகர்

● ஒவ்வோர் ஆண்டும் கல்லூரிகள் திறக்கப்பட்ட ஓரிரு மாதங்களுக்குள், கல்லூரிப் பேரவைக்கான தேர்தல்கள் நடைபெறுகின்றன. குடும்பத்தினர் பிள்ளைகளைப் படிக்க வைக்கவே திணறும்போது இத் தேர்தலுக்குப் பணம் எங்கிருந்து வருகிறது? அரசுதான் ஆகட்டும், அல்லது கல்லூரி நிர்வாகங்கள்தான் ஆகட்டும், இந்தத் தேர்தல்களுக்கான சில வரைமுறைகளை வகுக்கவேண்டாமா?

பிரசாரம் சூடுபிடித்து, சிலசமயம் அரிவாள், கத்தி, சைக்கிள் செயின் இவற்றால் அடித்துக் கொண்டு ஆஸ்பத்திரியில் உயிருக்கு மன்றாடுவதை நினைக்கும்போது இத்தகைய தேர்தல்கள் அவசியம்தானா என்று கூடத் தோன்றுகிறது. நல்ல வழி காட்ட வேண்டிய அரசியல்வாதிகள் இளம் குருத்துக்களை நாசம் செய்யலாமா?
தஞ்சை-7 வெ. கோபாலன்

காதல் தாழ்ந்தால் காமம்; உயர்ந்தால் பக்தி



அவள் திருவரங்கத்து அண்ணல் மீது அளவு கடந்த காதல் கொண்டாள். அதன் விளைவு அரங்கன் பிரிவால் பெருந் துயரில் உழல்கிறாள்.

பொதுவாக, துயரத்தில் மூழ்கி விருப்பவர்களுக்கு ஆறுதல் அளிப்பது உறக்கம். அரங்கன் மீது காதல் கொண்ட இவளோ,

கங்குலும் பகலும் கண் துயில் அறியாள்.

கண்களுக்குத் தூக்கம்தான் வரவில்லையே சும்மாவாகிலும் இருக்கின்றனவா? அதுதான் இல்லை. கண்கள் கண்ணீரைப்பொழிந்த வண்ணமிருக்கின்றன. திடீரென்று அரங்கன் வந்தால், அவனைச் சரியாகக் காண முடியாமல் கண்ணீர் திரையிட்டு மறைத்து விட்டால் என்ன செய்வது என்று வருகின்ற கண்ணீரை யெல்லாம் இரு கைகளாலும் வாரி வாரி இறைக்கிறாள்.

கண்ணநீர் கைகளால் இறைக்கும்.

இந்தக் கண்ணீருக்கு இரங்கி, கைகளில் சங்கையும் சக்கரத்தையும் ஏந்தி வந்து தன்னை ஆட்கொள்வான் என்று சொல்ல நினைக்கிறாள். வாயோ 'சங்கு சக்கரம்' 'சங்கு சக்கரம்' என்ற இரண்டு வார்த்தைகளுக்கு மேல் சொல்ல முடியாமல் உணர்ச்சி மேலிட்டுத் தவித்து, கைகளைக் கூப்பி வணங்குகிறாள்.

சங்கு சக்கரங்கள் என்று கைகூப்பும்

ஆகா! அவன் கண்கள்! அவன் அருட் பார்வை, தாமரை இதழ்களின் அழகையும் குளிர்ச்சியையும் பெற்றவை அல்லவா என்று நினைத்த மாத்திரத்தில் உடல் சோர்கிறாள்.

தாமரைக் கண்ணன் என்றே தளரும்

இப்படி உடல் தளர்கின்ற நிலையில் உயிரும் பிரிவது போல் உணர்கிறாள். காரணம் பிரிவு தான். அவனைப் பிரிந்து எப்படி உயிர் வாழ முடியும் என்கிறாள்.

எங்ஙனே தரிக்கேன் உன்னை விட்டு?

இப்படிச் சொன்னவள் பூமியைத் துழாவித் துழாவி ஒன்றும் செய்ய மாட்டாது துடிக்கிறாள்.

கங்குலும் பகலும் கண்துயிலறியாள்
கண்ணநீர் கைகளால் இறைக்கும்
சங்கு சக்கரங்கள் என்று கைகூப்பும்
தாமரைக் கண்ணன் என்றே தளரும்
'எங்ஙனே தரிக்கேன் உன்னை விட்டு'
என்னும், இருநிலம் கைதுழா விருக்கும்
செங்கயல் பாய்நீர் திருவரங்கத்தாய்
இவள் திறத்து என்செய்கின்றாயே!

தண்ணீரை விட்டுப் பிரிந்த மீன் துடி துடித்து இறந்து போகும். இப்படிச் செங்கயல் மீன்கள் பாய்ந்து விளையாடும் இரு ஆறுகளின் இடையே படுத்திருக்கும் திருவரங்கப் பெருமானே, இந்தப் பெண்ணின் துயர் தீர்க்க என்ன செய்வதாகக் கருதியிருக்கிறாய்?

நம்மாழ்வாரின் அற்புதமான பாடல்.

உலகில் காதல் உணர்ச்சி இல்லாத பொருளில்லை. மரம் செடி கொடி, மிருகம், மனிதன் என்று பாகுபாடின்றி எல்லாப் பொருட்களிலும் இந்த உணர்ச்சி இருக்கிறது. ஆனால் எல்லா உயிர்களிலும் ஐயறிவுபடைத்த இறைவன் மனிதனிடம் மட்டும் ஆறறிவைப் படைத்தான். ஐயறிவு படைத்த மாக்கள் எல்லாம் விஷயானுபவத்தில் காம உணர்ச்சியில் மூழ்கி மடிகின்றன. ஆறறிவு படைத்த மனிதன் தனது பகுத்தறிவுத் திறனால் காணும் பொருட்களுக்கெல்லாம் கடந்ததோர் சக்தியொன்று — கடவுள் — இருப்பதை உணர்கிறான். அச்சக்தி தன்னுள்ளும் இருப்பதை உணர்கிறான். தன்னுள்ளிருப்பதை ஆத்மா என்றும், எங்கும் நிறைந்துள்ளதைப்பரமாத்மா என்றும் உணர்கிறான். ஆத்மாவின் இயல்பு பரமாத்மாவுடன் இணையப் பார்ப்பதே! அதை நடக்க விடாமல் மனித உள்ளத்தில் உள்ள காதல், காமமாக மாறி, விஷய சுகத்தில் ஆழ்த்தி வெறும் வேடிக்கை மனிதனாக வாழ்ந்து மடிகிறான். காதலை பக்தியாக உயர்த்தி வாழ்ந்த மகான்களே நாயன்மார்கள், ஆழ்வார்கள், ஏகநாதர், ராமகிருஷ்ணர்.

காதலைப் பக்தியாக மாற்றவே, நாயக— நாயகி பாவத்தில் அற்புதமான பாசுரங்களை யாத்து நம்மை உய்விக்க வழிகாட்டியிருக்கிறார்கள்.


எஸ்.வி.எஸ்

Printed by V. Murali and published by V. Vaidyanathan on behalf of Messrs Bharathan Publications Private Ltd., at the Bharathan Press, Guindy, Madras - 600 032. Editor: K. Rajendran

எல்லா தேர்வுகளிலும் தேர்ச்சி பெற்றது!

ஃபோர்ட் 3600

- இணையில்லா செயல் திறன்
- இணையில்லா நம்பிக்கை
- இணையில்லா சிக்கனம்



எஸ்கார்ட்ஸ் லிமிடெட்
ஃபார்ம் எக்விப்மெண்ட் டிவிஷன்,
18/4 மதுரா ரோடு, ஃபரீதாபாத்

EL-5140 TAM A

REGISTERED No. M. 4392
Registered as a Newspaper in Sri Lanka
இலங்கையில் விலை 75 சதம் (தபால் செலவு தனி)
மலேசியாவில் விலை (விமானப்பதிப்பு) 60 மலேசியக் காசு

